தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்பு.

(அ) திரு. ஜெ.பி.யின் உடல் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறானத் தகவல் தரப் பட்டதற்கு வருந்துகிறோம்; சரியானத் தகவல் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

(2) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்துவது குறித்து.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்-விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட கிராம மற்றும் சிறு தொழில்கள் மீது மதிப்பீட்டுக்குழு தன்னுடைய 7-வது அறிக்கையை அவைக்கு அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(4) ஒழுங்குப் பிரச்சினை.

திரு ஜே.பி-யின் உடல் நிலை குறித்து

திரு மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இறந்துவிட்டார் என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, இங்கும் அறிவிக்கப்பட்டது என்பது ஒரு மிகப்பெரிய தலைவரைப்பற்றிய அறிவிப்பை முறையாகத் தெரிந்து அறிவிக்கக்கூட முடியாமல் இந்த நாட்டில் மத்திய அரசு நிர்வாகம் இருக்கிறது. அதைப் பற்றி தாங்கள் விளக்க வேண்டும். மத்திய அரசின் அறிவிப்பை நம்பி, நாமும் அறிவித்து நம்முடைய சட்டமன்றத்திற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிட்டதாகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய அரசுபற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களைக் கேட்க முடியாது. நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். தவறானத் தகவல்களுக்கு வருந்துகிறோம். சரியானதாகத் தகவல் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*)யிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(5) வரவு-செலவுத் திட்டம், 1979-80 (பொது விவாதம்)—தொடர்ச்சி.

*திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நேற்றைக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பிரசவ வேதனையோடு அல்லலுற்றுக் கொண்டிருந்தார்கள். சுகப் பிரசவம் இன்று நடைபெற எல்லாம் வல்ல இயற்கையை நான் வேண்டுகிறேன். அந்த சுகப் பிரசவத்தில் நானும், மற்றுமுள்ள எதிர்க்கட்சி தலைவர்களும் எடுத்து வைத்த வரி விலக்குக் கோரிக்கைகள் எல்லாம் உதயமாகும் என்றும் நான் நம்புகிறேன். நேற்றைய தினம்..............

திரு செ. சிவசாமி: சார் பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, சுகப் பிரசவம் என்று சொன்னார்கள். என்ன குழந்தை என்பதை அறிவிப்பார்களா?

திரு மு. கருணாநிதி: வரி இல்லாத குழந்தை என்பதைக் குறிப்பிடுகிறேன்.

நேற்று மிக வேகமான நிலையில் மன்றத்தினுடைய விவாதங்கள் போய்க்கொண்டிருந்த போது பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களால் ஒரு சோகமான செய்தி இங்கு அறிவிக்கப்பட்டு, அனைவரும் ஒருவருக்கொருவர் பேசுவதற்குக்

கூட இயலாத ஒரு சூழலில் இந்த மன்றத்தில் இருந்து வெளியிலே சென்றோம். சென்ற சில நிமிட நேரங்களுக்கெல்லாம் இந்திய நாட்டினுடைய ஜனநாயகப் பாதுகாவலராக விளங்குகிற, விளங்கிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் உயிருடன் இருக்கிறார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி நமக்கு எட்டியது. பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல அந்த மகிழ்சிகரமான செய்தி தொடர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. நாட்டு மக்களுடைய ஆசை; அந்த ஆசை நிறைவேற வேண்டுமென்று நாம் அனைவரும், நம்புவோமாக.

நேற்று என்னுடைய நிதிநிலை அறிக்கையின்மீதான உரையில் பெரியார் சிலை விவகாரம் ஓரளவு சூடு பிடித்தது. பெரியாருடைய சிலையை 1974 ஆம் ஆண்டு திராவிடக் கழகத்தினர் கோரிய இடத்தில் வைப்பதற்கு அன்றைக்கு காஞ்சிபுரம் நகராட்சிமன்றம் அனுமதி அளித்து, அதற்குரிய செலவினங்கள், பராமரிப்புச் செலவிற்கான பணம் இவைகள் எல்லாம் கட்டியதற்காக ரசீதையும் திராவிடக் கழக நண்பர்கள் காஞ்சிபுரத்திலே பெற்றிருக்கிறார்கள்.

அதன் பின்னர் நெருக்கடி கால ஆட்சியில்— இரண்டு மூன்று பேர் (சங்கராச்சாரியார் அல்ல) எல்லப்பன், கணபதி, ராமநாதன் ஆகிய மூன்று பேர் கொடுத்த ஒரு மனு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் பட்டது என்று கூறப்பட்டது. அப்போது மன்றம் இல்லை. நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு— தனி ஆணையரின் நிர்வாகத்தில் காஞ்சிபுரம் நகராட்சி இயங்கிய நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் 27—8—1976 ஆம் தேதி காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தீர்மானம் எண் 310 நகல் கெங்கைகொண்டான் மண்டபம் அருகில் நகரளவு எண் 1865-ல் தந்தை பெரியார் அவர்களின் உருவச்சிலை அமைக்க 30—9—1974ஆம் தேதிய தீர்மானம் எண் 459-ல் மன்றம் ஒப்புறுதி அளித்துள்ளது. இந்தச் சிலை அமைக்க ஆட்சேபணை செய்துள்ள திருவாளர்கள் சி.கே. எல்லப்பன், மு. கணபதி, என். இராமநாதன் ஆகியவர்களின் மனு மன்றத்தில் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 5—8—1976 தேதி எண் 2566-74 அனுப்பப்பட்டுள்ளது. ''ஆட்சேபணை இருப்பதால் முந்திய தீர்மானத்தின் பேரில் மேல் நடவடிக்கை தேவையில்லை.'' யு. சுப்பிரமணியன், தனி அதிகாரி—என்று போட்டு நெருக்கடி காலத்திலே நடைபெற்ற கொடுமைகளில் ஒன்றாக அத்துமீறிய நடவடிக்கைகளில் ஒன்றாக முதலில் அனுமதிக்கப்பட்டு, பெரியார் சிலை வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இடம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மறுபடியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்த பிறகு மீண்டும் காஞ்சி திராவிடர் கழகத்தினர் அதே மனுவைச் செய்து கொண்டார்கள். நான் நேற்று குறிப்பட்ட போது கூட ஏதோ சங்கராச்சாரியார் மடத்திற்கு எதிரே

அதை வைக்கவேண்டும் என்கிற தோரணையில் எடுத்துக் கொண்டதாக நான் கருதுகிறேன். அதனுடைய வரை படங்களை எல்லாம் உடனடியாக காஞ்சிபுரத்திலிருந்து கொண்டுவரச் சொல்லி நான் பார்த்தேன்.

கிட்டத்தட்ட இரண்டும் இரண்டு வெவ்வேறான தெருக்கள்; சங்கரச்சாரியாரின் மடம் ராசாத்தெரு முனையில் இருக்கிறது. பெரியாருடைய சிலை வைக்கக் கோருகின்ற இடம் தேர் வீதியும், செங்கழுநீர் சாலை என்று சொல்லப்படுகின்ற தெருவும் சந்திக்கும் இடம். அந்தச் சாலையில் மத்திய பாகத்திலே கூட அந்தச் சிலையை வைக்கவேண்டும் என்று கோரவில்லை. இரண்டு வீதிகளும் சந்திக்கின்ற ஒரு மூலையில் வைக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. நல்ல திறமையான எஞ்சினீயர்களான வருவாய்த்துறை அமைச்சரவர்களும் மின்சாரத் துறை அமைச்சரவர்களும் அந்த வரை படத்தைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் சிகப்பு குறியிட்ட இடம் பெரியாருடைய சிலை வைக்க கேட்கப்பட்ட இடம்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நேற்று இந்த விவாதம் நடந்தபோது நான் கவனித்த வரையில் எனக்கு நினைவில் இருப்பது, அது சங்கராச்சாரியார் அவர்களுடைய மடத்திற்கு அருகில் இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோதுதான் அந்த வாசகம் வந்ததாக எனக்கு நினைவு.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நிச்சயமாக இல்லை. மதத் தகராறு ஏற்படும் அதனால் என்று முதலமைச்சர்தான் சொன்னார். இதிலே பச்சை கோடிட்ட இடம்தான் சங்கராச்சாரியாருடைய மடம் இருக்கின்ற இடம். சிகப்பு வட்டமிட்ட இடம்தான் பெரியார் அவர்களுடைய சிலை வேக்கவேண்டும் என்று கோரப்பட்ட இடம்.

ஆட்சேபணை சங்கராச்சாரியாரால் கூட அல்ல. வேறு யாரோ இரண்டு மூன்று பேரால் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவல் எனக்கு எப்படித் தெரியுமென்றால், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு—நம்முடைய என்று சொல்ல நான் தயாராக இல்லை—உங்களுடைய ஆஸ்தான கவிஞர் ஒரு கூட்டத்தில் பேசிய நேரத்தில் குறிப்பிட்டார். ''காஞ்சிபுரத்தில் சிலை வைக்க திராவிடர் கழகத்தார் அனுமதி கேட்டார்கள். நான் எம்.ஜி.ஆர். அவர்களிடம் சொல்லி அதைத் தடுத்து விட்டேன்'' என்று அர்த்தமுள்ள இந்து மதம் எழுதிய ஆஸ்தான கவிஞர் அந்தச் செய்தியை வெளியிட்ட பிறகுதான் எனக்கே தெரியும். எனவே அதுபற்றி பிரச்சினை எழுப்பினேன். சங்கராச்சாரியார் கூட [illegible]

சிலை வைப்பதை வேண்டாமென்று சொல்லமாட்டார். கழக ஆட்சிக் காலத்தில் கூட நான் முதலமைச்சராக இருந்தபோது பெரியார் அவர்களின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. அப்பொது அந்தச் சிலையின் பீடத்திலே எழுதப்படுகின்ற எழுத்துக்கள் சிலருக்கு ஆட்சேபகரமாக இருப்பதால், மீண்டும் அந்தச் சிலைகள் வைக்கப்படுகிற நேரத்தில் அப்படிப்பட்ட எழுத்துக்களை எழுத வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, திராவிடர் கழகத்தினரும் கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு அவர்கள அப்படிப்பட்ட எழுத்துக்களை—கடவுள் இல்லை என்பது போன்ற எழுத்துக்களை அதிலே எழுதாமல், பெரியாரின் வேறு பொன்மொழிகள் எழுதப்பட்டு சிலைகள் திறந்து வைக்கப் பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9–10]

எனவே, விளக்கத்திற்காக இதை சொல்லுகிறேனே அல்லாமல், சங்கராச்சாரியார் மடத்திற்கு நேராகத்தான் வைக்கவேண்டும் என்பதற்காக அல்ல, சிலை வைக்க வேண்டும் என்ற இடத்திற்கும் மடம் இருக்கும் இடத்திற்கும் இடையே 120 அடி, 150 அடி வித்தியாசம் இருக்கிறது என்பதை விளக்கத்திற்காக இதைக் கூறு கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினைகள் பற்றி நேற்றைய தினம் நான் பேசும்போது, அவர்களுடைய பல்வேறு—கொள் முதல் விலை போன்ற தொல்லைகளை எல்லாம் எடுத்துக்காட்டி னேன். மின்துண்டிப்புக் காரணமாக ஏற்ட்டுள்ள கிளர்ச்சி, ஏற்கனவே போடப்பட்ட வரிகளை வஜா செய்ய வேண்டும் என்ற அளவில் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், கொஞ்சம் வசதி படைத்த விவசாயிகள், போன்ற பாகுபாட்டின்பேரில் உதவி, கடன் வசதிகளை அவர்களுக்கு தருவதிலும், ஏற்கனவே உள்ள கட்டணங்களை ரத்து செய்வதிலும், வட்டிகளை அறவே குறைப்பதிலும் இந்த அரசு முன்வரவேண்டும். என்கிற பிரச்னை களை வைத்து விவசாயிகள் இன்றைக்கு போராடிக் கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக சேலத்திலிருந்து கிடைத்திருக்கின்ற செய்தி அங்கே பாலசுப்பிரமணியம் அவர்கள், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர் அல்ல. குறிப்பாக வ்வசாயப் போராட் டங்களை நடத்துகின்ற எந்த தலைவர்களும் திராவட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆனால், எந்த போராட்டத்தை யார் நடத்தினாலும், அதை திராவட முன்னேற்றக் கழகம் தான் தூண்டிவிடுகிறது என்கிற குற்றச் சாட்டுக்கு ஆளாகிறோம் அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை. ஆக நண்பர் பால சுப்பிரமணியம் அவர்கள் கடந்த ஆறு, ஏழு நாட்களாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன்பாக உண் ணாவிரதம் இருந்து வருகிறார். அவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என்று செய்திகள் வருகின்றன அரசு இதைப்பற்றி மௌனமாக இருப்பது முறைதானா என்று கேட்டுக் கொள்ள நான் கடைமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முறைகேடுகளை சொன்னால், குற்றச்சாட்டுகளை சொன்னால், நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் ட, இவைகள் நிரூபிக்கப்பட்டால் நான் ராஜிநாமா செய்ய தயாராக இருக்கிறேன் என்று அறைகூவல் விடுத்தார். சத்தியா ஸ்டுடியோவுக்கு நிலத்தை எடுத்துக் கொண்டதில் எனக்கு எந்த விதமான பயனும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். எந்தவிதமான பயனும் இல்லாமல் 9,000 ரூபாய் கொடுத்து 20 வருட காலத்திற்கு ஏன் எடுத்துக் கொண்டார்கள் என்பதெல்லாம் கவனிக்கவேண்டிய விவகாரம். அந்த பைல்களை எல்லாம் விசாரணைக்கு வைப்பார் என்றால், இந்த நிலம் எடுக்கப்பட்டதால், இவர் பயன்பட்டாரா இல்லையா என்பதெல்லாம் நாட்டுக்கு விளங்கும் என்பதை இங்கு எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் தந்துள்ள நிதிநிலை அறிக்கை மீது எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் எடுத்துக்காட்டிய குறைபாடுகள் இவை இவை என்பதெல்லாம் நேற்று நான் ஆற்றிய பேச்சின் முன்பகுதியில் சொல்லியிருக்கிறேன். நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கையோடு சொல்லியிருக்கிறேன், இதை எல்லாம் கண்டித்துத் தீரவேண்டும் என்பதற்காக அல்ல. நல்லவைகளை எல்லாம் பாராட்டக்கூடாதா என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்பார் என்று எனக்குத் தெரியும். இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்ட அதே நேரத்தில் நிருபர்களிடம் நான் பேசுகிற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். அதை ஆளும்கட்சி உறுப்பினர் சிலரும் இங்கே குறிப்பிட்டதாக நினைவு. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு சமுகநல திட்டங்களுக்காக, குடிதண்ணீர் பாதுகாப்பு திட்டங்களுக்காக போடப்பட்ட திட்டங்களுக் கெல்லாம் ஓரளவு நிதி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டேன் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில்...... ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடை கோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப் பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையுமே ஏமாற்றிவிட முடியாது... என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதையேத்தான் நான் மீண்டும் திருப்பி சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற நிலைமைகளை காண்கிற நேரத்தில் இதே அறிவுரையை இந்த அரசுக்கு சொல்ல வேண்டியது தவிர்க்க முடியாத சூழ் நிலையில் எதிர்கட்சிகள் இருக்கின்றன பெரும்பான்மையான மக்களில் பலர் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பகுதியினர், விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஏன் வழக்கறிஞர்கள் உட்பட, மருத்துவர்கள் உட்பட பல்வேறு கிளர்ச்சிகளில் இறங்க வேண்டிய நிலையில் இருப்பதை நாட்டில் நாம் பார்க்கிறோம். மாணவர்கள் பல இடங்களில் தாக்கப்படுகிறார்கள், இவைகளைப்பற்றியெல்லாம், இந்த அவையில் முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மற்ற கட்சிகளின் சார்பிலும் அவைகள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானங்களாக கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

1979 மார்ச் 23] [திரு. மு. கருணாநிதி]

எந்த ஒரு தாக்குதலுக்காவது நீதி விசாரணை வைக்கிறேன் என்ற அளவுக்கு இந்த அரசு ஒத்துக்கொண்டதா என்றால் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே திருச்சியிலே கிளைவ் ஆஸ்டலில் நடைபெற்ற சம்பவத்தைக் காண இன்றைய நிதி அமைச்சர் என் அருமை நண்பர் மனோகரன் அவர்கள் அன்றைக்கு கிளைவ் ஆஸ்டலுக்கு விரைந்தோடிச் சென்றார், அன்றைக்கு மாணவர்களை எல்லாம் சந்தித்தார். அங்கே மாணவர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட அடிக்கப் பட்டார்கள் என்ற அறிக்கையை விடுத்தார்கள். சட்டமன்றத் திலே எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். நாங்களும் சேர்ந்து ஒரே பிடிவாதமாக இருந்து விடவில்லை. எங்களுக்கு வந்த தகவலை படித்துவிட்டு, இந்தத் தகவலுக்கு மேல் நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்ற காரணத்தால், நீதி விசாரணை வைக்கப்படும் என்று அறிவித்து, அவ்வாறே நீதி விசாரணை வைத்து, அந்த நீதிபதி அதிகாரிகள் குற்றம் இழைத்தார்கள் என்கின்ற அளவுக்கு தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, இப்படி மாணவர்கள் ரத்தகாயம் படுகின்ற அளவுக்கு, மண்டை உடைகின்ற அளவுக்கு அவர்கள் தாக்கப்படுகிறார்கள், விடுதிகளிலும், கல்லூரிகளிலும் அத்துமீறி போலீசார் மாணவர் களைத் தாக்குவதும் உள்ள இந்த நிலையை ஒரு கட்டத்திலாவது நிறுத்துவதற்கு நீங்கள் நீதி விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்தால்தான் முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் ஒரு உறுதிமொழியை எனக்கும் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அளித்தார். மதுவிலக்கு அவசரச் சட்டம் பற்றி நானும், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இது மிகக் கடுமையான சட்டம், காட்டுமிராண்டி காலத்திலேகூட இப் படிப்பட்ட சட்டங்கள் இயற்றப்படவில்லை, நாகரிகமான இந்த காலத்தில் இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றுவது, ஜாமீனில் கூட விடமுடியாது என்கின்ற சட்டத்தை கடுமையாக்குவதுமுறையல்ல என்பதை எடுத்துச் சொன்னோம். மதுவிலக்கு நிறைவேற்றப் பெற வேண்டும் என்பது எல்லோருடைய ஆசைதான். அந்தக் கொள்கையில் மாறுபாடு இல்லை. ஆனால் இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலே மதுவிலக்கிலே மிகத் தீவிரமான எண்ணங் கொண்ட, இந்திய நாட்டின் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தியா முழுவதற்குமான ஒரே நாளில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்த துணிவு படைத்திருக்கிறாரா அல்லது அப்படிப்பட்ட வசதி வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. நம்மைச் சுற்றி, பக்கத்திலே பாண்டிச்சேரியானாலும் சரி, அருகாமையிலே இருக்கின்ற பெங்களூர் ஆனாலும் சரி, இன்னொரு பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலம் ஆனாலும் சரி, இன்னொரு பக்கத்தில் கேரள மாநிலம் ஆனாலும் சரி, அனைத்திலும் மது இன்றைக்கு விலக்கு என்ற கொள்கைக்கு

ஆளாகாமல், தாராளமாகப் புழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்தக் கொள்கை தமிழகத்திலே வெற்றி பெற முடியாது என்கின்ற ஒரு கருத்து நிலவுகிற நேரத்தில், ஏதோ ஒரு அளவுக்கு மக்களைத் திருத்தவும், பிரசாரத்தின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன் வந்திருக்க வேண்டுமே அல்லாமல், இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் தேவையில்லை என்ற கருத்தை தெரிவித்த போது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்,—அறிக்கை விட்டார்கள், முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்றிருர்கிறார். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட அறிக்கைகள் வருகின்றன. அவைகள் பிரச்னையை குழப்புவதாக இருக்கின்றன என்றும், என்னையும், மற்ற கட்சித் தலைவர்களையும் பொறுமையாக இருந்து, சட்ட மன்றத்திலே அதற்கான விவாதங்களை நடத்தி, அதற்கேற்ற அளவில் திருத்திக் கொள்ளலாம் என்ற உறுதி மொழியை அன்றைக்குத் தந்தார்கள். அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற அச்சத்தின் காரணமாகவோ என்னவோ அந்த மசோதா நிறைவேற்றுகின்ற நேரத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மன்றத்திற்கு வராமல் இருந்து விட்டார்கள். (குறுக்கீடு) ஏதோ ஒரு காரணம், கோசிஜினைப் பார்க்கச் சென்றதாகச் சொல்கிறார். அங்கே மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி இங்கே அன்று பேசாமல் இருந்து முதல் அமைச்சர் அவர்கள் போய் இருக்கலாம். ஆனாலும், அவர் போனதாக சொல்லிவிட்டார். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு உறுதிமொழி அளித்திருப்பதால் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பார்களானால், அவருடைய அருளின் காரணமாக இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு இப்படிப்பட்ட கொடுமையான சட்டம் திணிக்கப்படுகின்ற சூழ்நிலை வராமல் இருந்திருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

இந்தியா பூராவும் இன்றைக்கு மது ஆறாக ஓடிக் கொண்டிருக்கின்றது. தமிழ் நாட்டிலும், மது ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதிலே யார் யார் ஈடுபட்டிருக்கிறார்கள், சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் இங்கே பேசிப் பேசித் தீர்ந்து விட்டப் பிரச்னை. எனவே, நான் மீண்டும் அதைப்பற்றிச் சொல்வதற்கு விரும்பவில்லை.

[முற்பகல் 9-20]

எனவே, நல்ல சித்தாந்தந்தான் அது. ஆனால், நிதியமைச்சருடைய கொள்கையில் சொல்ல வேண்டுமென்றால் செல்லரித்துப் போன சித்தாந்தமாக அது இன்றைக்கு ஆகிவிட்டிருக்கிறது. செல்லரித்துப் போன சித்தாந்தத்தைக் காப்பாற்ற அதி தீவிர அவசரச் சட்டம் அல்லது அவசரச் சட்டத்தை நிறைவேற்றி கடுமையாக ஆக்கப்படுகிற சட்டம் வெற்றிகரமாக அமையாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1979 மார்ச் 23] [திரு. மு. கருணாநிதி]

எவ்வளவோ திட்டங்களை அறிவித்தீர்கள். அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நேற்று என்னுடைய உரையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நான் பேசிய நேரத்திலே குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிகூட முதலமைச்சர் என்ன பேசினார், வெளியிலே. வெளியிலே பேசும்போது கள்ளச் சாராய வியாபாரிகள் யார் யார் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது என்று சொன்னார். அந்தப் பட்டியல் என்ன வாயிற்று என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது நண்பர்கள் கேட்டபோது யார் யார் என்று பட்டியலை அதிகாரிகளிடத்தில் நம்பிக் கொடுத்தேன். அதை அவர்கள் அவர்களுக்குச் சொல்லிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். இப்பொழுது தொழிலதிபர்களில் யார் யார் மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். பிறகு அந்தப் பட்டியலை அதிகாரிகளிடத்தில் கொடுத்து அந்த ரகசியம் வெளியாகி விட்டது என்று சொல்லக்கூடும். ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தில் அக்கறையும் ஆர்வமும் இருக்குமானால் கட்சி சார்பற்ற முறையில் அந்தக் கண்ணோட்டத்தோடு சட்டத்தினுடைய கடுமையைக் குறைத்து எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்போடும் அதனை நிறைவேற்ற முன்வர வேண்டுமென்றும், எதிர் கட்சியினரை மிரட்டலாம், பழி வாங்கலாம் என்ற அளவில் ஏழை எளியவர்கள் மிக இன்னலுக்கு ஆளாகின்ற இந்தச் சட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அதற்கு உங்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் எதிர் கட்சிகளின் சார்பாக எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கை. தேர்தல் அறிக்கையில் அண்ணா அவர்கள் கைப்பட எழுதியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கழக ஆட்சியில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. ஏற்கனவே குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை முடக்கி வைத்திருந்தார்கள். அந்த முடக்கத்தை நீக்க அந்தச் சட்டத்தை நடமாட விட்டோம் தீர்மானத்தின் மூலமாக. குதிரைப்பந்தய மைதானத்திற்குச். சொந்தக்காரர்கள் அல்லது அந்தக் குழுவினர் 'உச்சநீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த வழக்கு அப்படியே தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கை எழுப்புவதற்கு அவசரத்தைக்காட்டி, ஆர்வத்தைக் காட்டி குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக முதலமைச்சர் சொன்னார் — 'நான் அதை அரசுடைமையாக்கப் போகிறேன்' என்று அறிவித்தார். ஓராண்டுக் காலமாகிவிட்டது. அது நாட்டுடைமையாக்கப் பட்டதா அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா

என்றால் இல்லை. அறிவிப்புகள் ஏராளமாக வருகின்றன. அவை புரட்சிகரமாகத் தோன்றுகின்றன. பிறகு அவைகளைக் கிடப்பில் போட்டுவிடுவது இந்த அரசினுடைய வழக்கமாக இருந்து வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியிலும் அடுத்து வந்த அண்ணா அவர்கள் ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து ஏழாண்டுக் காலம் நடைபெற்ற திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும் மொத்தம் ஒன்பது ஆண்டு கால கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட நிறைவேற்றுவது என்று சொல்லப்பட்ட திட்டங்களுக்கு ஓரளவு நிதி வருவாய் அதிகரிப்பதன் காரணமாக கூடுதலாக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தவிர, பல்வேறு திட்டங்கள், குடிசை மாற்று வாரியம் போன்ற திட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் போன்ற புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் சமுதாய நலத் திட்டங்கள் எல்லாம் கைவிடப்பட்டிருக்கின்றன. அறவே விலக்கப்பட்டுள்ளன.

"தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மைப்படம் தெரியும்" என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார். தாழ்வாரமும் தந்த மாளிகையின் ஒரு பகுதிதான். ஏனென்றால் தந்த மாளிகையில் இருக்கும் தாழ்வாரத்திலே இருந்து பார்த்தாலும் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மையான படப்பிடிப்பைக் காண முடியாது. ஆகவே, அந்தத் தாழ்வாரத்திலிருந்து கொஞ்சம் வெளியே வந்து பார்த்தால்தான் தமிழகத்தின் உண்மைப்படம் தெரியும் என்று நான் அவருக்குக் கூறிக்கொள்வதோடு இதில் நான் என்னுடைய விமர்சனத்தைக் கூறுவதைவிட அவர்களோடு மிகவும் உறவுள்ள கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி, கர்நாடகமாநிலத்தை ஆண்டு கொண்டிருக்கிற கட்சி, அந்தக் கட்சியின் அமைச்சர்களில் ஒருவர் பசவலிங்கப்பா அவர்கள் மதுரையில் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்ட வாசகத்தை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கைக் கோட்பாட்டில் கட்டப்பட்ட ஒரு கோட்டையல்ல. கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக ஏழை பாமர மக்களுக்குச் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விழித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தாக்கள் செய்துள்ள பட்ஜெட்டில் எந்த அளவு விமோசனமும் இல்லை. பின்தங்கியவர்களை முன்னேற்ற ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கிறதா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பட்ஜெட்டிலும் எதுவும் ஒதுக்கவில்லை. இனியும் தமிழ் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.''

என்று பசவலிங்கப்பா அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே எடுத்துக் காட்டி நான் சொன்னால் கோபம் வரும் என்பதற்காகத்தான் உங்களுடைய நண்பர் கர்நாடக மாநில அமைச்சர் பசவலிங்கப்பா அவர்கள் சொன்னதை எடுத்துக்கூறி இந்த நிதிநிலை அறிக்கை பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக இந்த அவையின் முன்பு நான் சமர்பித்த நிதிநிலை அறிக்கை பற்றி, கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நான் எதிர் கட்சித் தலைவரைப் போல் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை, குறிப்பாக எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில் அளிக்கின்ற வகையிலேயும் விளக்கங்களைத் தெரிவிக்கின்ற முறையிலேயும் எனது பேச்சை நான் அமைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர், இறுதியாக தனது பேச்சை முடிக்கின்ற போது, நான் எனது நிதிநிலை அறிக்கையிலே கடைசியிலே குறிப்பிட்ட அந்த வாசகங்களை சுட்டிக் காட்டி, அவருக்கே உரித்தான ஒரு விளக்கத்தைச் சொன்னார். எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி. இந்தப் பகுதிகளைப் பல உறுப்பினர்கள் தொட்டுக் காட்டினார்கள், அந்த அளவிற்கு இந்தப் பகுதி அவர்களது உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி, ஆனால் தந்த விளக்கங்கள், நான் எந்த நோக்கத்தோடு அந்தக் கருத்துக்களை எடுத்துச் சுட்டிக் காட்டினேனோ அதற்குரியதாக அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும்போது, தயவுசெய்து யாரும் வருத்தப்படக் கூடாது.

'' தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மைப்படம் தெரியும். இந்த அவை முன் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களுக்குக்கும் பலனுள்ள யோசனைகளுக்குமாக வைக்கப் பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை அந்த உண்மை நிலையின் படப்பிடிப்பு.'' இது நிதிநிலை அறிக்கையில் நான் எழுதிய கடைசிப் பகுதி.

தந்த மாளிகையிளிலே இருந்து கொண்டு நிதியமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையை எழுதியிருக்கிறார் என்று ஏளனம் பேசியவர்கள் உண்டு. நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நான் தலை நிமிர்ந்து சொல்கிறேன், தந்த மாளிகையிலிருந்து கொண்டுதான் நிதிநிலை அறிக்கையை எழுதினேன். அவர்கள்

சொல்கிற தந்த மாளிகைக்கும், நான் சொல்கிற தந்த மாளிகைக்கும் இடையில் இருப்பது இது தான். அவர்கள் சொல்லியிருக்கின்ற தந்த மாளிகை 'அய்வரி டவர்' நான் சொல்கிற தந்த மாளிகை 'மக்கள் எனக்குத் தந்த மாளிகை' யிலிருந்து கொண்டு எழுதினேன். இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தந்த மாளிகை என்று நான் குறிப்பிடுவது, ஆங்கிலத்தில் கற்பனையான ஒரு இடத்தில் இருந்துகொண்டு நிஜ நிலைமைக்கு வராமல் இருக்கின்ற நிலைமையாகச் சுட்டிக் காட்டப் பயன்படுத்துகிற ஒரு வார்த்தை. Ivory tower அந்த அணுகுமுறை கூடாது என்று சொல்லிவிட்டு, தாழ்வாரம் என்று நான் கூறுவது down to earth approach என்பது, நிஜமான அடிப்படை தேவையென்று அடிப்படையிலே எழுப்பப்பட்டதே தவிர, எதிர்கட்சித் தலைவர் தாழ்வாரமே இருக்கக்கூடாது, தெருக் கோடிக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்ட அந்தக் கருத்திலே நான் எழுதவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது அவருக்குத் தெரியாததல்ல, வேண்டுமென்றே அப்படி ஒன்றைச் சொல்லிப் பார்க்கலாம் என்பதற்காகச் சொன்னார், சொல்லிப் பார்க்கலாம் என்பதற்காகத்தான் சொன்னார் என்று கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் மக்கள் எனக்குத் தந்த மாளிகை என்று சொன்னார், நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்கள் தந்த மாளிகை என்று சொல்வது சொல்லாட்டம். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். மக்கள் தந்த மாளிகையிலிருந்து கொண்டு நீங்கள் திட்டங்களைத் தீட்டுகிறீர்கள் என்று சொல்கிறீர்கள், பிறகு ஏன் தாழ்வாரங்களுக்கு வருகிறீர்கள்?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:—நான் திருப்பியும் சொல்கிறேன். Down to earth approach என்று நான் குறிப்பிடுகின்ற உண்மையை அவர்கள் தயவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஆட்சிக் கட்சிக்கும் சேர்த்தே சொல்லியிருக்கிறேன் என்பதிலிருந்து தயவு செய்து என்னுடைய தைரியத்தை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

"ஆண்டாண்டாக எதிர்பார்ப்புகளின் மத்தியில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் கடைகோடியிலிருக்கும் மக்கள் பொறுமையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்று எண்ணி யாரும் யாரையும் ஏமாற்றிவிட முடியாது" என்று ஒரு ஆட்சிக் கட்சியிலேயிருந்து இந்தக் கருத்துக்களை இவ்வளவு துணிச்சலோடு நான் எழுதுகிறேன் என்றால், இந்த அளவிற்கு ஆட்சி உண்மை நிலையைப் புரிந்து வைத்திருக்கிறது, பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு, அந்த எல்லையை மக்கள் தாண்டுவார்களானால் தர்மம் தலைகோடிக்குச் செல்லும் என்ற அடிப்படையை உணர்ந்து இந்த அரசு பணியாற்றுகிறது என்பதைப்

புரிந்து வைத்துக் கொண்டு இது எழுதப்பட்டிருக்கிறது என் பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

இந்த நேரத்தில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக ஆதாரமாக ஒன்றைக் குறிப்பிட விரும் புகிறேன். ஏனென்றால், நாம் கண்ணை மூடிக்கொண்டு காரி யங்களை ஆற்றக் கூடாது என்பதையும், மக்கள் நம்மை எப் படிக் கணிக்கிறார்கள் என்பதை தீவிரமாக நாம் கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும், மக்களின் பார்வை யிலிருந்து நாம் மறைந்து விட்டோமானால் விளைவுகள் எவ் வளவு விபரீதமாகச் செல்லும் என்பதையும் நினைவுபடுத்தி யாக வேண்டும். இதை நிச்சயமாக, எதிர்க்கட்சித் தலைவர வர்கள் — இன்றைக்கிருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவரவர்கள் —நிதியமைச்சராக இருந்திருப்பாரேயானால் இந்த அளவிற் குத் தைரியத்தோடு எழுதுவார்கள் என்று நான் நம்பவில்லை என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் மன தார நம்புகிறேன். அந்த அளவிற்கு அது எழுதப்பட்டது.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன். இதைச் சொன்ன வர் யார் என்பதை அப்பாலே சொல்கிறேன்.

"Economic equality is the master key to non-violent independenceo A non-violent system of Government is clearly an impossibility, s. long as the wide gulf between the rich and the hungry millions persists. The Contrast between the palaces of New Delhi and the miserable. hovels of the poor, labouring class cannot last one day in a free India in which the poor will enjoy the same power as the richest in the land. A violent and bloody revolution is a certainty one day, unless there is a voluntary abdication of riches and the power that riches give and sharing them for the common good."

நான் இதற்கு மொழி பெயர்ப்புத் தர வேண்டுமென்று விரும்ப வில்லை. உங்களுக்கே தெரியும். இந்த இடைவெளி, பெரும் பணக்காரர்களுக்கும், பரம ஏழைகளுக்கும் இருக்கின்ற இடை வெளி குறைந்தாலொழிய புரட்சிப் பெரும் வெள்ளத்தில் பெருங் கதவுகள் திறக்கப்பட்டே தீரும் என்ற கருத்தைச் சொன்னவர் அமைதியின் வடிவமாக அமரராகிவிட்ட பெரும் மதிப்பிற்குரிய காந்தியடிகள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பத்திரிகையாளருக்கும், ஒரு பெரியவருக் கும் நடந்த ஒரு உரையாடல். அந்த உரையாடலின் பகுதி இதுதான்.

"What would happen in a free India ?" I asked.

What is your programme for the improvement of the lot of the peasantry ?

பத்திரிகை ஆசிரியர் கேட்கிறார், விவசாயிகளுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் இது கேள்வி. அதற்குப் பதில்:

"The peasants would take the land", he replied. "We would not have to tell them to take it. They would take it".

அவர்களைப் பார்த்து நீங்களே இந்த நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வேண்டியதில்லை, அவர்களே எடுத்துக் கொள்வார்கள்.

அது நிதிநிலைமையைப் பொறுத்தவரையில் நடைபெற முடியாத ஒன்று. சிரித்துக் கொண்டே சொன்னார்,

"You see", he smiled. "Our gratitude to our millionaire friends does not prevent us from saying such things".

"Asked whether the peasants seizing the land would occur with violence"

அப்படியானால் அந்த நிலத்தை அவர்கள் அபகரித்துக் கொள்வார்கள், சுப்ளீகரம் செய்வார்கள் என்றால் பெரும் புரட்சி வருமே இது பத்திரிகை நிருபர். அதற்கு பதில்

"There may be violence, but then again the landlord may co-operate."

"You are an optimist" இது பத்திரிகை நிருபர். அதற்குப் பதில்,

"They might co-operate by fleeing".

அந்தப் பெரும் நிலக்கிழார்கள் நமக்கு ஒத்துழைப்புத் தருவார்கள், ஓட்டம் பிடிப்பதன் மூலம். இப்படிப்பட்ட கருத்தைச் சொன்னவர் வேறு யாரும் அல்ல, இதே மகாத்மா காந்தியடிகள் கள். லூயிஃபிஷரோடு 1942 ஆம் ஆண்டு பேசியபொழுது இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை அருள் கூர்ந்து கணக்கிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த உணர்வோடுதான் இந்த அரசு திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று நினைக்கிறது என்பதையும், அந்த அடிப்படையிலேதான் நான் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசியபொழுது நிதியமைச்சரே பினாமியாகத்தான் இருக்கிறார் என்று குறிப்பிட்டதாகக் கேள்வி. (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன், பிறகு கேட்கலாம்.

திரு கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, இந்தக் கருத்தை இந்த அரசு அமல நடத்துமா என்பதை மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, நிதியமைச்சரே பினாமியாகத்தான் இருக்கிறார் என்று மாண்புமிகு .உறுப்பினர் ஒருவர் சொல்லியிருக்கிறார்.

"Would the landlords be compensated ?"

இதற்காக நஷ்டயீடு தரப்படுமா நிலக்கிழார்களுக்கு. இது கேள்வி.

"No, he said. "That would be physically impossible".

நான் மெத்தப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை நான் ஒரு பினாமிதான். ஏனென்றால், இந்த அறிக்கைக்குச் சொந்தக்காரர் என் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற முதலமைச்சர் அவருக்கு பினாமியாக நான் இருப்பதில் பெருமைப்படுகிறேன் என்பதை அந்த நண்பர்களுக்குத் தெரிவித்து அரசியல் கட்சியிலே நான் என்றைக்கும் பினாமியாக இருந்ததில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பற்றிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் நிதியமைச்சர் கூட தனது பதிலிலே சொல்லக் கூடும், ஒரு வார்த்தை கூடப் பாராட்டக் கூடாதா என்று கேட்கக் கூடும், என்றார். ஏன், கேட்கிற உரிமை எனக்கு இல்லையா? நிதியமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பாராட்டு தெரிவித்தால் அவருக்கு என்ன கெட்டுப் போகிறது ? பாராட்டுகிற அம்சங்கள் இதில் இல்லையென்று அவர் கருதுகிறாரா ? நான், இன்னும் சொல்கிறேன், இந்த பட்ஜெட்டைப் பற்றி எழுதிய அத்தனைப் பத்திரிகைகளையும் அவர் படித்திருக்கிறார். படித்ததற்குப் பிறகும் ஒரு பாராட்டு அவரிடமிருந்து வரவில்லையென்றால் என்னிடம் இருக்கிற கோபமா? இல்லை, பட்ஜெட்டிலே ஒன்றும் இல்லையென்று அவர் நம்புகிறாரா ? நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன், இது 'எக்னாமிக் டைம்ஸ்' என்ற பத்திரிகையிலே வந்திருக்கிறது.

"The Budget which represents a departure in presentation has given prominence to a large number of schemes —rather than the conventional elaboration of the finance intricacies—designed, as Mr. Manoharan explained, to increase employment opportunities for the poor people in the rural areas and for increasing and expanding the educational and medical facilities." 'எக்கனாமிக் டைம்ஸ்' எழுதிய அந்தக் கருத்தை இங்கே நான் சொல்வதற்குக் காரணம், பம்பாயிலே இருந்து வருகிற அந்தப் பத்திரிகை இந்தக் கருத்தை எழுதுகிறபொழுது, தோளோடு தோள் நின்று ஒரு காலத்தில் பணியாற்றிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அந்த அளவுக்குப் பாராட்டும் உள்ளம் பெறவில்லையே என்பதற்கு நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இன்றைக்கு அவராலே பாராட்டப்படுகிற ஒரு பத்திரிகை, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', அந்தப் பத்திரிகை எழுதியது இதோ இருக்கிறது.

The Finance Minister Mr. Manoharan last Saturday presented the Budget. "His speech contains a number of proposals aimed at achieving the objective he has set-forth. By themselves they are small items, but cumulatively they represent a sound impetus to rural industrialisation". இந்தக் கருத்தை இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதியிருக்கிறது என்ற அளவில் நான் முடித்துவிடுகிறேன். 'இந்து' பத்திரிகை தனது நல்லெண்ணத்தை வெளியிட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள், 'மெயில்' பத்திரிகையைப் பற்றிச் சொன்னால் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கோபம் வரும். ஆகவே, உள்ளே செல்லாமல், நான் தலைப்பை மட்டும் சொல்லி விடுகிறேன், "SENSIBLE BUDGET". அதற்கு மேல் நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்பொழுதும் நம்புகிற பத்திரிகை—அவர் அதைத்தான் ஆதாரத்திற்கு அடிக்கடி எடுத்து வருவார் என்பதும் நமக்குத் தெரியும். அந்தத் தினமணி பத்திரிகை என்ன எழுதி இருக்கிறது என்பதை நான் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். அப்பத்திரிகை எழுதியிருப்பது இது தான் "மக்கள் நலம் அல்லது கஷ்ட நிவாரணம் பற்றிய பகுதியில் "வேலை வாய்ப்பு அபிவிருத்தி" வேலையில்லாதாருக்கு "உதவி" ஆகிய ஆரம்ப யோசனைகள் கவனத்திற்குரியவை. ஆனால், "துர்வினியோகம்" இல்லாமல் செயல்படுத்திப் பார்த்துப் பிறகுதான் அதன் நலன்களை மதிப்பிட இயலும்."

[முற்பகல் 9–40]

முன்கூட்டியே முந்திரிக் கொட்டைகள் போல் வரக் கூடாது. ஆனாலும் இது தினமணிப் பத்திரிகையிலுள்ள அபிப்பிராயம்.

[1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

"இவை பரிட்சித்துப் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளே. மொத்தத்தில் இந்த பட்ஜெட்டானது புகார்களுக்கு இடம் தராத பட்ஜெட். சாதுவான" பட்ஜெட் என்று சொல்லலாம் என்பது வரவேற்கத்தக்க அம்சம்". இது தினமணியே தனக்குரிய முறையில் எழுதியிருப்பது. வேறு பல பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருக்கிறது. பாராட்ட வேண்டிய உள்ளங்கள் பாராட்டியிருக்கின்றன. பாராட்டக் கூடாது என்று யாரும் கருதவில்லை. உள்ளுக்குள்ளேயே சிலர் பாராட்டுகிறார்கள், வெளியே சொல்வதற்கு கொஞ்சம் கூச்சப்படுகிறார்கள். அதிலே ஒருவர் ஆக நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட சில பிரச்னைகளுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் நேற்றைக்கு பேசியபோது இந்த ஒதுக்கீடுகள் பற்றியெல்லாம் பேசினார். அவர் ஆட்சியிலே இருந்த போது 575 கோடி ரூபாய் பட்ஜெட் இருந்தது என்றும் அதற்குப் பிறகு இப்பொழுது இருக்கிற ஆட்சி 820 கோடிக்கு பக்கத்திலே வந்ததற்குப் பிறகும், 840 கோடி என்று வந்ததற்குப் பிறகும், அவர்கள் பெரும் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்ற கருத்தை இங்கே சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு அயிட்டத்திலும் அவர்கள் தெரிவித்தார்கள். நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நான் அதற்காக குறிப்புகளை இங்கே வைத்திருக்கிறேன். அந்தக் குறிப்புகளிலேயிருந்து அவர்கள் அதற்கு விளக்கம் பெறுவார்கள் என்று மனதார நம்புகிறேன்.

சிறு பாசனத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டபோது அதிலே, அவர்கள் ஆட்சிப் பீடத்திலே இருந்தபோது, அதற்கென்று ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவு 89 லட்சம் என்று குறிப்பிட்டு விட்டு, ஆனால் இவ்வளவு அதிகமான பணத்தைப் பெற்றிருக்கிற இந்த அரசு அந்த அளவுக்கு ஒதுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். நிதியமைச்சர் என்ற முறையில் நான் அதை நியாயமாக மறுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் 1980-ம் ஆண்டு இதற்கென ஒதுக்கப்பட்டிருப்பது 137 லட்சம் என்பதை நான் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்திலிருந்துதான் படிக்கிறேன். 1975-76-ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையில் இணைப்பில் அதிலே 20-ம் பக்கத்தில் 306-வது வரியின்கீழ் 'சிறு பாசனம்' என்ற தலைப்பில் போடப்பட்டிருப்பது 1975-76-ல் 419 லட்சம் அதாவது 4 கோடியே 19 லட்சம் கழக

ஆட்சியிலே. இப்பொழுது 1979–80-ல் சிறுபாசனத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 3 கோடியே 46 லட்சம். இதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன் கேப்பிடல் எக்ஸ்பெண்டிசர், மூலதனச் செலவு 1975–76-ல் 89 லட்சம். 1979–80-ல் 137 லட்சம்.

திரு. மு. கருணாநிதி : வருவாய் அடிப்படையில் வருவாய் செலவுகளைத்தான் முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தருவது மூலதனக் கணக்கு. வருவாய் கணக்கில் பார்த்தால் என்ன வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : வருவாய்க் கணக்கிலும் கணக்கெடுத்துப் பார்த்துச் சொல்கிறேன். இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அதிகப்படியாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாசனத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை இதிலே தரப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரத்தைப் படித்துக் காட்டினார்கள். நானும் அந்த புள்ளி விவரத்தைப் பார்த்தேன். அதிலே மூலதன செலவு இவ்வளவு என்று குறிப்பிட்டதை விட மற்ற வருவாய் கீழே சிறிது பார்க்கும்போது 75-ஐ விட நிச்சயமாக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடைமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் பாசன செலவுகளுக்காக 1975–76-ம் ஆண்டு 17.67 கோடி ரூபாய், ஆனால் 1979–80-ம் ஆண்டு மூலதன செலவு 29.42 கோடி ரூபாய் குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. பராமரிப்பு செலவுகளைப் பற்றிய ஒதுக்கீடாகும். புதிய பாசனத்திற்கான மூல தன செலவுகளை பொருத்தது அல்ல. தேவைப்பட்டால் பராமரிப்புச் செலவை திருத்த மதிப்பிட்டில கூட்டுவதற்கு வசதியிருக்கிறது.

அதற்குப் பிறகு வீட்டு வசதி பற்றி அவர்கள் சொன்னார்கள். 1975–76-ம் ஆண்டு 5.22 கோடி ரூ. என்று குறிப்பிட்டார்கள். ஆனால் உங்களது ஆட்சியில் அந்த அளவிற்கு இல்லை என்றார்கள். 1979–80-ம் ஆண்டுக்கு இந்த அரசு ஒதுக்கியிருப்பது ரூ. 8·73 கோடி என்பதை நான் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 1975–76-ல் ரூ. 0.80 கோடி. ஆனால் இந்த ஆட்சி ஒதுக்கி இருக்கிற தொகை ரூ. 1 கோடி என்பதை நான் நினைவூட்டுகிறேன். ஆக மொத்தம் வீட்டு வசதி (பொது) மீனவர்களுக்கு 1975–76-ல் ஒதுக்கிய தொகை ரூ. 6.02 கோடி. 1979–80-ல் ரூ. 9.73 ·கோடி. இது செலவைப் பற்றிய விவரம்.

1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

கணக்கு வைக்கும் முறையில் அரசு நகர்புற வளர்ச்சி நிதியில் இருந்து ரூ. 4.80 கோடி திருப்பிக் கழித்து விடுவதால் நிகர செலவிற்கு அந்தத் தலைப்பின் கீழ் குறைவாக அந்தச் செலவு பதிவு செய்யப்படும். உண்மையில் அந்தச் செலவில் குறைவு ஏற்படாது. பெரிய அளவு உயர்வு ஏற்பட்டு இருக்கிறது.

அதற்குப் பிறகு சாலை, நீர் வழி போக்குவரத்து பற்றி அவர்கள் இங்கே சொன்னார்கள். 1975–76-ல் ரூ. 5.25 கோடி ரோடு போக்குவரத்து, நிறுவனங்களுக்கு திருப்பித் தருவதற்காக நிதி செலவிடப்பட்டது. அதற்குப் பிறகு போக்குவரத்து நிறுவனங்கள் நேரடியாகச் செலவு செய்து வருகின்றன. மற்றும் அந்தக் தலைப்பில் மீதமுள்ள ரூ. 1.29 கோடி மோட்டார் வெஹிகில்ஸ் மெயின்டெனன்ஸ் ஆர்கனைசேஷன்களுக்குச் செலவிடப்பட்டது. இது அரசு கார்கள் பராமரிப்புக்காகச் செலவிடப்பட்ட தொகை.

திரு. மு. கருணாநிதி: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அவை விளக்கம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் குறுக்கிடுகிறேன். மன்னித்துக்கொள்ளுங்கள். சாலைப் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து என்று நான் குறிப்பிட்டதும், நிதி அமைச்சர் அவர்கள் குறிபிட்ட போக்குவரத்துச் செலவும் ஒன்றாக ஒத்து வரக்கூடியது அல்ல. சாலை நீர்வழிப் போக்குவரத்து என்பது சாலைகள், படகுகளின் மூலமாக கப்பல்களின் மூலமாக போக்குவரத்துக்கள் இவைகளைப் பற்றி விவரங்கள், அதுவும் வருவாய் கணக்கில் 1975–76-ல் ரூ. 6.81 லட்சம். 1979–80-ல் ரூ. 2.83 லட்சம். நான் நேற்று கூறிய விவரங்கள் வருவாய் கணக்கில் இருப்பவை. இன்று மூலதனக்கணக்கை பற்றி மட்டும் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் முடிப்பதற்குள்ளாகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள். பராமரிப்புக்காக செலவு 1975–76-ல் அந்தத் தலைப்பில் 1.30 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. 1979–80-ல் மோட்டார் வெஹிகில்ஸ் மெயின்டனென்ஸ் ஆர்க்கனைஷேசன் பற்றிய செலவு ரூ. 2.68 என்று அந்தக்கணக்கு தலைப்பில் இதர நிர்வாகச் செலவுகள் என்ற அகௌண்டில் பதிவு செய்யப்படும். இதற்காக ரூ. 1.54 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்ற செலவுகள் போக்குவரத்து நிறுவனங்கள் நேரடியாக செலவிடப்பட்டு வருகின்றன. அந்தக் கருத்தை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1979 மார்ச் 23

அதோடு அவர்கள் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த 'எம்பிளாய்மென்ட் கேரண்டி ஸ்கீம்' பற்றி பேசிய பல எதிர்க்கட்சித் தலைவர்கள், தங்களது கருத்தைச் சொன்னார்கள், அதிலே கூட சில பேர் சொன்னர்கள், யாரோ பெற்ற குழந்தை, அதற்கு நீங்கள் என்ன பெயர் சூட்டி அழைப்பது என்று சொன்னார்கள். யாரோ சொன்ன கன்செப்ட்தான் 'பிளானிங்' அதை ரஷயா பெற்றெடுத்தது. அதை எடுத்து கொஞ்சியவர் பண்டித ஜவஹர்லால் நேரு என்பதை மறந்து விடக்கூடாது. நல்ல திட்டங்கள் யார் சொன்னாலும் அதை எடுத்துக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டங்களில் நல்ல திட்டங்களாக உள்ளவைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக, இல்லையா? இருக்கிறது, ஆக திட்டங்கள் நன்றாக இருக்குமானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கக்கூடாது.

வேலை இல்லாதவர்களுக்கு, படித்தவர்களுக்கு, படியாதவர்களுக்கு என்று அதிலே, அந்தத் திட்டத்திலே குறிப்பிட்டு மிகத் தெளிவாக சொல்லி இருக்கிறது. நேற்றைக்கு அழகர்சாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒன்றும் பெரிய புரட்சிகரமான திட்டம் அல்ல என்றும், இந்தத் திட்டம் ஏற்கனவே சில மாநிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன என்றும், இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் தேவையான திட்டம், நல்ல திட்டம் என்று அனைவரும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கும் சந்தேகம் இந்தத் திட்டம் செயல்படுத்த முடியுமா என்பது தான். இந்தத் திட்டத்திலே சொல்லப்பட்டு இருப்பது ரூ. 3. அதற்கு பிறகு அரிசி, கோதுமை அவர்களுக்கு வழுங்கப்படும் என்று இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 9-50]

இந்த 3ரூபாய் போதுமா என்று கேட்டவர்கள் இருக்கிறார்கள். ஒன்றும் இல்லாதவர்களுக்கு ரூ. 3 கொடுத்தால் அது கூட தவறு என்று வாதிடுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதன் பிறகு வேலை இல்லாமல் போனால், அந்த நிலைமை ஏற்படும் என்று தெரிந்தால் தினக்கூலி என்ற அளவுக்கு அல்ல, உத்தரவாதம் வழங்குகிறோம் என்ற வகையில் தெரிவித்தபோது அதிலே தெரிவித்தோம்; ஒரு ரூபாய் நிச்சயம் அவர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தோம்

1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 'கான்ட்ராக்டர்கள்' நியமிக்கப்பட மாட்டார்கள் என்பதை உறுதியாக இந்த அரசு தெரிவித்து இருக்கிறது. அப்படித் தெரிவித்ததற்கு காரணம் அதன்மூலம் ஊழல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான். நான் கேட்க விரும்புவது, இந்தத் திட்டம் படித்த, படிக்காத அனைவருக்கும், வேலை இல்லாமல் இருக்கிற அனைவருக்கும் வழங்கப்படுகிற திட்டம். கிராமப்புறங்களில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது என்பது ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும். 'ஸ்மால் பார்மர்ஸ் டெவலப்மென்ட் ஏஜென்சி' வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம், 'இண்டகிரேட்டெட் ரூரல் டெவலப்மென்ட் ப்ரோகிராம்' எல்லாம் இருக்கின்றன. அவற்றின் மூலம் பலர் பயனடைந்துள்ளனர். ஆயினும் இவற்றினால் நேரடியாக பயன் எய்தாத, வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ''உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (கான்ட்ராக்டர்) இல்லாமல், அரசுத் துறைகளில் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். அதன்படி நாளொன்றுக்குச் சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும். இப் புதிய திட்டத்திற்கென நிர்வாக அலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இந்த அறிக்கையில் இருக்கிறது.

இதை நேற்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்போது அவர்களுக்கு உரித்தான சாமர்த்தியத்தை வைத்து, நான் சாமர்த்தியமாக ஏமாற்றப் பார்க்கிறேன் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான், எங்கும் தேடிப்பார்த்தேன், அதற்கான ஒதுக்கீடு எங்கே, அதுபற்றிய அறிவிப்பையே காணோமே ; எங்கெங்கே தேடினும் கண்டிலேனே என்று நேற்று மெத்த கவலைப்பட்டுக்கொண்டார்கள்.

நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'டீட்டெயில்டு டிமான்ட்ஸ் பார் கிரான்ட்ஸ், டீட்டெய்ல்டு பட்ஜெட் எஸ்டிமேட்ஸ்'—இவைகளைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதைப்பற்றியக் குறிப்பு மிகத் தெளிவாக இருக்

கிறது. ''ஸ்பெஷல் ரூரல் எம்பிளாய்மென்ட் ப்ரோகிராம்'' என்று வருகின்ற தலைப்பில் 'டோக்கன்' ஆக இங்கே இருக்கிறது. திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. டோக்கன் இருக்கிறது; விளக்கம் இருக்கிறது (குறுக்கீடு—ஒரு ரூபாய்தான் இருக்கிறது) அது டோக்கனாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய விளக்கம் விரிவாக இருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5,000 பேர்—அதை 2,500 ஆக குறைத்துக்கொள்கிறேன் என்ற கணக்கை எடுத்துச் சொல்லி, அந்த வகையிலே மாதம் 35 கோடி ரூபாய் தேவைப்படும்; அதற்கு எங்கே போவீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி, வெற்றி பெற்றே தீரும் என்ற உறுதியை, உத்தரவாதத்தை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். ஏதோ மத்திய சர்க்காரிலிருந்து பணம் வந்திருக்கிறது; ஆகையால் செய்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்களையும், மற்ற நண்பர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பணம் எப்படி வந்தது? அவர்களாக தூக்கிக் கொடுத்துவிட்டார்களா? யாரோ பேசினார்கள். 150 கோடி ரூபாய் உங்களுக்கு தர்மமாகக் கிடைத்தது. அதை வைத்து விளையாடுகிறீர்கள் என்று சொன்னார்கள்.

முன்னாலே ஒரு மெமராண்டம் தந்தோம். இந்த ''பிளான் கமிஷனுக்கு'' அளித்த மெமராண்டத்தில் தெளிவாக எங்களுடைய கருத்தை வற்புறுத்தித் தெரிவித்திருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாகப் படித்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன். அந்த இலட்சியத்திலிருந்து இம்மி அளவும் பிறளாமல், துளியளவும் மாறாமல், அந்த இலட்சியக் கோட்டைத் தாண்டுகின்ற பணியில் நாம் வெற்றி பெறுவோம்; பெற்றிருக்கிறோம்.

எதற்கெடுத்தாலும் போராட்டம் தேவை, போராட்டம் தேவை, தீர்மானத்தைப் போட வேண்டும், தீர்மானத்தைப் போட வேண்டும்; இதிலே இந்த அரசுக்கு நம்பிக்கை இல்லை; முதலமைச்சருக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள்.

பேசிய பிறகு மீண்டும் நம்பிக்கை ஏற்படும் என்று கருதுகிறோம், வாள் தூக்க வேண்டும், துப்பாக்கி தூக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இங்கே பைனான்ஸ் கமிஷனுக்கு நாம் சமர்ப்பித்த ரிப்போர்ட்டில் முதல் பக்கத்தில் 3-வது பாராகிராப்பை படிக்கிறேன்.

1979 மார்ச் 23] *[திரு. கி. மனோகரன்]*

'That the allotment of Rs. 40,89,64,000, under Demand No. 28–Community Development Projects be reduced by Rs. 100/-'

"The very first Article of the Constitution of India defines India as a 'Union of States'. The overfall philosophy that should govern Centre-State financial relations should, therefore, be such as to ensure financial autonomy both for the Centre and the States in a manner that is fully consistent with the responsibilities and functions assigned to each under the Constitution. The Centre and the States should be considered as co-equal partners in the Indian federal set up. The allocation of resources to States that arises from the award of the Finance Commission should not be viewed as a 'transfer' from the Central exchequer to the States but as a redistribution, consistent with emerging needs, of the overall resourees of the nation which, in description as well as in fact, is a genuine 'Union of States'.

இது பைனான்ஸ் கமிஷனுக்கு நாம் சமர்ப்பித்த ரிப்போர்ட்டின் முதல் பக்கத்தில் 3-வது பாரா. திருப்பியும் சொல்கிறேன். நானும் முதலமைச்சரும் பைனான்ஸ் கமிஷனை டெல்லியிலே சந்தித்து, நமது மாநிலத்தின் சார்பாக லக்கடாவாலா அவர்களிடம் எடுத்துச் சொல்லி அதன்பிறகு தேசிய அபிவிருத்திக் கவுன்சில், அதாவது நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில்-லேயும் முதலமைச்சர் பேசியபோதும், நான் பேசியபோதும் எங்களைச் சம பங்காளிகளாக நடத்த வேண்டுமே தவிர மாஸ்டர்-சர்வென்ட் ரிலேஷன் ஷிப் இருக்கக்கூடாது என்று சொன்னோம். இவ்வளவு பணம் தேவை என்றும், மதுவிலக்கினால் நாங்கள் இவ்வளவு பணத்தை இழந்திருக்கிறோம், இதற்கெல்லாம் நீங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டோம். ஒரு சப் கமிட்டி போட்டார்கள். அந்த சப் கமிட்டியிலே முதலமைச்சரின் சார்பாக நான் அங்கே சென்று எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு அண்மையில் நடந்த நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலிலே முதலமைச்சரும் நானும் கடுமையான அளவுக்கு அங்கே பேசி இருக்கிறோம். ஆதாரம் தேவையானால் எனது மதிப்பிற்குரிய திரு. உமாநாத் அவர்கள் அசோக்மேத்தாவைக் கேட்டுக் கொள்ளலாம். பெருமதிப்பிற்குரிய திரு. அழகர்சாமி அவர்கள். திரு. வாசுதேவன் நாயரை நாடலாம், திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே இல்லை—திரு. தேவராஜ் அர்ஸை நாடலாம். அந்த அளவுக்கு நாங்கள் துளி கூட விட்டுக்கொடுக்காமல் போராடியதன் விளைவாகத்தான் பலன் ஏற்பட்டது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். மற்றைய மாநிலங்கள் கூட நம்முடைய வாதத் திறமையினால் பலன் பெற்றது என்று கூட பெருமையோடு சொல்லிக்கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்கிறேன். அவர்கள் தந்தார்கள் நீங்கள் செலவழிக்க என்று சொல்கிறீர்களே, யார் பணம் அது? நமக்குச் சேர வேண்டிய பணத்தைத் தானே கொடு என்று கேட்டோம்.

[திரு. கி. மனோகரன்] [1979 மார்ச் 23

சென்ட்ரலி ஸ்பான்சார்ட் ஸ்கீம் என்ற பெயரால் 6 ஆயிரம் கோடி ரூபாயை செலவழிப்பது தவறு என்றும் அந்தப் பணத்தை மாநில சர்க்காருக்கு வழங்குங்கள், மாநிலங்களிலே எந்தெந்த திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமோ அல்லது எந்தெந்த திட்டங்களைப் போட்டால் அது எந்தெந்த முறையில் நடைபெறும் என்பதை மாநில அரசுதான் அறியுமே தவிர டெல்லியிலே இருக்கின்ற உங்களுக்கு என்ன தெரியும். ஆகவே அந்தப் பணத்தைத் தாருங்கள், நாங்கள் பார்த்துச் செலவழிக்கிறோம் என்று கேட்ட போது அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கு இருக்கின்ற அந்த உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது என்று. அப்படி அவர்கள் சொன்னபோதுதான் மாஸ்டர்-சர்வென்ட் என்ற விதத்தில் நீங்கள் பார்க்காதீர்கள், தர வேண்டியதைத் தாருங்கள் என்று சொன்னோம். அதற்குப் பிறகு என்.டி.சி.யிலே 6 ஆயிரம் கோடி ரூபாயிலே 3,500 கோடி ரூபாயை மாநிலத்திற்கு ஒதுக்கலாம், மீதியை மத்திய சர்க்காரே வைத்துக் கொள்ளட்டும் என்று கேட்டதற்கு என்.டி.சி. இணங்கவில்லை. அதற்குப் பிறகு 2 ஆயிரம் கோடி ரூபாயை மாநில சர்க்காருக்கு வழங்கலாம் என்று அவர்கள் சொன்ன பிறகு கணக்குப் போட்டுப் பார்த்ததில் ஏறத்தாழ 1,500 கோடி அதிகமாக இந்த மாநிலம் பெற முடிந்தது.

[முற்பகல் 10-00]

இன்னும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ப்ரோகிபிஷன் பாலிசி, மதுவிலக்குக் கொள்கையை கடைப்பிடிப்பதினால் ஏற்படுகின்ற இழப்பையும் நாங்கள் சுட்டிக்காட்டி, இதிலே முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்டி, அதே நேரத்தில் நீங்களும் உறுதியாக இருக்கிறீர்கள் என்பதையும் பிரதமரிடம் சுட்டிக்காட்டி, இதை கடைப்பிடிப்பதால் இரண்டு மாநிலங்கள் மட்டும் தண்டிக்கப்படுகின்ற நிலையிருந்து வருகிறது என்றும், ஒன்று குஜராத் மாநிலம், மற்றொன்று தமிழ்நாடு என்பதையும் சுட்டிக்காட்டி, அதற்கு போதுமான அளவுக்கு நிதி வழங்கவேண்டும். என்று கேட்டுக்கொண்டோம். அதை பைனான்ஸ் கமிஷன் ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சென்ற வாரம் கூட நமது முதலமைச்சர் அவர்கள், மத்தியநிதி அமைச்சர் அவர்களுக்கு, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற நிதி அமைச்சர் அவர்களுக்கு கடிதம் தீட்டியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சர்க்கார் அந்தப் பிரச்னையில் சாதாரணமாக இல்லை. மிகவும் கவனத்தோடு பணியாற்றுகிறது என்பதை அவை உறுப்பினர்களுக்கு மெத்தவும் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்

இந்த பட்ஜெட்டில் எதுவுமே இல்லை என்று சொன்னவர்களும் உண்டு, பொதுவாக ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம் வந்திருப்பது உங்களுக்குத் தெரியும், மின்சாரத் திட்டங்களுக்கு இந்த

1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

அரசு ஒதுக்கியிருப்பதைபோல், எந்த அரசும் ஒதுக்கிய தில்லை என்பதை மெத்தவும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 152 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. மின்சாரமும், கல்வியும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியம், என்பதையும், நாட்டினுடைய வளர்ச்சிக்கு இந்த இரண்டும் அடிப்படையான ஆதாரங்கள் என்பதையும் எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்.

பாசனத் திட்டங்களுக்காக 28.41 கோடி ரூபாய் ஒதுக்கியிருக் கிறோம். சின்னஞ்சிறு தொழிற்பேட்டைகள் தொழிற் கூடங் கள் அடுத்த ஆண்டு 2,000 புதிதாக ஏற்படுத்தப்படும், சாலைப் பணிக்காக குறிப்பாக சாலை பராமரிப்புக்காக 7 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேல் நிலைப்பள்ளிகளில் புதிதாக அறிவு ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்தப்படும். தனியார் பள்ளிகளிலும் இவை கட்டப் படும். இங்கு மாண்புமிகு உறுப்பினர் சந்திரன் அவர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் தான், (குறுக்கீடு) ஆம், சந்திரன் ஜெயபால் அவர்கள் என்று கருதுகிறேன், அவர்கள் கல்வி அமைச்சர் அவர்களை பாராட்டியதோடு, நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற திட்டத்தினால் பல மேல்நிலை பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பாராட்டினார்கள், அதற்காக அந்த பெருந்தன்மைக்காக நான் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இங்கு இல்லையென்றாலும் சம்பந்தப்பட்ட மெம்பர்கள் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புகுமுக வகுப்பில் இதுவரை 78 ஆயிரம் பேர்கள் படித்து வந்தனர். இப்போது புதிய முறையில் துவக்கப்பட்ட 11-ம் வகுப்பில் ஒரு லட்சத்து 14 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் புதிய மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம், இதன் அடிப்படையில் 60 புதிய சிறிய சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும். முக்கியமாக செவிலியர் பயிற்சி. இப்போது இருக்கிற குறையே இது தான். செவிலியர் அதிகமாக இல்லை என்பது. இந்தக் குறையைப் போக்குவதற்காக, செவிலியர் பயிற்சியை அதிகரிப்பதற்காக இரண்டு புதிய செவிலியர் பயிற்சித் திட்டங்கள் துவக்கப்படும். சென்னை மருத்துவ மனையில் மேற்படிப்புக்காக பட்டப்படிப் புக்காக தரங்கள் உயர்த்தப்படும், Institute of Medical Sciences டெல்லியில் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு உயர்த்தப்படும். பேராசிரியர் அவர்கள் இப்போது இங்கில்லை. அவர்களுக்கு இது மகிழ்ச்சித்தரத் தக்கதாக இருக்கும். இந்திய மருத்துவத் துறையில் ஐந்து மூலிகை பண்ணைகள் ஏற்படுத்தப்படும். இத்துடன் 20 சித்த மருத்துவ மருந்தகங்

கள் அமைக்கப்படும், 15 இந்திய மருத்துவப் பிரிவுகள் அமைப்பதற்கும் இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. ஊன முற்றவர்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயணம் அனுமதிக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் நல்ல திட்டங்களாக இல்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா? சமூதாய முன்னேற்றத் திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்கு 1,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும். 1,000 பெட்டிக் கடைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தீண்டாமைக் குற்றத்தை கண்டுபிடிப்பதற்காக எல்லா மாவட்டங்களிலும் தனிப்பிரிவுகள் காவல்துறையின் கீழ் ஏற்படுத்தப்படும். புதிதாக 15 அரிசன மாணவ விடுதிகள் அமைக்கப்படும். பிர்க்காக்களின் எல்லைகள் திருத்தியமைக்க முன் வந்தது இந்த அரசு தான், இருக்கின்ற நிலவரித் திட்டத்தை திருத்தி அமைக்க முன் வந்தது இந்த ஆட்சிதான்.

காவல்துறையைப் பொருத்தளவில், ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. யாரோ ஒரு உறுப்பினர் அங்கு பேசும்போது, இவ்வளவு பணம் எதற்காக கொடுக்க வேண்டும், அவர்கள் தான் மாமூல் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள், அவர்களுக்கு எதற்காக இவ்வளவு பணம் ஒதுக்குகிறோம் என்று திராவிட முன்னேறக் கழகத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சொன்னதாக கேள்விப்பட்டேன்....

திரு. க. சுப்பு: ஒரு கோடி ரூபாய் போலீஸ்காரர்களுக்கு எதற்கு என்று கேள்வி கேட்கவில்லை..... ஏன் யாரோ உறுப்பினர் என்று சொல்லுகிறீர்கள், குறிப்பிட்டு இன்னார் பேசினார் என்று சொன்னால் என்ன வந்துவிடும்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மகிழ்ச்சி, மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசினார்கள், குறிப்பிட்டு சொல்வதிலும் தவறு ஒன்றும் இல்லை, மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசினார்கள் என்று மீண்டும் வேண்டுமானால் சொல்லுகிறேன்..

திரு. க. சுப்பு: நான் அவர்கள் லஞ்சம் வாங்கிகொண்டு இருப்பதே அவர்களுக்கு போதும் என்று சொல்லவில்லை. யாரோ சென்னார் என்று சொல்ல வேண்டாம். நான் தான் குறிப்பிட்டேன். போலீசுக்கு 1 கோடி 37 லட்சம் என்று பெருமளவில் ஒதுக்கினால் மேலும் போலீஸ் ராஜ்யம் அமைப்பதற்குத்தான் இது உதவும் என்று சொன்னேன். அதைவிட்டுவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர், போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்கு கிறார்கள்; ஆகவே அதிக நிதி தேவையில்லை என்று சொல்லு கிறார்கள். அது நியாயம் அல்ல.

1979 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவு செய்து உட்காருங்கள். அவர் பேசிய பேச்சு என் கையிலே இருக்கிறது. மது விலக்குக் காரணமாக மாமூல் என்ற பேரில் காவல் துறையினர் ஏராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு ஏன் அதிக நிதி ஒதுக்குகிறீர்கள் என்று அவர் சொன்ன அந்தக் கருத்து நிச்சயமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கருத்தாக இருக்காது, அவர் சார்ந்திருக்கக்கூடிய கட்சியின் கருத்தாகவும் இருக்காது என்பது எனது திடமான நம்பிக்கை. காரணம், சென்ற நிதிநிலை அறிக்கையின்போது நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது காவல் துறையினருக்கு எத்தனையோ கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தோம். அவர்கள் வீடுகளுக்கெல்லாம் விளக்குகள் போட்டோம். இன்னும் தேவையான வசதிகளை எல்லாம் செய்தோம் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்களும், அந்த அடிப்படையிலேதான் இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறோம். இப்படி வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமாகவாவது, மாமூல் வாங்குகின்ற வழக்கம் அவர்களிடமிருந்து அகலாதா என்ற காரணமாகவும், அவர்களுக்கு அத்தகைய வசதிகள் செய்து கொடுப்பதற்குக் கடமைப் பட்டிருக்கின்ற கடமை உணர்வின் காரணமாகவும் அவர்களுக்கு இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர்களுக்கு உதவித் தொகை ரூ. 20 லிருந்து ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது..........

திரு. க. சுப்பு : அவரைப் படித்துக் காட்டச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வலுக்கட்டாயமாக இப்படி எழுந்து பேசுவது முறைதானா? பர்மிஷன் கேட்டுப் பேசுவது தான் முறை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நாளைக்கு பிரிவிலெஜ் மோஷன் கொண்டு வரச்சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். தாங்களாகவே எழுந்து பேசக் கூடாது. இப்படி எழுந்து பேசுவது என்ன முறை?

திரு. க. சுப்பு : நானாகத்தான் எழுந்து பேச முடியும். யாராவது தூக்கிவிட முடியுமா, என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன பேச்சு? நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, என் அனுமதியைப் பெற்றுப் பேசியிருக்க வேண்டும். உறுப்பினர் இப்படிப் பேசுகின்ற முறை சரிதானா? உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: முதியோர் உதவித் தொகை ரூ. 20 லிருந்து ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டது. பொங்கல், சுதந்திர தினங்களில் கைத்தறி வேட்டி அல்லது சேலை என்றும், பார்வையற்ற ஏழை எளியவர்களுக்கு உதவித் தொகை வழங்குவோம் என்றும் இங்கே நான் இந்த நிதி நிலை அறிக்கையில் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். இத்தனையையும் நிறை வேற்றுவதற்காக நிச்சயமாக இந்த அரசு முயற்சிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு வேறு சில கருத்துக்களும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசும்போது, அரசு சைக்கிள் வாங்குவதற்கு ரூ.400-ம், ஸ்கூட்டர் வாங்குவதற்கு ரூ. 4,500 என்றும் இங்கே நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி சைக்கிள் வாங்குவதானால், 400 ரூபாயிலே சைக்கிள் வாங்குவதற்கு இயலாது என்றும், குறைந் தது ரூ. 700 வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனை சைக்கிள்கள் ரூ. 400-க்கு தேவைப்படுமோ, அத்தனை சைக்கிள்களையும் நான் 400 ரூபாய்க்கும் குறைந்த அளவுக்கு வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏராளமான பாக்டரிகளிலே இன்றைக்கு ரூ. 350, 370, 425 என்ற அளவிற்கு சைக்கிள்கள் வாங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல தற்போது சைக்கிள் விலை ரூ. 367 லிருந்து (திரு .சி. ஆறுமுகம் குறுக்கீடு) தற்போது நான் இதற்கான கணக்கைச் சொல்லுகிறேன். எனவே தயவுசெய்து உட்காருங்கள். தற்போது சைக்கிளின் விலை ரூ. 367 லிருந்து ரூ. 440 வரையிருக்கிறது. விவரங்கள் இருக் கின்றன. ஹீரோ 367 ரூபாய்; அட்லாஸ் 397 ரூபாய்; பிலிப்ஸ் 449 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆகவே, அரசு முன் பணம் ரூ. 400-ல் சைக்கிள் வாங்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

ஸ்கூட்டருக்கு வழங்கப்படும் முன்பணம் குறைவு என்று எடுத் துச் சொன்னார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மோபெட் வாகனங்கள் 2,800 ரூபாயிலிருந்து 3,300 ரூபாய் வரை கிடைக்கிறது. பலரகங்கள் சுவேகா, டான்சி இன்னும் பல மாடல்கள் கிடைக்கின்றன. ஸ்கூட்டரின் விலை 5,650 ரூபாயிலிருந்து 6,100 வரை இருக்கிறது. அரசு அளிக்கும் கடன் தொகையோடு இயன்ற அளவு அவர்களும் கொஞ்சம் பணம் சேர்த்து கொஞ்சம் விலை அதிகமாக உள்ள வாகனங்களை வாங்கிக் கொள்ளலாம் என்பதைப் பணிவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பின்

கள் என்னிடத்தில் இருக்கின்றன. ஆனந்தா எலக்ட்ரிகல் கம்பெனி சைக்கிளுக்கு விலை 360 ரூபாய் என்ற பில் இருக்கிறது; ஹெர்குலஸ் 420 ரூ. பில் இருக்கிறது ; அதே போல் இன்னொரு சைக்கிள் 350 ரூபாய் பில் இருக்கிறது. சைக்கிள் வாங்க முடியாது என்று சொன்னார்கள். சைக்கிள் வாங்கியதற்கு பில்கள் இருக்கின்றன. (குறுக்கீடு). இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் டையர் கூட இருக்காது என்று கூட சொல்லக்கூடும். நான் ஒழுங்கான சைக்கிளைச் சொல்லுகிறேன். (குறுக்கீடு). அதிகாரிகள் வந்து என்னை தவறான திசைக்கு திருப்ப முடியாது. தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள். மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சுப்பு அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள். பேர்ஃபுட் டாக்டர்ஸ் திட்டத்தை இதற்கு முன்னால் இருந்த அமைச்சர் திரு. ராஜ்நாராயண் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சொல்லியிருக்கிறது. ஏன் என்று கேட்கக் கூடும். தகுந்த படிப்பு இல்லாமல் கிராமப் புறங்களில் சென்று சிகிச்சை என்ற பெயரால் அவர்கள் கிராமப் புறங்களில் சிகிச்சை செய்கிறபோது பாப்புலேஷன் குறையத்தான் அது பயன்படுமே தவிர, நிச்சயமாக உயிர்களைக் காப்பாற்ற அது பயன்படாது என்ற அச்சம் இருக்கிறது. இது ஒன்று. இரண்டாவது படித்த டாக்டர்கள் ஏராளமாக வேலை இல்லாமல் இருக்கும்போது, வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருக்கும்போது எதற்காக நாம் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. ஆகையால் அந்தப் பிரச்னை எழவில்லை.

திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். 35 லட்சம் ரூபாய் செலவில் ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்றும் மூலப்பொருள் எங்கே அதிகமாகக் கிடைக்கிறதோ அந்தப் பகுதியிலே இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். கன்னியாகுமரியிலேயே அதை அமைக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார் என்று நான் கருதுகிறேன்.

நான் திரு. சுவாமிதாஸ் அவர்களுக்கு மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது கன்னியாகுமரியிலே அமைக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வேளை தெரிந்துதான் அவர்கள் அதைப் பேசியிருக்கக்கூடும், எழுப்பி இருக்கக்கூடும், அந்தப் பெருமையைப் பெறவேண்டுமென்று பேசியிருக்கக்கூடும். நல்லது, அந்தப் பெருமையை அவர் பெறுவதிலே எனக்கு அபிப்ராய பேதம் கிடையாது.

அடுத்து இங்கே திரு. சுவாமிதாஸ் அவர்கள், 200 படகுகள் ஏற்கனவே அந்த இலாகாவில் இருக்கிறது, அதை மீன்பிடி தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தைக்கூடச் சொன்னார்கள். மீனவர்களுக்குப் படகுகள் வழங்குகிற திட்டம் ஏ.ஆர்.டி.சி. மூலமாக வங்கிகள் மூலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, பல காரணங்களினால் இந்த ஆண்டு ஏ.ஆர்.டி. சி. மூலமாகக் கொடுக்கப்பட முடியவில்லை............

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை........

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இங்கே காட்டிய பில்லில் டாக்டர் கே. சமரசம் என்ற பெயர் போடப்பட்டிருக்கிறது. இது சமரசம் சைக்கிள்களை வாங்கிய ஒன்றா அல்லது அவர் அவைகளை விற்றதைப் பற்றியதா? ஏனென்றால் டு, என்று போடப்பட்டு அதிலே யாருடைய பெயரும் போடப்படவில்லை, 2,000 ரூபாய்க்கு போடப்பட்டிருக்கிறது. சமரசம், காவேரிப்பட்டணம் என்று இருக்கிறது, அது இவருடைய கம்பெனியா அல்லது இவர் வாங்கி மீண்டும் யாருக்காவது விற்றாரா?

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் ஒரு சந்தேகத்தை கிளப்பியிருக்கிறார். நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 400 ரூபாய்க்கு சைக்கிள் கிடைக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொல்லிவிட்டு, வாங்க முடியும் என்று யாராவது காதிலே பூ வைத்திருப்பவர்களிடம் போய்ச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் அன்றைய தினம் ஊருக்குச் சென்றபோது அங்கே உள்ள கடையில் எந்த எந்த சைக்கிள்கள் என்ன என்ன விலைக்கு கிடைக்கிறது என்று கேட்டேன். ஒரு கிராமத்திலே உள்ள விற்பனை கடையிலே நான் கேட்டபோது சொன்ன விலைகள் அவை கொட்டேஷன். இன்னும் ஒட்டு மொத்தமாக வாங்கவேண்டுமென்றால் கம்பெனியிலிருந்து வாங்கவேண்டுமென்றால் இன்னும் குறைந்த விலையில் வாங்க முடியும் என்பதை டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே நிதி அமைச்சர் அவர்கள் காட்டியபோது பில் என்று சொன்னார்கள். அதனால் தான் நான் கேட்டேன். நீங்கள் வாங்கிய பில்லா அல்லது விற்ற பில்லா என்று கேட்டேன். ஏனென்றால் 5, 6 சைக்கிளுக்கு 2 ஆயிரம் ரூபாய் அளவிற்குப் போடப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் சைக்கிள் கடை வைத்திருக்கிறீர்களா அல்லது நீங்கள் வாங்கி விற்றிருக்கிறீர்களா என்று கேட்டேன்.

1979 மார்ச் 23]

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அதிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அவர்கள் கொட்டேஷன் அனுப்பியிருக்கிறார்கள். நான் வாங்கி விற்றுக் கொண்டிருக்கவில்லை, விற்கவில்லை, கடை வைத்துக் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அது பில் அல்ல, கொட்டேஷன் என்று சொல்கிறீர்கள், ஆனால், நிதியமைச்சர் அவர்கள் பேசும் போது பில், பில் என்று சொன்னார்கள், ஆனால், தாங்கள் கொட்டேஷன் என்று சொல்கிறீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, யாராவது ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பினால் முறைப்படி அவர்களை முதலிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும், ஆனால், அப்படித் தாங்கள் அனுமதிக்க வில்லை, நான் முதலிலேயே எழுந்துநின்று கேட்டேன், தாங்கள் அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்து இனிமேல் அந்த முறையைத் தாங்கள் பின்பற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நிதியமைச்சர் அவர்கள் ரப்பர் தொழிற்சாலையைப்பற்றி அறிவித்தார்கள். ஏற்கனவே எங்கள் மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக அது இருக்கிறதே அதைப்பற்றி என்ன நிலைமை?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதைப்பற்றிச் சொல்கிறேன். அந்த ரப்பர் தொழிற்சாலை எப்படி ஆரம்பிக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும், அதனுடைய கதி என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும், எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது அதை நடத்துகிறவர்கள் எந்தக் கதிக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். அதிலேயும், அங்கே ரப்பர் தொழிற்சாலைக்கான மூலப்பொருட்கள் அங்கே கிடைக்காது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலையை நடத்துவதற்கு இயலாது என்று பீஸபிளிட்டி ரிப்போர்ட் இல்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லியதற்குப் பிறகு ரப்பர் விளைகின்ற மாவட்டம் திரு. ஜேம்ஸ் அவர்களின் மாவட்டத்தைச் தேர்ந்து எடுத்து இருக்கிறோம என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்றால் அங்கே மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவா என்றும் அதற்கேற்ற அளவிற்கு அந்தப் பகுதி நல்ல பகுதி தானா என்றும் அது மட்டுமல்ல, போதுமான அளவிற்குத் தண்ணீர் வசதியிருக்கிறதா என்றும் இவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலே கிடைக்கிற ரப்பர், குவாலிட்டி ரப்பர், அப்படிப்பட்ட தரமான ரப்பர் வேறு எந்தப் பகுதிலேயும் இல்லை என்றகாரணத்தால் அங்கே தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கிறது, ஒன்று, மற்றொன்று,

தொழிற்சாலையை நடத்துவதற்கு ஏராளமாகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்துதான் இந்த ஆட்சி அப்படி முடிவெடுத்திருக்கிறது. ஏற்கனவே வீழ்ந்துவிட்ட, எழுந்து வரமுடியாத, செத்துப் போனதாக அதிகாரிகளால் அல்ல நிபுணர்கள் நம்புகிற அந்தத் தொழிற்சாலையைத் தூக்கிக் கொண்டு வலம் வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் என்னிடம் கேட்கக் கூடாது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : அங்கே, தண்ணீர் வசதி உண்டு. அங்கே தொழிற்சாலைக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டடங்களை வேறு தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தேகத்தை எழுப்ப ஆரம்பித்தால் விவாதம் முடியாது.

(முற்பகல் 10—20)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நீங்கள் பிறந்த மாவட்டம் என்று சொல்கிறபொழுது பெருமைக்காகச் சொன்னேனே தவிர, அங்கேதான் நானும் பிறந்தேன். அங்கேதான் தேசீய விநாயகம் பிள்ளை அவர்களும் பிறந்தார்கள், ஜீவாவும் அங்கேதான் பிறந்தார், செய்குத் தம்பி பாவலரும் அங்கேதான் பிறந்தார், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையும் அங்கே தான் பிறந்தார். ஆகவே, அதுவல்ல பிரச்னை.

அதற்குப் பிறகு பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இல்லையா, சரி அவர்கள் பேசும்பொழுது சொல்லியிருக்கிறார்கள், விடுதலை வீரர்களுக்கு ஓய்வூதியம் 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது, மாநில அரசின் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டும் இந்த உயர்வு அனுமதிக்கப்பட்டிருக்கிறது, இது மத்திய அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அவர்கள் கூறியுள்ளார்கள்.

நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, தற்பொழுது ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றவர்கள் மத்திய அரசு ஓய்வூதியம் 200 ரூபாயும், மாநில அரசின் ஓய்வூதியம் 75 ரூபாயும் ஆக மொத்தம் 275 ரூபாய் இன்றைக்குப் பெற்றுக் கொண்டி

ருக்கிறார்கள். அவர்களின் மொத்தத் தொகை, 1,800. மூன்று மாதங்களுக்கு மேல் ஆறு மாதங்கள் வரையில் சிறைத்தண்டனை பெற்றவர்கள் மாநில அரசு ஒய்வூதியமாக ரூபாய் 75 மட்டும் பெற்று வருகிறார்கள். எனவே, அவர்களுக்குத் தகுந்த பலன் கிட்ட வேண்டுமென்பதற்காக அந்தத் தியாகிகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் 75 ரூபாயாக இருந்த ஒய்வூதியத் தொகை 100 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக நமது மாரிமுத்து அவர்கள்கூடப் பாராட்டு தெரிவித்தார்கள். அப்படிப் பெறுபவர்களின் தொகை, 4,900 என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இன்னொன்றையும் இந்த நிதி நிலை அறிக்கையிலே நான் தெரிவித்திருப்பதை ஏனோ எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தொடாமல் விட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. தமிழுக்காக, அதன் பாதுகாப்புக்காகத் தங்கள் இன்னுயிரை நீத்தவர்களுக்கு, அவர்களது தியாகத்தை மதிக்கிறோம் என்பதைக் கணக்கெடுத்துக் கொண்டு அதை அனுமதிக்கிறோம் என்ற அளவிற்கு அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி தரப்படும் என்றும், தாயகத்தோடு சேர வேண்டுமென்ற போராட்டத்திலே ஈடுபட்ட குமரி மாவட்டத்தைச் சேர்ந்த தியாகிகளுக்கு வழங்கப்படும், அதற்கான ஒரு சட்ட முன்வரைவு இந்த அவைமுன் தாக்கல் செய்யப்படும் என்ற கருத்தை இந்த நிதி நிலை அறிக்கையில் நான் தெரிவித்திருந்தேன். அதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பாராட்டுவார்கள் என்று நான் ஆவலோடு காத்திருந்தேன். அதிலும் ஏமாற்றம்தான் எனக்குப் பரிசாகக் கிடைத்தது. என்றாலும், உள்ளூர அவர் பாராட்டுவார் என்ற மன நிம்மதியை இதன் மூலம் நான் அடைய விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு வரி, வரி என்று இங்கே பெரிய வரியாகச் சொன்னார்கள். இந்த பட்ஜெட்டைப் படித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியும், இதிலே கருத்துக்கள் வரி வடிவமாக வந்திருக்கின்றனவே தவிர, பெருமளவில் வரிகள் வரவில்லை. மேலேயிருக்கிற பட்ஜெட்டையும் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அங்கே வரிகளைத் தவிர எதுவுமில்லை, இங்கே அது இல்லை. அப்படிப் போடப்பட்டிருக்கின்ற வரி தேங்காய்க்கு, அதற்குப் பிறகு போடப்பட்டிருக்கின்ற வரி தீப்பெட்டிக்கு, அதற்குப் பிறகு சர்சார்ஜ் என்ற அளவில் மூன்று அயிட்டங்களில் வரி போட்டிருக்கிறோம். அதன்மூலம் இந்த அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வருமானம் சுமார் இரண்டு கோடி ரூபாய்த் தான்.

இங்கே நீங்கள் வரி போடக் கூடாது என்கிறீர்கள். ஆனால் டெல்லியிலே செல்லும் பொழுது, resource mobilisation எங்கே என்று கேட்கிறார்கள். அங்கே நீங்கள் ஏன் வரி போட்டு, வரி

ஆதாரத்தைப் பெருக்கமாட்டேன் என்கிறீர்கள், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தை நம்பியிருக்கிறீர்களே என்று அவர்கள் கேட்கிறார்கள். நாங்கள் அவர்களுக்குத் தெரிவிப்பதெல்லாம், தமிழகத்தைப் பொறுத்தவரை, பெர் காப்பிட்டா டாக்சேஷனை'ப் பொறுத்தவரை தமிழகம்தான் உச்சாணி கட்டத்திலே இருக்கிறது என்பதைச் சொல்லி, எங்கே வரி போடுவது என்பதையாவது நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் அங்கே வரி போட முயற்சிக்கிறோம் என்பதுதான். இங்கே கூட சிலபேர் பேசினார்கள், திரு. மாரிமுத்து அவர்கள் கூட பேசினார்கள், போட வேண்டிய இடத்தில் போடுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். போடவேண்டிய இடத்திலெல்லாம் போட்டாயிற்று. இனிமேலும் வரி போட்டு மக்களை வாட்டுகின்ற ஆட்சியாக இது அமைய முடியாது. ஆகவேதான், ஓரளவுக்காவது சோர்ஸ் மொபிலைசேஷனில் நாம் குறிப்பாக இருக்கிறோம் என்பதை மத்திய சர்க்கார் தெரிந்துக்கொள்வதற்காக சில இனங்களில் வரி போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடப்பட்ட வரிகளில் தேங்காய் மீது போடப்பட்ட வரி ஒன்றாகும். இந்த மாநிலத்தில் மொத்தம் 1,525 தேங்காய் வணிகர்கள் இருக்கிறார்கள். ஆண்டொன்றுக்குள்ள வணிகத் தொகையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ரூ. 25,000-க்குமேற்படாத வணிகத் தொகை உள்ள வணிகர்களின் எண்ணிக்கை 413. ரூ. 25,000 முதல் ரூ. 50,000 வரை உள்ளவர்கள் தொகை 293. ஆக, இவர்களெல்லாம் சிறு வியாபாரிகளாக இருக்கிறார்கள். மொத்தம் 1,525. அதில், இவர்கள் மட்டும் 712 பேர்கள் வருகிறார்கள். குறிப்பாகச் சொன்னால், ஏறத்தாழ 60 சதவிகிதம் இதிலே அடங்குகிறது. ஆகையினாலே, போடப்பட்டிருக்கிற வரி நிச்சயம் அவர்களைப் பாதிக்காது என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கடுத்து, ரூ. 50,000-லிருந்து ரூ. 1 இலட்சம் வரை 135 பேர்கள். ரூ. 1 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரை 147 பேர்கள். ரூ. 3 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரை 135 பேர்கள். ரூ. 10 இலட்சத்திற்கு மேல் 82 பேர்கள். இவர்களைத்தான் இந்த வரி பாதிக்குமே தவிர, எந்தக் காரணத்தைக் கொண்டும் இது சிறு தேங்காய் வியாபாரிகளை, வணிகர்களைப் பாதிக்காது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு நெருப்புப் பெட்டிக்கு வரி போட்டுவிட்டார்கள், ஐயோ, என்றெல்லாம் முறையீடு செய்தார்கள். நான் சிலவற்றைப்பற்றி பேசும்பொழுது, அந்தப் பொருளைப் பார்த்துவிட்டு, பதறிவிட்டு வரி போட்டு விட்டார்கள் என்று சொல்வதைவிட அதன் பின்னாலே இருக்கிற பின்னணியைக் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை தயாரிப்புபற்றி 2 நிமிடத்திற்குள் நான் விளக்க விரும்புகிறேன்.

1979 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

1—4—1966 முதல் அப்பொழுது எந்த அளவிற்கு தீப்பெட்டிகளின் வணிகத் தொகை இருந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன், ரூ. 2.79 கோடி. ஆனால், இன்றைக்கு அது படிப்படியாக வளர்ந்து எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது? 2,545 சதவீதம் அளவுக்கு அது உயர்ந்திருக்கிறதென்றால், ரூ. 2.79 கோடியிலேயிருந்து ரூ. 71 கோடி என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இந்த அளவுக்கு வளர்ந்த இந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் ஓரளவிற்கு பணம் இந்த அரசிற்கு வரியாகத் தந்தால் என்ன கெட்டுப் போகும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்கிறேன், மத்திய சர்க்கார் சார்பில் அண்மையில் சரண் சிங் அவர்கள் வரி விதிவிலக்கு அளித்ததற்குப் பிறகு அந்த வியாபாரிகள் இதனால் பெறுகின்ற மொத்த லாபம், நிகர லாபம், அதிகமாக பெறுகின்ற லாபம்—அதையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்; அது கூட சாதாரணமான லாபம் அல்ல, ஏறத்தாழ ரூ. 18,000 ஆண்டொன்றுக்கு அதிக லாபமாகப் பெறுகிறார்கள். ரூ. 18,000. ஆனால், இன்றைக்கு இந்த வரி விதிப்பு காரணமாக, அரசாங்கத்திற்கு அவர்கள் ஆண்டொன்றுக்கு எவ்வளவு தர வேண்டியிருக்கும் என்று சொன்னால் ரூ. 2,500. நான் கேட்கிறேன், சமூகக் கடமை என்ற முறையில், இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள், இவ்வளவு பெரிய தொழிற்சாலையாக வளர்ந்த பிறகு, ரூ. 2 கோடியிலிருந்து ரூ. 71 கோடி ஆக வளர்ந்ததற்குப் பிறகு, ஆகியதற்குப் பிறகு, பூதாகரமாக விசுவரூபம் எடுத்ததற்குப் பின்னால், ஏன் அவர்கள் இந்தத் தொகையைக் கொடுக்கக் கூடாது ?....

திரு. ரா. உமாநாத் : சமூகக் கடமைகளுக்காக ஏன் கொடுக்கக் கூடாது என்று அவர்கள் கேட்கிற கேள்வி நியாயம். ஆனால், அவர்கள் கட்ட மாட்டார்கள், அந்தத் தொகையை It will be passed on to the C nsumers. வாங்குபவர்களுக்குத்தான் அது டிரான்ஸ்பராகும். மறுபடியும் பாதிக்கப் படுபவர்கள் வாங்குபவர்கள்தான்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : முதலமைச்சர் சார்பாகவும், இந்த அரசின் சார்பாகவும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த விலையை ஏற்றுவதற்கு இந்தச் சர்க்கார் அனுமதிக்காது அப்படி அவர்கள் ஏற்றுவார்களானால், அவர்கள் சிறைக்கூடத்தின் கம்பிகளை எண்ண வேண்டும். (குறுக்கீடு). விலையை ஏற்றுவதற்கு அனுமதிக்காது. ஆகையினாலே, அந்தப் பயம் தேவையில்லை.

ஒத்துக் கொள்ளும் என்ற அடிப்படையில் மீண்டும் அதனை முயற்சி எடுக்க வேண்டும், குறிப்பாக கோயில்கள் ஆதினங்கள், மடங்கள் இவற்றிற்கு சொந்தமான நிலங்கள் அரசினுடைய ஆதிக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு, நாட்டுடமையாக்கப்பட்டு உழைப்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிட்டப்பா, இப்படிப்பட்ட பிரச்னைகளை ஒவ்வொருவரும் எழுப்பினால் விவாதம் முடிவிற்கு வராது. பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்கள் கேட்பதற்கு நிறைய வாய்ப்பு மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் போது இருக்கிறது. ஆகவே, இப்படி ஒவ்வொருவரும் தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டு, விளக்கங்களைத் தந்துக் கொண்டு இருந்தால், மற்ற நிகழ்ச்சிகள் நடைபெற முடியாது. தயவுசெய்து அனைவரும் அமருங்கள். திரு. கந்தசாமி....

திரு. கே. கந்தசாமி : நான் மிகவும் வேதனையோடு இந்த அரசுக்கும், மற்றவர்களுக்கும் இந்த அவையின் மூலம் ஒரு விளக்கம் கேட்டுப் பெற கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கந்தசாமி, தாங்கள் என்ன பேசப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். இன்று இறுதி துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்கிற போது தங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. அப்போது அதைச் சொல்லுங்கள். இப்போது எல்லோரும் பேச நினைத்தால் நாம் நேற்றைக்கு எடுத்த முடிவுப்படி நிகழ்ச்சிகளை முடிக்க முடியாமல் போய்விடும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. என். கிட்டப்பா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். (திருவாளர்கள் கே. கந்தசாமி, ரா. கிருஷ்ணன், எம். ஆறுமுகம் ஆகியோர் எழுந்து நின்றனர்) தயவு செய்து உட்காருங்கள். திரு. கந்தசாமி உங்களுக்கு வாய்ப்பு இருக்கிற போது அதைப் பற்றி பேசுங்கள். தயவுசெய்து இப்போது உட்காருங்கள். அறிவிப்பு—1979-80 ஆம் ஆண்டு கூடுதல் மானியக் கோரிக்கை........

திரு. கே. கந்தசாமி : நான் நேற்றைக்கே கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு இறுதி துணை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள்.

1979 மார்ச் 23]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆப் ஆர்டர், உட்காருங்கள்.

திரு கே. கந்தசாமி: நான் எதிர்க் கட்சித் தலைவரிடத்தில் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை.

திரு. கே. கந்தசாமி: எனக்கு மட்டும் அனுமதி இல்லை என்று சொன்னால் எப்படி? எல்லோருக்கும் அனுமதி கொடுக்கிறீர்கள். ஒருவருக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதியா? இது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுபவம் உள்ள உறுப்பினர் இப்படி பேசுவது முறையல்ல. தயவு செய்து தாங்கள் அமர வேண்டும். திரு மு. ஆறுமுகம் நீங்களும் அமருங்கள்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கடைசியாக நேற்று நடந்த விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறைகூவலை வைத்தார்கள். அது இன்றைக்கு அவர்களால் நடத்தப்படுகின்ற ''முரசொலி'' பத்திரிக்கையில் பெரிதாக அச்சடிக்கப்பட்டு வந்து இருக்கிறது. 25,000 ரூபாய் புரண்டது என்று போட்டு வந்து இருக்கிறது. நேற்றைக்கு ஆதாரம் என்னிடம் இருக்கிறது, நான் நிருபித்துக் காட்டுகிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். மெத்த மகிழ்ச்சி.

அந்த ஆதாரங்களை, அவரும் முதலமைச்சரும் உட்கார்ந்து பேசி, அந்த ஆதாரத்தை முதலமைச்சருக்கு தரட்டும், அவருக்கு முதலமைச்சரிடம் நிச்சயமாக நம்பிக்கை உண்டு, அது பத்திரமாக இருக்கும், அந்த ஆதாரத்தின் அடிப்படையில் அந்த புரண்டது என்று சொல்லப்பட்டதே ரூ. 25,000, அதற்கும் இங்கே உட்கார்ந்து இருக்கிற அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நிருபிக்கப்பட்டால், அமைச்சரின் சார்பாக உறுதி அளிக்கிறேன், அவர் அமைச்சர் பதவியை ராசினாமா செய்வார் என்பதையும், சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பையும் அவர் ராசினாமா செய்வார் என்றும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் மாறாக நிருபிக்கப்படவில்லையென்றால் உங்கள் நிலை என்ன என்பதை தயவு செய்து விளக்கக் கேட்கிறேன்.

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆதாரங்கள் தேவை என்றார்கள். ஆதாரங்களை, சாட்சியங்களைச் சொல்ல, அது குறித்து விசாரிக்க ஒரு விசாரனை கமிஷன் போடுங்கள். அந்த நீதிபதியிடத்தில் அந்த சாட்சியங்களையும், ஆதாரங்களையும் எப்படி கையும் களவுமாக பிடிப்பட்டார்கள், பிறகு என்னென்ன நடந்தது, எப்படி சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள், மீண்டும் சேர்க்கப்பட்டார்கள் என்ற விவரங்களை எல்லாம் நான் அந்த நீதிபதியிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு கி. மனோகரன்: நான் கேட்ட கேள்விக்கு பதில் வரவில்லை (குறுக்கீடு). நான் சொல்கிறேன், பதில் வரவில்லை. அவர்கள்

திரு மு. கருணாநிதி: தலைவரவர்களே, முதல் பட்ஜெட் கூட்டத்தில் குமாரபாளையத்தில் நூல் விநியோகத்தில் நடைபெற்ற ஊழலைப்பற்றி பேசினேன். ஆதாரங்களை முதலமைச்சரிடம் கொடுத்தேன், நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்த ஆதாரங்கள் எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, நீதி விசாரணைக்கு அனுமதியுங்கள்; அவர்களிடம் சாட்சியங்களைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, முதலமைச்சரிடம் தந்திருக்கிற குறிப்புகள் எங்கே, எப்படி கவனிக்கப்பட வேண்டுமோ அங்கே அந்த நிலையில் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதைப்பற்றி நான் சொல்கிறேன். இந்த 25,000 ரூபாயை யார் வாங்கினார்? அமைச்சர் வாங்கினார் என்று நிருபிக்கப்பட்டால் அவர் அமைச்சர் பதவியை மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர் பதவியையே இராஜிநாமா செய்யத்தயார் என்று சொல்லியிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவரால் குற்றச்சாட்டை நிருபிக்க முடியாமல் போனால் அதற்கு என்ன செய்யப்போகிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு மு. கருணாநிதி: நீதி விசாரணையில் எவ்வளவு பொறுப்போடு நடந்துகொண்டீர்கள் என்ற இலட்சணம் எல்லாம் தெரியும். ஜனாதிபதியிடம் குற்றச்சாட்டைக் கொடுக்கும்போது எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, சர்க்காரியா கமிஷனில் வாக்குமூலம் கொடுக்கும்போது அதற்கு எல்லாம் நான் பொறுப்பல்ல, சேலத்திலே உள்ள வழக்கறிஞர் கண்ணன்தான் பொறுப்பு என்று சொன்னதெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே. இந்தப் பிரச்சினையில் நீதிபதியைக்கொண்டு விசாரணை நடத்த ஏற்பாடு செய்யுங்கள்; நான் அங்கே நிருபிக்கத் தயார்.

1979 மார்ச் 23]

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன்: எம்.எல்.ஏ. பதவியில் இவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பது இப்போது தான் தெரிகிறது (ஆளும் கட்சியினர் ஆரவாரம்) அதுபற்றி மிக்க மகிழ்ச்சி. (குறுக்கீடு). நான் சொல்வதைக் கேட்டு விட்டு அவர்கள் பதில் சொல்லலாம்.

சர்க்காரியா கமிஷனில் சொல்லப்பட்டது ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டபோதும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் மேடைகளில் பேசிய பேச்சின் மூலம் தெரியும். நான் பேசிய பேச்சுக்கள் பத்திரிக்கைகளில் வந்திருக்கின்றன. தேவையா னால் பத்திரிக்கையில் வந்திருப்பதைக் காண்பிக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யார், எதற்கு உடன் பட்டவர்களோ அவர்கள் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்வார் கள் என்று சொல்லியது தெளிவாக வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது என்னுடைய இலட்சணம் எல்லாம் தெரியும் என்றார். என்னுடைய இலட்சணத்தைப்பற்றி நான் கண்ணாடியில் பார்த்துக்கொள்கிறேன்; அவரும் பார்த்துக் கொள்ளட்டும்.

திரு மு. கருணாநிதி: ஜனாதிபதியிடம் கொடுத்த புகாரிலே நானே எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று நம்முடைய முதலமைச்சர், அன்றைக்கு எம்.ஜி. இராமச்சந்திரன் என்று கையெழுத்திட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நானே பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று அதில் குறிப்பிடப் பட்டிருக்கிறது, சர்க்காரியா கமிஷன் முன்னால் வாக்கு மூலம் கொடுத்தபோது நான் அதற்கு பொறுப்பல்ல; சேலம் கண்ணன்தான் பொறுப்பு. அவரைத்தான் கேட்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

எம்.எல்.ஏ. பதவியில் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இந்த சட்டமன்றமே செத்துவிட்டது என்று சொன்னவர் பதவி பறிபோகாமல் இருக்க இரண்டு மாதம், மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிலே இருந்து கையெ ழுத்து போட்டுவிட்டு, தவறாமல் சம்பளம் பெற்றுக் கொண்டதை (எதிர்க்கட்சியினர் ஆரவாரம்) இந்த மன்றமும் அறியும்; மக்களும் அறிவார்கள். (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர் களே, எதிர்க்கட்சித் தலைவர் நல்ல முறையில்

(கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தரப்பினர் இப்படிப் பேசக்கூடாது (குறுக்கீடு) அவர்கள் தட்டினார்கள்: இங்கே சத்தம் போட்டார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றால், எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படிச் செய்யலாம் என்றால் தாராளமாகச் செய்யட்டும், செய்துகொண்டே இருக்கட்டும்.

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன்: நான் கொடுத்த புகாரில் சில குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்டியிருக்கிறேன். நான் இன்னும் அதைத் தட்டிக்கழிக்கவில்லை. அதுபற்றி யார் சாட்சி சொல்ல முன்வருகிறார்களோ அவர்கள் குற்றத்தை நிருபிக்க முடியாமல் போய்விட்டால் நிச்சயமாக இந்த பதவி எனக்குத் தேவையில்லை. நான் இதில் பின்வாங்கவில்லை.

இங்கே சொல்லவிரும்புவது, இந்தப்பிரச்சினையின் முடிவு என்ன? நீதி விசாரணை வைக்க சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் மீது குற்றச்சாட்டு. அது பத்திரிக்கையில் வெளியாகி, அவர்கள் நிருபிக்கப்பட்டால் பதவியை இராஜிநாமா-சட்டமன்ற உறுப்பினர் பதவியையே இராஜிநாமா செய்யத்தயார் என்கிறார்கள். ஆனால் குற்றஞ்சாட்டியவர் அதை நிருபிக்க முடியாமல் போனால்இவ்வளவு பெரிய பழியைச் சுமத்தியவர் இராஜிநாமா செய்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டுவிடுவாரா என்று கேட்கும்போது இன்னும் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இந்த சட்டமன்றம் செத்துவிட்டது என்று நான் சொன்னேன்; ஆனால் பணத்தை மட்டும் வாங்கிக்கொண்டு போனேன் என்று சொன்னார்கள். சட்டமன்றம் செத்துவிட்டது என்றால் அது என்ன அடிப்படையில் என்பதை நான் பலமுறை விளக்கி இருக்கிறேன். இரண்டு தலைவர்கள் இருந்த அந்த நிலையில், சட்டமன்றம் சட்டமன்றத்துக்குரிய நியாயமான வரன்முறையில் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி என்று தெளிவாகக் கூறினேன்

அப்போது நான் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தேன். பிறகு இந்த சட்டசபைக்கு மீண்டும் உயிர் வரும் என்ற எண்ணத்தில் வழக்கு மன்றத்திற்கு போய் இருக்கிறேன். ஆட்சியும் இறுதியில் டிஸ்மிஸ் ஆகிவிட்டது. நான் வாங்கிய சம்பளமும் நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்கிறேன். நான் இப்போது இங்கே வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறேன் என்றால் ஜனநாயகத்தில் நாம் எதை செய்யவேண்டும் என்று மக்களிடத்தில் சொல்கிறோமோ அதை நீங்களே செய்யுங்கள் என்று மக்கள் முன் வந்து ஆதரவு தந்தபோது என்னால் முடியாது என்று போகின்ற கோழைத்தனம் எங்களுக்குக் கிடையாது; நாங்கள் அதற்குத் தயாராக இல்லை. ஆகவே பதவி ஏற்றுக்கொண்டு

உட்கார்ந்து இருக்கிறேன். மீண்டும் அடக்கத்தோடும், மரியாதையோடும், பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த எம்.ஜி.ஆருக்கு இத்தகைய பதவிகளில் ஆசை கிடையாது. முன்பு எனக்குக் கிடைத்த எம்.எல்.சி. பதவியையே ராஜினாமா செய்தேன். அப்போது எத்தனையோ பேர் கேட்டார்கள், அப்போது நான் வேண்டாம் என்று சொல்வதற்குரிய காரணங்களைச் சொன்னேன். அப்போதிருந்த நல்ல கருணாநிதிக்கு அவைகள் அனைத்தும் நிச்சயமாகத் தெரியும். ஆனால் இன்றைய தினம் இந்த அரசாங்கத்தின் மீது எப்படியாவது பழி சுமத்திவிடவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள். அன்றையதினம் நான் எம்.எல்.சி. பதவியை வேண்டாமென்று மறுத்து, அண்ணா அவர்களிடம் நான் என்ன சொன்னேன் என்பது அவர்களுக்குத் தெரியும். இப்போது நடைபெறுகின்ற இந்த விவாதங்களின் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டிய உண்மை தெரிந்தாக வேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே கேட்ட கேள்வியை எழுத்தில், பெரியகொட்டை எழுத்தில் அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறது. விசாரணையில் இருந்து இந்த அரசு பின்வாங்காது, பின்வாங்க நாங்கள் தயாராக இல்லை. நீதி விசாரணை நடத்துவதற்காக ஒரு நீதிபதியை நியமிப்பதற்கு நாங்கள் தயார், ஆனால் அப்படிப் பணம் 25 ஆயிரம் ரூபாயை, அமைச்சராக இருக்கின்ற திரு. சௌந்திரராஜன் அவர்கள் பெற்றவர்கள் என்பது நிரூபிக்கப்படுமானால் அவர் மந்திரி பதவியையும் ராஜினாமா செய்துவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்ய தயாராக இருக்கிறார். ஆனால் அவர் மீது இந்தப் பழியைச் சுமத்துவதற்கு யார் காரணமாக இருக்கிறாரோ, இங்கே உட்கார்ந்துகொண்டு கேள்வியைக் கேட்டுக் கொண்டு இருக்கிறாரோ, அவர் திரு. சௌந்திரராஜன் பணம் வாங்கினார் என்பதை நிரூபிக்காவிட்டால், அவர் தனது பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு விவகாரத்தில் ஏற்படுகிற முறைகேடுகளை வைத்துத்தான் அதாவது அந்த முறைகேடுகள் நிரூபிக்கப்படுமேயானால் அதிலே ஏதோ நடந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

என்மீது எத்தனைக் குற்றங்களை இன்றைய முதலமைச்சர் சுமத்தினார்? சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அவ்வாறு நிரூபிக்கப்படாத குற்றங்களுக்காக அந்தக் குற்றங்களைச் சுமத்திய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய எம்.எல்.ஏ.

பதவியை ராஜினாமாச் செய்யவில்லை. சர்க்காரியா கமிஷன் அறிக்கை வந்ததற்குப் பிறகும் அவர் ராஜினாமா செய்யவில்லை. நான் எதிர்க்கட்சித் தலைவராக இங்கே வந்து இருப்பது அவருக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கின்ற காரணத்தால்தானோ என்னவோ நான் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆகவே இப்போது கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரணை செய்கின்ற வகையில் நீதிபதியை நியமிக்க வேண்டும். இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. மேலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது, அப்போது அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்காக நீதிபதியைப் போடவேண்டும் என்றும் அதுவும் வேறு மாநிலத்திலே உள்ள நீதிபதியைக் போட வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆகவே அதுபோன்று வேறு மாநிலத்திலே உள்ள நீதிபதியை இப்போது சொல்லப்படுகின்ற இந்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு நியமிக்க தயாராக இருக்கிறார்களா ? அப்படி அமைத்தால் அப்போது அதற்கான ஆதாரங்களைத் தரத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே, நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறேன் என்று என்மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தவறாக எண்ண வேண்டாம்.

சர்க்காரியா கமிஷனுக்கு அனுப்பப்பட்ட விவகாரத்தை நான் எடுத்து வைக்க வேண்டிய கட்டாயம் எனக்கு நேர்ந்தபோது நான் அப்படிப்பட்ட அறிவிப்பை நான் செய்யவில்லை. ஆனால் இங்கே கலைஞர் கருணாநிதி அவர்கள் வர வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் தேர்தல் நேரத்தில் எதிர்க் கட்சிகள் வரக் கூடாது என்று கருதுவது ஜனநாயகக் கோட்பாடுதான். ஆனாலும் விவரம் தெரிந்தவர்கள், முன்பு பதவியில் இருந்தவர்கள் சட்டமன்றத்திற்கு வந்தால் ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்பது மட்டுமல்ல, அவர்களது அனுபவத்தின் மூலமாக கிடைக்கின்ற விளக்கங்கள் நன்மை உடையதாக இருக்கும் அவர்கள் கேட்கின்ற கேள்விகள் உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தில் மாறுபாடு கிடையாது. ஆனால், நான், அவர் குறிப்பிடுகிற அந்தச் சமயத்தில், பதவியை ராஜினாமாச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. ஆகவே அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை வேறு.

அன்றைக்கு குற்றச்சாட்டுகள் நிறைய சொல்லப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தள்ளிவிடவில்லை. அதிலே இருக்கின்றவைகளில் சிலவற்றை விசாரிக்கலாம்

1979 மார்ச் 23] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். இதுதான் நிலைமை. அதாவது நானும், சி.பி.ஐ.யும் சேர்ந்து கொடுத்த குற்றச் சாட்டுகளை முழுமையாகவும், சரியாகவும் விசாரியுங்கள் என்று கேட்டோம்.

[முற்பகல் 10·50]

அப்போதே இந்தக் கேள்வியை, அதாவது நீ ராஜினாமா செய்யத் தயாரா என்று கேட்டிருந்தால் மகிழ்ந்திருப்பேன். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அப்போது அதாவது நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் மக்கள் மேடைகளில் எல்லாம் நாங்கள் வந்து வாதாடத் தயாரா என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அப்படி நடைபெற்றிருந்தால் விபத்து போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படும் என்பதையும் நாங்கள் சொல்லியிருந்தோம்.

அதைவிட இங்கே உட்கார்ந்து இருப்பதால்—இதில் என்னை விட மகிழ்ச்சியடைபவர் யாரும் இருக்க முடியாது. இங்கே நேருக்கு நேர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதில் எனக்கு அச்சமும் இல்லை. இதில் ஏக்கப்படுவதற்கும் ஒன்றுமில்லை. இதனால் அதிர்ந்து போகவும் இல்லை. அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இப்படியே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாலும் அத்தனை ஆண்டுகள் நானும் மகிழ்ச்சி பெறுவேன். இங்கே நீங்கள் வந்தது எங்களுக்கு இடைஞ்சலாக இல்லை. உதவியாகத்தான் இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்வதோடு, மேடையில் பேசுவதைவிட இங்கே வந்து நேருக்கு நேர் பேசுவது மிகவும் நல்லது என்பதற்காகத் தான் இதைச் சொன்னேன்.

திரு. க. சுப்பு: முதலமைச்சர் அவர்கள் சொல்வது சரிதான். குற்றச்சாட்டு சொல்பவர்கள், பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். தவறுதலாக இருந்தால் அதற்கான தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது நியாயம் தான். அந்த அடிப்படையில் தான் பொது வாழ்வில் ஈடுபடுவோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டால், அவை நிரூபிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் குற்றஞ்சாட்டியவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை ரத்து செய்து விட்டு, இப்போது குற்றச்சாட்டு சொன்னதற்காக தண்டனையை ஏற்றுக் கொள்ள தயாரா என்று 'சேலஞ்சு' பண்ணுவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? They are estopped. இருந்த சட்டத்தையும் ரத்து செய்து விட்டு இதைப் பற்றிக் கேட்பதற்கு இவர்களுக்கு உரிமையே கிடையாது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நண்பர் சுப்பு அவர்கள் நல்ல வழக்குரைஞர், அதற்காக நான் பாராட்டுகின்றேன். ஆனால் அங்குள்ள நிலைமை என்ன, நீதிவிசாரணை என்று வழக்குமன்றத்தின் முன்னால் யாரும் நிறுத்தப்படவில்லை என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நீதிவிசாரணைக்காக என்னென்ன ஆதாரங்கள் இருக்கின்றதோ அவைகளை சர்க்காரியா கமிஷன் முன்னால் சொன்னது போல் இங்கு சொல்ல முடியாது. மக்கள் கொடுத்த தகவல் இது என்று சொல்லலாம். இப்போது நிலைமை, நீதி விசாரணை தருகின்றோம். வெளிமாநிலத்திலிருந்து நீதிபதி கொண்டு வரப்பட வேண்டும் என்றாலும் அதற்கும் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் ஒரு அமைச்சர் மீது குற்றச்சாட்டு சொல்லப் பட்டு அது பத்திரிகைகளில் எல்லாம், விளம்பரம் செய்யப் பட்டப் பிறகு, பொறுப்பேற்றுக் கொண்டு, அதில் உண்மை யிருந்தால் நாட்டுக்காக யாராவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதே நேரத்தில் நீங்களும் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். இதன் மீது நான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பொருள், இந்த அரசு என்று சொல்லும்போது, இந்த மாமன்றம் நடவடிக்கை எடுக்கிறது என்று பொருள். அப்படி வரும்போது, இந்த சட்டமன்றம் அவ்வாறு தீர்ப் பளிக்கிறது என்பது பொருள். ஆகவே இதையும் ஒன்று சேர்த்து, அதற்கு உயிரூட்ட விரும்பினாலோ அல்லது அது செத்து போனது என்று கருதக் கூடிய வகையில், இத்தனை ஆண்டுகள் அதற்கென்று இருந்த நீதிபதி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்த நாட்கள் தீர்ந்த பிறகு, அதைவிட்டு விட்ட பிறகு, இப்போது நாங்கள் நேரடியாக வழக்குமன்றத் திற்கு போகலாம் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். நீதி விசாரணை வைப்பதை மறுக்கவும் தயாராக இல்லை. அமைச்சர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு அது விளம்பரம் செய்யப்படுகிற போது அதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்கிற போது, மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் பழி சுமத்துவேன் என்று சொல்லுகின்ற நிலை இருப்பது எப்படி பொருத்தமாகும் என்பதை தெரி விப்பதோடு, மீண்டும் சொல்லுகிறேன், மாண்புமிகு அமைச்சர் சௌந்தரராஜன் அவர்கள் இப்போதும் தயாராக இருக்கிறார்கள் 25 ஆயிரம் ரூபாய் வாங்கினார் என்று நிரூபித்தால் அவர் ராஜிநாமா செய்யத் தயார் சட்டமன்ற உறுப்பினர் பதவி யையும், மந்திரி பதவியையும், மற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் தான் கேட்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போது ஸ்பெஷல் கோர்ட் எல்லாம் போடப்படுகிறது. அமைச்சர் சௌந்தரராஜன் மீது இன்னும் பல குற்றச்சாட்டுகளை

1979 மார்ச் 23] [திரு. மு. கருணாநிதி]

சுமத்த நான் தயாராக இருக்கிறேன். முதலமைச்சரிலிருந்து இன்னும் 5, 6 அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்த என்னிடத்தில் குற்றப் பட்டியல் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் அனுமதியைப் பெற்று ஒரு ஸ்பெஷல் கோர்ட் போடுங்கள். வெளி மாநில நீதிபதியைப் போடுங்கள். அங்கே இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் தருகிறேன். அங்கே அவைகள் நிரூபிக்கப்படவில்லை என்றால் நான் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவகாரங்கள் தொடர்ந்து எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் ஸ்பெஷல் கோர்ட் என்கின்ற அளவில் முக்கியமான தனிப்பட்டவர்கள் சிலரை பழிவாங்குகின்ற முறையில் ஏற்படுத்துவதை புறக்கணித்து டெல்லியில் எங்கள் ஆட்சேபணையை தெரிவித்து அங்கே ஜனதாவை எதிர்த்து வாக்களித்திருக்கிறோம், தனிப்பட்டவர்களுக்காக இதை உருவாக்கக் கூடாது என்று நாங்கள் வாக்களித்திருக்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக அங்கே கொடுக்க இருப்பதையெல்லாம் நிச்சயமாக பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடமோ — ஜனாதிபதியிடமோ கொடுக்கலாம்.

பிரதம அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கலாம்; அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். ஜனாதிபதி அவர்களுக்குக் கொடுக்கலாம்; அவர்களும் நடவடிக்கை எடுப்பார்கள். வேண்டுமென்றால் எங்களை டிஸ்மிஸ் செய்யலாம், ஆதாரம் இருந்தால். எனவே, தயவுசெய்து, உடனடியாக இந்தக் கருத்தினை அவர்கள் எழுத வேண்டும், பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு, சாட்சியங்களோடு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (திரு. ஜே. ஜேம்ஸ், மற்றும் இரு எதிர்க் கட்சித் தலைவர்கள் பேச முற்படல்) ஜேம்ஸ், நோ. நேரமாகி விட்டது. நான் அனுமதிக்க இயலாது. இப்படியே வளர்ந்து கொண்டிருக்குமானால், சபையின் மற்ற நிகழ்ச்சிகள் என்ன ஆவது? மன்னிக்க வேண்டும். நான் அனுமதிக்க இயலாது.

1978—79 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது:—

[பேரவைத் தலைவர்] [1979 மார்ச் 23

MESSAGE

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1978-79".

(6) 1978—79ஆம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1978—79ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும். இதற்கென மணி நேரம் ஒதுக்கப்பெற்றுள்ளது.

திரு. மணிமாறன்....

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் பிரிவிலெஜ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ.

திரு. ஜே. ஜேம்ஸ் : The Chief Minister has given a wrong information.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ. நீங்கள் சொல்லியாகி விட்டது. 'ராங் இன்பர்மேஷன்' என்று. அதற்குமேல் விவாதிக்க இயலாது. நீங்கள் எழுப்பிய பிரிவிலெஜ் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப்பற்றி பிறகு முடிவு சொல்கிறேன். திரு. மணிமாறன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1978—79ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீட்டினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அளித்தார்கள். நான் சார்ந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த துணை மதிப்பீட்டில் அதிகமாக கோடிட்டுக் காட்டியிருப்பது, வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களைப் பற்றிய குறிப்பை வைத்திருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் நீலகிரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் தான் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த இரண்டு

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாவட்டங்கள்தான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனவா? மழையினால் பாதிக்கப்பட்டனவா? மற்ற மாவட்டங்கள் பாதிகக்கப்படவில்லையா? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுசமயம்

1979 மார்ச் 23] [திரு. மா. மணிமாறன்]

தமிழ் நாட்டில் இல்லாமல் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும் நேரத்தில் இரண்டு கட்டமாக புயல், வெள்ளம் ஏற்பட்டது. முதலாவது வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில், அந்த வெள்ளத்தைப் பராமரிக்கும் பொறுப்பை நிதி அமைச்சர் அவர்கள் ஏற்றிருந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து போகிறபோது, தயவுசெய்து அமைதியாகப் போக வேண்டும்; சத்தம் போட்டுப் பேசக் கூடாது. அப்படிப் பேசினால், உறுப்பினர் பேசுவது எப்படிக் கேட்கும்? இருப்பவர்கள் அமைதியாக இருங்கள்.....

திரு. மா. மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து தமிழகம் திரும்பிய போது, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. வந்தவுடனே அவர்கள் அறிவித்தார்கள். சென்னையில் மட்டும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள். பராமரிப்பு நிலையத்தில் இருந்து வெளியே செல்லும்போது அவர்களுக்கு 50 கிலோ அரிசி வழங்க, சென்னையிலே உள்ள மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது. பின்னாலே மூன்று நாட்கள் கடந்து, தமிழகத்தினுடைய எல்லாப் பகுதிகளுக்கும் அரிசி கிடைக்கும் என்று முதல்வர் அறிவித்தார்.

[முற்பகல் 11-00]

தஞ்சை மாவட்டத்திலுள்ள என் போன்றவர்கள் எல்லாம் தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயக் கூலிகளுக்கு இந்த உதவி நிச்சயமாகக் கிடைக்குமென்று நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணியை மேற்கொண்ட பிறகுதான் 50 கிலோ அரிசி வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 50 கிலோ அரிசி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்படவில்லை. ஆகவே, முதல் கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நிவாரணம் கிடையாது. அப்படியானால் முதலமைச்சர் அவர்கள் தனி நிவாரணம் கொடுப்பது மாதிரி அமைகிறது. இரண்டாவது கட்டத்தில் கொடுக்கப்பட்ட அரிசியாவது தஞ்சை மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் இன்று வரை சில பேர்களுக்கு கொடுக்கப்படவில்லை. வேதனைப்படுகிற நேரத்தில் விவசாயிகளுக்கு தரப்பட வேண்டிய நிவாரணம் வேதனை தீர்ந்த பிறகு தற்போது ஓரளவு அறுவடை செய்கிற இந்த நேரத்தில் அந்த அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை நிவாரணம் என்று எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அதை விளம்பரத்திற்காக, ஓட்டு சேகரிப்பதற்காக அளிக்கப்பட்ட நிவாரணமாகத்தான் கருத முடியுமே தவிர, உளப் பூர்வமாக ஏழை எளியவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணமாகக் கருத முடியாது. அந்தக் கட்டத்தில்தான் செலவை அதிகமாகக் காட்டுகிறார்கள்.

தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? நீலகிரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தோடு தஞ்சை மாவட்டத்தைச் சேர்த்துக் கொண்டால் என்ன? மாவட்ட ஆட்சித் தலைவர் அனாவாரி சான்றிதழை மேலத் தஞ்சைக்கு வழங்கியிருக்கிறார். வெள்ளம், மழையால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது கீழத் தஞ்சை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி இருக்க கீழத் தஞ்சையைச் சேர்க்காமல் இருக்கக் காரணம் என்ன? மாவட்ட ஆட்சித் தலைவரா அல்லது அரசிலிருந்து தூண்டிவிடப்பட்டு சேர்க்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்களா? இராமநாதபுரத்தில் அக்கறை. தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டிருந்தும் உங்கள் பார்வை படவில்லை. உங்கள் பார்வை அவர்கள் மீது படவில்லை என்றால் அவர்கள் பார்வையும் உங்கள் மீது படாது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்ட விவசாயிகள் வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். நீங்கள் காரணமாகச் சொல்வது—பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகளைத் தூண்டி விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நீங்கள் சொன்னால் அந்த அளவுக்கு பெரிய விவசாயிகள் பின்னால் ஏமாந்து செல்லக்கூடிய அளவுக்கு சிறிய விவசாயிகள் இல்லை. அவர்கள் விவரம் தெரியாதவர்கள் அல்ல. விவரம் தெரிந்து வேதனையை உணர்ந்த பிறகுதான் அவர்கள் சொல்லுவதில் நியாயம் இருக்கிறது என்று சிறு விவசாயிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி சிறு விவசாயிகளைப் பெரிய விவசாயிகள் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லுகிறவர்கள் சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையில் கூட்டுறவுக் கடன்களை சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லுகிறார்களா என்றால் அப்படிச் சொல்லாமல் பெரு விவசாயிகள் போர்வையில் பதுங்கிக் கொண்டு சிறு விவசாயிகளைப் பழிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள்—"இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நெல்லுக்கு என்ன விலை கொடுத்ததோ அந்த விலையை விட கூட்டித் தருகிறேன்" என்று சொன்னார்கள். நாங்கள் எல்லாம் நம்பிக் கொண்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசில உரிய பொறுப்பு வாய்ந்தவர்கள், பாலிசியை டிசைட் பண்ணக் கூடியவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் காற்றில் கலந்துவிட்ட கீதமாகத்தான் அவர்களுடைய வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாத நிலை அவரால் ஏற்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளைப் பல்வேறு கோணங்களில் இழித்தும் பழித்தும் பேசக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. டாக்டர் கலைஞர்

1979 மார்ச் 23] [திரு. மா. மணிமாறன்]

பொறுப்பேற்றிருந்த நேரத்தில் ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகமாகத் தந்தார்கள். கடந்த நாலாண்டுக் காலமாக குவிண் டாலுக்கு 60 ரூபாய் இழப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 15 குவிண்டால் ஒரு விவசாயி போட்டிருந்தால் இது வரை ஏறத்தாழ நாலாயிரம் ரூபாய் நஷ்டமாகியிருக்கிறது, இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை எவ்வாறு ஈடு செய்வது? இந்த மாநிலத்தில் நடந்ததை முன் உதாரணமாகக் கொண்டு நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்திருந்தால் நாலாயிரம் ரூபாய் இழப்புக்கு விவசாயிகள் உள்ளாகியிருக்க மாட்டார்கள். துணை மானியக் கோரிக்கையில் பார்த்தால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் 70 சதவிகிதமாக இருக்கிறார்கள்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கு ஏதாவது செய்திருந்து அதற்காக இந்த துணை மானியத் திலே நிதி தேவைப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. விவ சாயிகளுக்கு ஏதாவது செய்திருந்து அதற்காக இந்த துணை மானியத்திலே நிதி தேவைப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை இப்படி இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையும் இன்றைக்கு இந்த அரசு பழிவாங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நிதியமைச்சர் பேசுகிறபோது சொன்னார்கள், தெளிவாகச் சொன்னார்கள். தீப்பெட்டிக்கு தமிழ்நாட்டிலே தான் வரி குறைவாக இருக்கிறது, கேரள மாநிலத்திலே வரி அதிகமாக இருக்கிறது, மைசூரிலே வரி அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள், ஆனால் மாநிலங்களிலே எல்லாம் விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்கள் வட்டியை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை நிதியமைச்சர் அவர்கள் என்னவோ சுட்டிக்காட்ட மறுத்துவிட்டார்கள். அங்கே எப்படித் தள்ளுபடி செய்தார்களோ அதைப்போன்று இங்கேயும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கும்பகோணத்திலே இருக்கிற கூட்டுறவுச் சங்கம் தற்போது விவசாயிகளுக்கு உதவி செய்யமுடியாத நிலைமையிலே இருக்கிறது, அங்கே வாழைக்காக, கரும்புக்காகக பினாமியாக விவசாயிகளின் மீது திணிக்கப்பட்டு அத்தொகையைக் கூட பழைய கடனில் வரவு வைத்துக் கொண்டார்கள். கடன் வாங்கிய விவசாயிகள் திருப்பிக்கட்டமுடியாத நிலை யிலே இருக்கிறார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை அரசு செய்த தவறுக்காக விவசாயிகள் சுமையைத் தாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, ஆகவே அதைப்போக்கி விவசாயிகளுக்கு உதவிகளையும் சலுகைகளையும் கிடைக்கச் செய்ய ஏற்பாடு களைச் செய்யவேண்டும்.

அடுத்து நிதியமைச்சர் அவர்கள் இங்கே பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது எந்த எந்த திட்டங்களைச் செயல்படுத்தினார்களோ அந்தத் திட்டங்களை நாங்கள் செயல்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். இந்த துணை மானியக் கோரிக்கையிலே அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிற முறையிலே எந்த அளவிலும் அதிகமாக ஒதுக்கப்படாமல் அதற்கான தொகைகள் இங்கே கோரப்பட வில்லை. அதைப்பற்றி நான் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரவேண்டு மென்ற முறையிலே அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் என்று அமைக்கப்பட்டு 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்தப் புரட்சி ஆட்சியிலே இரண்டு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஆண்டிற்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற அந்தத் திட்டத்தை நல்ல திட்டமில்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா அல்லது.. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மொத்தம் ஒரு மணி நேரம்தான் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் பேசியதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்லியதற்குப் பிறகு நிறைவேற்றப்படவேண்டும். ஒவ்வொருவருக்கும் 5 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. மா. மணிமாறன்: 11 கோடி ரூபாயாக இருந்ததை 2 கோடி ரூபாயாகக் குறைத்ததற்குக் காரணம் அந்தத் திட்டங்கள் நல்ல திட்டங்கள் இல்லையென்று இந்த அரசு மறை முகமாக ஒப்புக்கொள்ளுகிறதா அல்லது அந்த சமுதாயத்திற்கே செய்யக்கூடாது என்ற நிலைமையிலே இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

வருமான வரி கட்டுகிறவர்களுக்கு உதவி செய்கிறீர்கள், வெளிநாடுகளுக்கு வேடிக்கை பார்க்கச் செல்கிறவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கிறீர்கள். கலைஞர்கள் என்ற பெயரால் உதவி செய்கிறீர்கள். சினிமாவுக்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட சலுகைகள் காட்டப் பட்டதன் காரணமாக 8 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது அரசுக்கு, அதுமட்டுமல்ல, வணிக வரி என்ற தலைப்பிலே 21·96 கோடி ரூபாய் வசூலாகாமல் இருக்கிறது. இப்படி பல்வேறு வரிகள் பாக்கியிருக்கின்றன. சூப்பர் டாக்ஸ் கட்டுகிறவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படுகிறது இந்த அரசால், ஆனால் ஏழை விவசாயிகளுக்கு 4·74 கோடி ரூபாய்தான் நிலவரி, அதை ரத்து செய்ய மறுக்கிறது இந்த

1979 மார்ச் 23] [திரு. மா. மணிமாறன்]

அரசு. அதைத் தள்ளுபடி செய்வதற்கு, அவர்கள் கோரிக்கையை அலட்சியப்படுத்துவதற்கு என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன்..... (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துணை மானியக் கோரிக்கையிலே மட்டும் பேசுங்கள், மொத்தத்திலே. அந்த அந்த டிமாண்டுகள் வருகிறபோது பேசலாம் பொது விவாதத்திலே வேறு ஏற்கனவே பேசியிருக்கிறீர்கள், சம்பந்தா சம்பந்தம் இல்லாததை இதிலே பேச வேண்டாம், சீக்கிரம் முடியுங்கள், இல்லாவிட்டால் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டி வரும்.

திரு. மா. மணிமாறன்: எனவே விவசாயிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எந்தவிதமான நன்மையும் இல்லாமல் இந்த அரசு செய்த ஊதாரித்தனத்திற்கு ஒப்புதல் கோருகிற அறிக்கை தான் இது என்பதைக் கூறி முடிக்கிறேன்.

[முற்பகல் 11-10.]

*திரு பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதியமைச்சரவர்கள் சென்ற ஆண்டு 1978–79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 680 கோடி ரூபாய்க்கு நாம் அனுமதி கொடுத்து, அதற்கும் பின்னால் ஏற்பட்ட புயல்மழை சேதங்களுக்காக கிட்டத்தட்ட 192கோடி ரூபாய்க்கு இன்றைக்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எத்தனை கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் போட்டாலும், திட்டங்களை நாம் தீட்டினாலும், நமது நிதியமைச்சரவர்கள் இன்றைக்குப் பதில் சொல்லுகின்றபொழுது ஏழை மக்களுக்காக இந்த அரசு நிறையச் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறரர்கள், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பட்ஜெட்டாக இருக்கட்டும், அல்லது துணை நிதி நிலை அறிக்கையாக இருக்கட்டும், நாங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டாண்டுக்குக் காலத்தில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக ஆக்கிவிட்டோம் நாங்கள் ஆட்சிக்கு வந்து பத்து இலட்சம் பேர்களுக்கு மனைகளைச் சொந்தமாக ஆக்கியிருக்கிறோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு இலட்சம் அரிசன விவசாயிகளுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்ற புள்ளி விவர அடிப்படையில் எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்குமாறாக, இன்றைக்கு விவசாயிகள் பெரிதும் அவதிக்குளாக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு நியாய விலை கிடைக்கவில்லை. கலைஞராட்சியில், 1384-ஆம் பசலியில் அனைத்து விவசாயிகளுக்கும் குத்தகைப் பாக்கியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் இன்னும் தொடர்ந்து அதை வளர்த்துக்கொண்டே போகாமல்

இந்த ஆண்டாவது குத்தகை விவசாயிகளுக்கு குத்தகையைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது விவசாயிகளுக்கு போனசாக மூட்டைக்கு 15 ரூபாய் 58 கிலோ கொண்ட மூட்டைக்குக் கொடுக்கப்பட்டது. இந்த ஆட்சியில் சொன்னார்களே தவிர, மத்திய அரசைக் கை காண்பிக்காமல் இந்த அரசு உடனடியாக விவசாயிகளுக்கு நெல் உற்பத்தி செய்பவர்களுக்கு நியாய விலை கொடுக்க வேண்டும். இதையெல்லாம் இந்த ஆட்சி செய்து கொடுக்கவில்லை என்பதற்காக இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தில் வேகமாக வந்திருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த ஆட்சி எதிர்பார்த்து விவசாயிகளுக்கு நன்மையளிக்க வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக நான் ஒன்றைச் சொல்கிறேன்.

இன்றைக்கு இந்த ஆட்சி அல்ல, எந்த ஆட்சி வந்தாலும், அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்களிடம்தான் வாக்கு கேட்கிறார்கள். இந்த மாநிலத்தில் நான்கில் ஒரு பங்கினர், நாலரை கோடி மக்கள் என்றால் ஒரு கோடிக்கும் அதிகமாக அவர்கள் இருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இரண்டு கோடி 16 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கினார்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அப்புறம் கலைஞர் ஆட்சிக்காலத்தில் 470 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கிற பொழுது 16 கோடியே 6 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு போன ஆண்டு 30 கோடி ரூபாய். இந்த ஆண்டு பார்த்தால் 18 கோடியே 3 இலட்சம் பின் தங்கியவர்களுக்கு 7 கோடியே 7 இலட்சம் ரூபாய், அக மொத்தம் 25 கோடி ரூபாய். எனவே, காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருக்கட்டும், முன்னேற்றக்கழக ஆட்சியாக இருக்கட்டும், இன்றைய ஆட்சியாக இருக்கட்டும், அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிதி ஒதுக்குகின்றபொழுது நிதி அமைச்சகமும், நிதி அமைச்சரவர்களும் எவ்வளவு கஞ்சத் தனமாக ஒதுக்கியிருக்கிறார்கள், யானைப் பசிக்குச் சோளப்பொறி போடுவதைப் போல அந்த மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அரிசனங்களுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. இதற்கு அரிசன நல துறை அமைச்சர் தேவை இல்லை. இந்த இலாக்காவைக் கூட நிதியமைச்சகமே எடுத்துக்கொள்ளலாம். எதிர்காலத்திலேயாவது திட்டவட்டமாக அந்த அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இன்னும் இருக்கக்கூடிய மூன்றாண்டுக் காலத்திலே ஏதோ மூன்று இலட்சம் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்திருக்கிறோம், ஏதோ அரிசன மக்களுக்காக பட்டா கொடுத்திருக்கிறோம் என்று திட்டம் கொண்டு வர வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

1979 மார்ச் 23] [திரு. பொ. உத்திராபதி]

பாசன வசதியைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்திலே, வெள்ளக் காலத்திலும், புயலிலும் வெள்ளத்திலிருக்கும் பயிர் வேகமாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தில் கடைகோடிப் பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மற்ற ஆசிரியர்கள், என்.ஜி.ஓ க்களுக்காக இருப்பவர்களுக்கு பெண்களுக்கு பிரசவ லீவு கொடுக்கிறார்கள். குழந்தைகளைப் பாதுகாக்க வசதி செய்து கொடுக்கிறார்கள். ஆனால், மற்றக் குடும்பத்திலே உள்ள விவசாயப் வேலை செய்யும் பெண்கள் கர்ப்பவதியாகி பிரசவிக்கும் காலம் வரையில் வேலைக்குச் சென்றால்தான் பிழைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. பிரசவம் ஆகிவிட்டாலும் அவர்களின் குழந்தையைப் பாதுகாக்க முடியவில்லை. இதனால் மூத்த பிள்ளையை கைக்குழந்தையை பார்த்துக்கொள்ள பயன்படுத்தி பள்ளிக்கு அனுப்பாமல் கஷ்டத்திற்கு ஆளாக்காப்படுகிறார்கள். எனவே, விவசாயத் தொழில் செய்யும் பெண்களுக்கும் அவர்களது பிரசவ காலத்தில் அரசாங்கம் ஒரு மாதம் உதவித் தொகை கொடுக்கவேண்டும், பிரசவம் ஆகிவிட்டால் குழந்தையைப் பாதுகாப்பதற்காக கிராமங்களில் பாதுகாப்பு இல்லம் கட்டிக்கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அரிசனமாணவர்களுக்கு, கல்லூரிகளிலே படிக்கக் கூடியவர்களுக்கு ரூ.60, ரூ70 என்று இல்லாமல் உத்தரப்பிரதேசத்தில் உள்ளதுபோல் ரூ. 120 கொடுக்க வேண்டும். நாகைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். வேதாரண்யத்தில் ரசாயனத் தொழிற்சாலைக்கு நிதி அறிக்கையில் தொகை ஒதுக்கப்படவில்லை. இனிமேலாகிலும் அத்தொழிற்சாலைக்கு தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள், 'கேர்' ஸ்தாபனத்தால் கட்டிக் கொடுத்த வீடுகள் இந்த ஆண்டு மழையில் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் என் தொகுதியில் மணலி பெரியவர் இருந்தார். அவர் இறக்கும்போது, முதலமைச்சரவர்கள் எங்கள் கூட்டத்தில் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். மணலி பெயரால் உயர்நிலைப் பள்ளி, அரசாங்கத்தின் மூலமாக, அவர் பிறந்த ஊரில் கட்டப்படும் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்து இரண்டு ஆண்டு காலமாகியும் அந்த வேலையை இன்னும் செய்து கொடுக்கவில்லை. வருகிற ஆண்டிலாவது, மணலி பிறந்த ஊரில் மணலி பெயரில் அரசின் உயர்நிலைப் பள்ளியை, அரசாங்கமே கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முத்துப்பேட்டையில் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேன். அமைச்சர் சொல்லும்போது இடம் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். இப்பொழுது இடம் கொடுத்தாகிவிட்டது. எதிர்காலத்தில் அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடியிலிருந்து வீராக்கி ஆலங்குடி வழியாக தலை நாயர் செல்கின்ற அரிச்சந்திரா நதி ஆற்றங்கரையை அகலப் படுத்தி சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதி யில், கோட்டூரில், தங்கியிருக்கும் அரிசன மாணவர்கள், 3 மைல் களுக்கு நடந்து சென்று படிக்கிறார்கள். ஆகவே, அங்கு அரிசன மாணவர்கள் தங்கிப் படிக்க விடுதி கட்டித் தரவேண்டும், அரிசன நலத் துறையின் சார்பில் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான துணை நிதி அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். நாம் ரூ. 200 கோடி அளவுக்குத் திட்டச் செலவுகளைச் செய்துவிட்டு ஒப்புதல் பெற இங்கே சமர்ப்பித்திருக்கிறோம். நமது அரசுக்கு ஆலோசனை சொல்வது என்னவென்றால், வயோதிகர்களுக்குக் கொடுக்கும் படியான ஊதியம் மாதம் ரூ. 20ஆகும். அதுவும் கூட இன்று அனைவருக்கும் கிடைக்காத நிலை இருந்து வருகிறது. தாசில்தார் அவர்கள் பரிசீலனை செய்து, இவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சான்றிதழ் வழங்கியிருந்தால், அப்படி சான்றிதழோடு வந்திருக்கும் படியான அனைத்து மனுக்களுக்கும் பணம் கொடுக்கும் ஏற்பாட்டை செய்து, ஊதியம் வழங்கும்படி நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள் கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய யாரும் கவனிப்பாரற்ற, 60 வயதுக்கு மேற்பட்ட, ஊனம் உற்றிருக்கிற, நம்முடைய மக்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியது மிகப் பெரிய கடமை என்பதை நான் அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்

அடுத்து நான் சொல்ல விரும்புவது, நகரசுத்தி தொழிலாளர் கள் பணிக் காலத்திலேயே மரணம் அடைந்த உடனே குடும்ப நல நிதியாக ரூ. 10,000 தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இறந்து 2 ஆண்டு, 3 ஆண்டுகளாகியும் பணம் கிடைக் காத நிலை இருக்கிறது. திண்டுக்கல் பகுதியிலே, பல்வேறு வழக்குகளை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந் திருக்கிறேன், ஏன் நகரசுத்தி தொழிலாளர்களை, கவனக்குறை வாகப் புறக்கணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல கோடி ரூபாய் செலவு செய்யும்போது, நகரசுத்தி தொழி லாளர்களைப் புறக்கணிக்க வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1979 மார்ச் 23] [திரு. என். வரதராஜன்]

குற்றவியல் துணை நீதிமன்றங்களிலே விசாரணைக்குப் போவோர்கள் எப்படிப் போக வேண்டுமென்று அரசு தெளிவு படுத்த வேண்டும். நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன், கல்லூரி பேராசிரியர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, ஒரு நீதிபதி சொன்னாராம், மேல்சட்டை அணியக்கூடாது, காலணி அணியக்கூடாது, மேலே துண்டே போடக்கூடாது, என்று. நீதி மன்றத்திற்குச் செல்லும்போது எந்த ஆடையோடு செல்ல வேண்டு மென்று தெரிவிக்க வேண்டும். நேற்று நான் செங்கற்பட்டுக்குப் போய்விட்டு வந்தேன். கைநெசவுத் தொழிலாளர்கள் இந்த மாதம் 12, 13, 14 தேதிகளில் மறியல் செய்தார்கள். அப்பொழுது கைது செய்தவர்களை விடுதலை செய்ததையொட்டி நடந்த பாராட்டுக் கூட்டத்தில், அவர்களைப் பாராட்டி விட்டு வந்தேன்.

[முற்பகல் 11–20]

செங்கல்பட்டில் இருக்கும்படியான குற்றவியல் துணை நீதி பதிகள் விசாரணை நடக்கும் நேரத்தில் மேல் துண்டு போடக் கூடாது, செருப்பு அணியக் கூடாது என்று சொல்கிறார்கள். இந்த முறையில் குற்றவியல் துணை நீதிபதிகள் நடந்து கொள் வதை அரசு கவனித்து இப் போக்குகளை அகற்ற வேண்டும். தமிழகத்திலே தேசீய உடையாக அங்கீகரித்துள்ளதுதான் துண்டு அணிவது. இல்லாவிட்டால் வேறு ஒரு முடிவிற்கு வாருங்கள். நீதி மன்றத்திற்கு விசாரணைக்கு போகிறவர்கள் இந்த மாதிரி ஆடைகளுடன் தான் போக வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டு விடுங்கள். இதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து குமரி மாவட்டத்திலுள்ள தேவகிரி எஸ்டேட் தொழி லாளர்கள் 60 பேர்களை அதன் நிர்வாகம் நான்கு மாதங்களுக்கு முன் வேலையை விட்டு நீக்கியுள்ளது. அவர்கள் செய்த பெரிய பாவம் சி. ஐ. டி. யூ. தொழிற்சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்ததே. தொழிலாளர்கள் தங்களுக்கு உரிமையுள்ள ஒரு சங்கத்தில் சேர்ந்த தற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். சி. ஐ. டி. யூ. மாநில பொதுச் செயலாளர்களில் ஒருவரான ஹேமசந்திரன் அவர்கள் 5 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள் இந்தக் கொடுமையை எதிர்த்து. இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு காண வேண்டும். அரசு இதில் தலையிட்டு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும். இந்தப் பேரவையில் 42-வது விதியின் கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால்தான் அந்தப் பிரச்சனையை கவனிப்பது அதைப்பற்றி விவாதிப்பது என்ற நிலையை அரசு கைவிட வேண்டும். உடனடியாக அரசு இதில் தலையிட்டு கவனிக்க வேண்டும். 60 தொழிலாளர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனை தொழிலாளர்கள் சங்கத்தில் உறுப்பினராக சேர அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களை நிறுவனம் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதற் அரசு முயற்சி செய்ய வேண்டும்.

கடைசியாக என்னுடைய தொகுதியினுடைய பிரச்சனை. 2 லட்சம் மக்கள் வசிக்கக் கூடிய பெரிய நகரமான திண்டுக்கல்லில் குடிநீர் பிரச்சனை மிகப் பெரிய பிரச்சனை 1953 ஆம் ஆண்டு காமராஜர் காலத்தில் திண்டுக்கல் குடிநீர் திட்டம் கொண்டு வரப் பட்டது. இந்தத் திட்டத்திற்காக சுமார் 3 கோடி ரூபாய் செல வழிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் நகரில் 2 லட்சம் மக்கள், சின்னாளம்பட்டி உள்பட சுற்றுக் கிராமத்தில் 1 லட்சம் மக்கள், ஆக சுமார் 3 லட்சம் மக்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் விதமாகப் போடப்பட்டது அந்தத் திட்டம். இந்த 3 லட்சம் மக்களும் இந்த தண்ணீரைத்தான் நம்பியிருக்கிறார்கள் ஆனால் இந்தத் திட்டம் செயல் படாமல் இருக்கிறது. திண்டுக்கல் அருகில் சத்தியங்கோட்டைப் பகுதியில் குடி நீர் அணை கட்டப் பட்டுள்ளது. பொறியியல் நிபுணர்கள் இதை சரியான முறையில் திட்டமிடவில்லை. இந்த அணைக்கு கொடைக்கானல் மலை ஓடைகளிலிருந்து எவ்வளவு தண்ணீர் கொண்டு வருவது என்ற குறிக்கோள் இல்லாமல் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இதனால் திண்டுக்கல் நகர மக்கள் மிகவும் கடுமையான தண்ணீர் பஞ்சத்திற்கு ஆட்பட்டு நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறார்கள். இன்னும் ஏப்ரல்,மே மாதங்களில் கடுமையான குடி நீர் நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த அணை காமராசர் காலத்திலே கட்டப்பட்டது. அணை இருக்கிறதே தவிர, தண்ணீர் இல்லை. நேற்றைக்குக் கூட தொழிலாளர்—நலத் துறை அமைச்சர் அவர்களிடம் இவ் விவரங்களை எடுத்துக் கூறினேன். அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, மிகப் பெரிய நகரான திண்டுக்கல்லில் குடி நீர் தடடுப்பாடு இல்லாமல் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சீத்தையன் கோட்டை திண்டுக்கல் குடிநீர் அணைக்கு தண்ணீர் வரும் ஓடைகளை உட னடியாகச் செப்பனிட வேண்டும், அதற்கு மீண்டும் தங்கள் மூலமாக அரசுக்கும் அமைச்சருக்கும் தெரிவித்துக் கொள்ள . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : **தயவு** செய்து முடித்துக் கொள்ளுங்கள், பாக்கூர் சுப்பிரமணியம் அவர்களைப் **பேச அழைக்கிறேன்.**

<u>திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீடுமீது என்னுடைய சில கருத்துக்களை கூறிக் கொள்கிறேன். இங்கு பல உறுப்பினர்கள் பேசினார்கள், பல்வேறு பிரச்னைகளைப் பற்றி பேசப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், எனக்கு முன்னாலே பேசியவர்களின் கருத்துக்கள் மீது என்னுடைய கருத்துக்களை சொல்லிக் கொள்கிறேன்.

1979 மார்ச் 23] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணிவம்]

இங்கே நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு குறைகள் கூறப்பட்டது. விமரிசனங்கள் செய்வது ஜனநாயகப் பண்பாடு என்ற அடிப்படையில் அவைகளை ஏற்றுக் கொண்டு, ஏழைகளுடைய வாழ்வு மலர, கிராமங்களில் இருக்கிற விவசாயப் பெரு மக்கள் வாழ்வு மலர்ந்திட, அந்த விவசாயிகள் கூலிகளாக இருந்திட்ட நிலைமை மாறி இன்றைக்கு நிலையான ஊதியம் பெறும் வகையில் பல திட்டங்கள் தீட்டப்பட்டு, அவர்களுக்கு வேலை இல்லாத நேரங்களிலும், நெல், கோதுமை கொடுக்கப் படும் என்று ஊக்கம் அளித்து பொருளாதார அபிவிருத்தியை கிராம மக்கள் பெரும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள்.

வெள்ளம், புயல் வந்து பாதிக்கப்பட்டபோது அ.இ.அ.தி.மு.க. அரசு எவ்வளவோ முயற்சி செய்து நிவாரணப் பணிகளை மேற் கொண்டும் எதிர்க் கட்சிக்காரர்கள் குறைபாடுகளைத்தான் சொன்னார்கள். ஆனால் மக்கள் அனைவரும் இது ஒரு போர்க்கால நடவடிக்கை என்று சொன்னார்கள். இது தவிர, ஊட்டிக்குப் பக்கத்திலே நிலச்சரிவு ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டபோது, இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் இந்த இடத்திலே கூட பாதிப்பு ஏற்பட்டதா என்று எண்ணிப் பார்க்கிற அளவிலே அந்தப் பணியை நிறைவேற்றிச் செயல்படுத்தினார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்திலே சிறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காக இன்றைய அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டங்களின் மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மானியத் தொகை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் முழு மூச்சோடு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் சிறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காக அளிக்கப்பட்ட தேசிய மானிய தொகைகள் விரிவாக அளிக்கப் படாத காரணத்தால் அந்தத் தொகை திருப்பி செலுத்தும் படியான இருந்த நிலை மாறி இன்று அந்தப் பணம் எத்தனை விரைவாக அவர்களுக்கு வழங்கப்படமுடியுமோ அந்த அளவிற்கு விரைவாக வழங்கப்பட்டு வருகிறது, அந்த ரீதியில் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் நான் ஓரிரு கருத்துக்களை என் தொகுதி சம்பந்தப்பட்டவை குறித்து சொல்ல விரும்புகிறேன். உத்திரமேரூர் தொகுதியிலே, அதை தாலுக்காவாக உயர்த்திய பெருமை இன்றைய அரசைச்சாரும். மதிப்பிற்குரிய புரட்சித் தலைவருக்கு நான் இதய பூர்வமாக எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். அதே நேரத்தில் அங்கே காவல் துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகம் ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் எல்லாம் காட்சிக்கு எளியர்வகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்க வேலைகள் எத்தனையோ இருந்தாலும், கிராமப் புறங்களில் அவர்கள் எந்த அளவிற்கு அக்கரை கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ இந்த ஆட்சி அமைந்து 2 வருஷங்கள் தான் ஆன போதிலும் 11 அமைச்சர்கள் உத்திர மேரூர் தொகுதிக்கு வந்து 100-க்கு மேற்பட்ட கிராமப் பகுதிகளைப் பார்வையிட்டு, அந்த மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு பணிகளைச் செய்து இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அதற்காக அந்தத் தொகுதியின் மக்கள் சார்பில் நான் அவர்களுக்கு என் நன்றியை உளமாற தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, ஏறத்தாழ 40—50 ஆண்டுகளுக்கு மேலாக —எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல —அரிசன மக்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்று குறிப்பு இருந்த போதிலும், அவர்கள் வாழ்வு எந்த அளவற்கு இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எங்கள் தொகுதியில் ஆரியப்பாக்கம் என்ற இடத்தில் 40—50 ஆண்டுகளுக்கு மேலாக தாழ்த்தப் பட்ட சமுதாய மக்கள் பயிரிட்டு வருகின்ற 320 ஏக்கர் நிலங்கள் அவர்கள் பல்வேறு காலங்களில் வழக்கு மன்றத்திற்கு சென்று இருந்த போதிலும், பெற முடியாத நிலையிலும், இன்றைக்கு அவர்கள் ஆக்கிரமிப்பை உருவாக்கி அந்த இடத்தில் அவர்கள் பயிரிடுகின்றார்கள். அதை அவர்களுக்குச் சொந்தமாக்கி அந்த 320 ஏக்கர் நிலத்தை அரிசன மக்களுக்குச் சொந்தமாக பயிரிடும் வகையில் அமைத்துத் தந்து இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய தொகுதியில் எடமச்சி கால்வாய் திட்டம் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டு, முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்களும் அதற்கு ஒப்புதல் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. இந்த அரசு ஏழைகளின் பால், அக்கரை கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு உறுதுணையாக திட்டங்களைத் தீட்டி வந்து கொண்டிருக்கிறது என்கிற பெருமை உணர்வோடு இதை மனதார வரவேற்று எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள மிக முக்கியமான பிரச்னை. ஆங்கிலத்தில் 'பர்னிங் பிராப்ளம்' என்று சொல்வார்கள். இது வ்வசாயிகளின் பிரச்னை. இன்றைக்கு நெல்லுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை. இது எல்லாத் தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப் பட்டு இருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக எந்த வகையிலாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்குக் கட்டுப் படியான விலை கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த விவசாயிகள் சமுதாயம் நீண்ட நாட்களாகவே அழுத்தப்பட்டு வந்து இருக்கிறது. அந்தப் பிரச்னையும் வலியுறுத்தப்பட்டு வந்து இருக்கிறது. இங்கே பல நாள் வலியுறுத்தப்பட்டு வந்த உணர்வு

களின் மூலமாகவும், அதை அரசு நன்கு அறிந்து இருக்கும். இந்தப் பிரச்னைக்கு முடிவு காண்பதை ஒத்திப் போட முடியாது. நெல் விலை குறைந்து இருக்கும் நேரத்தில் வரி உயர்வதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. உதாரணமாக பஞ்சாயத்து யூனியனில் சமீப காலங்களில் யூனியன் செஸ் அதிகப்படுத்தப் பட்டு இருக்கிறது. ஒரு ரூபாய் என்று இருந்தது $2\frac{1}{2}$ ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. வரி வசூலிப்பது கடுமை யாக இருப்பதையும் காண்கிறோம். மேலும் கடன்கள் தள்ளுபடி செய்வதைப்பற்றியும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

(முற்பகல் 11-30.)

காரணம் என்ன வென்றால் தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் தொடர்ச்சியாக 3 ஆண்டு காலம் வறட்சி ஏற் பட்டும், அதைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இரண்டு ஆண்டு காலம் புயல், வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டும் விவசாயி கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவர்களால் கடனைத் திருப் பிக் கட்ட முடியவில்லை. இயற்கை உத்பாதங்களால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கம் அறிந்து இருந் தும் கூட அந்த நிலையில் அவர்களுக்கு சாதகமாக சலுகைகள் அளிக்க முன்வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காரணம் என்னவென்றால் வேறு துறைகளிலே-- தொழில் களுக்குக் கடன் வாங்குகிறவர்கள் சரிவர தொழிலை நடத்தி, லாபமாக நடத்தவில்லை என்றால் அவர்களுக்கு சலுகை கொடுக் கப்படுகிறது. கடனில் தள்ளுபடி கூட செய்து கொடுப்பதாக நான் அறிகிறேன். அப்படி இருக்கும்போது இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லுகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள்.

திரு. சு. சுப்பு: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். நிதிநிலை அறிக்கையில் விவாதம் நடக்கிறது. ஆனால் நிதியமைச்சர் இங்கே இல்லை. முதலமைச்சராவது மாண்புமிகு உறுப்பினர் சொல் வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தால் ஏதாவது நிவா ரணம் கிடைக்கும். அவர் நல்ல கருத்தைச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது பொதுவான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை டிமான்டிலே கூட பேசலாம். இருந்தாலும் யாராவது ஒரு அமைச்சர் குறிப்பு எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, விவசாயிகள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் அதற்கென்றே ஒரு செஷன் நடத்தினால் கூட சொல்லித் தாளாது.

அடுத்தபடியாக தொழில். தொழிலைப் பொறுத்த மட்டில் கனிவளங்கள் ஏராளமாக இருக்கும் பகுதிகளை ஆராய்ந்து, அதைப் பயன்படுத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிவ கங்கை பகுதியில் கிராஃபைட் மூலப் பொருள் அதிகமாகக் கிடைக்கிறது. என்று நமது அரசாங்கத்தின் தரப்பிலே அறிவிக் கப்பட்டிருக்கிறது. அதை உணர்ந்து நமது சர்க்காரும் மத்திய சர்க்காரும் திட்டம் வகுத்திருந்தாலும் இன்னும் நிறைவேற்ற வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

அதுபற்றி 1977—78-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் கூட விசேஷமாகச் சொல்லியிருக்கிறார்கள். கீழ்க் கண்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கனிவளங்கள் என்று கூறி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தூரியம்— கிராஃபைட்—அதைப் போன்ற இன்னும் பல ஐட்டங்கள் இருக் கின்றன. இதை உடனடியாக தோண்டி எடுத்து, விந்தப் பொபிள் சம்பந்தப்பட்ட பொருட்களை அந்த இடத்திலேயே உற்பத்திச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கத் தரப்பிலே ஒரு அதிகாரி இப்போது அங்கே 'மைனிங்' மட்டும்தான் செ கிறோம் ; தோண்டி எடுத்து வேறு இடங்களுக்கு வதை ஏற்றுமதி செய்கிறோம் என்று சொல்வி இருக்கிறார். பின் தங்கியப் பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற அரசாத்கத்தின் நோக்கத்தின் அடிப்படையில் கனிவளத்தை எடுக்கும் அந்தந்த இடத்திலேயே அது சம்பந்தப்பட்டத் தொழி லையும் ஏறபடுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு அதிகப்படியான. வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ரோடுகளைப் பொறுத்தமட்டில், நாம் மிகவும் பின்னாலே இருக்கிறோம். சமீபத்தில் தொடர்ச்சியாக இரண் டாண்டு பெய்த பெரும் மழையின் காரணமாக எல்லா ரஸ்தாக் களும் பாதிக்கப்பட்டு, பழுதடைந்திருக்கின்றன. அவைகளை அபிவருத்தி செய்ய வ்சேஷமான ஒரு திட்டமாகச் செய்தால்தான் முடியும். இல்லை என்றால் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் போட்ட ரஸ்தாக்கள் அனைத்தும் மறைந்துவிடக் கூடிய நிலை யில், பயன்படுத்தமுடியாத சூழ்நிலையில் ஏற்படும். ஆகவே, உடனடியாக இந்த அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 23] [திரு. ஓ. சுப்பரமணியன்]

இன்று பேசிய நிதி அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். நமது தமிழ் நாட்டின் பட்ஜெட்டிலே கல்விக்கும் மின்சாரத்திற்கும்தான் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தும் மின்சார வாரியம் ஒரு தனி சாம்ராஜ்ஜியமாக நடக்கிறது. சமீபத்தில் நான் தலைவராக இருக்கிற பஞ்சாயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நான் தலைவராக இருக்கும் அந்தப் பஞ்சாயத்தில் போதிய நிதி இருந்தும்கூட, அங்கே பணம் கட்டவில்லை என்று சொல்லி கிராமங்களுக்குள்ள மின் இணைப்பைத் துண்டித்துவிட்டார்கள். அதைப்பற்றி அமைச்சரிடம் நேரடியாகத் தெரிவித்தேன். அவர்கள் தகவல் கொடுத்த பிறகு, உடனடியாக இணைப்புக் கொடுத்தார்கள். இந்த நிலை ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்ற இடத்திற்கே வந்தால், சாதாரண இடங்களுக்கு என்ன நிலை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டில் எத்தனையோ கிராமங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. மின்சார இலாகாவின் அஜாக்கிரதையின் காரணமாக இந்த நிலை ஏற்படுகிறது. பணம் வசூல் செய்வதிலேதான் தீவிரம் காட்டுகிறார்களே தவிர, நாம் மக்களுக்காக இருக்கிறோம் என்ற எண்ணமே இல்லாமல் பல்வேறு வகையில் தவறு நடக்கிறது. இவைகளை எல்லாம் களைய வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இந்த துணை மானிய மதிப்பீட்டின் மீது பேசுவதற்கு எனக்கு அனுமதி தந்திருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் நேற்றைய தினம் பேசுகிறபோது நானும் ஒரு விளக்கம் தருவதற்காக அனுமதி கேட்டபோது அனுமதி தர மறுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஒன் அவர் டிஸ்கஷன்தான். மினிஸ்டர் பேசிக் கொண்டிருந்தால்கூட 58-வது நிமிஷத்தில் இதனை நிறுத்தியாக வேண்டும். ஆகவே சீக்கிரத்தில் நீங்கள் பேசி முடிக்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கையில்கூட நான் பேசாவிட்டால் பரவாயில்லை, அந்த பாயின்டை மட்டும் சொல்கிறேன். குறிப்பாக விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மின் துண்டிப்பு இருக்காது என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் உறுதி மொழி கொடுத்த பிறகும் இன்னும் பலருக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்று சேலம் மாவட்டத்தில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கொடுக்கப்பட்ட உறுதி மொழியை நிறைவேற்றி அதன் மூலம் போராட்டத்திற்கு முடிவு காண வேண்டும்.

அடுத்து நேற்று மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவரவர்களாகிய கலைஞர் அவர்கள் பேசுகிறபோது மிகத் தெளிவாக தங்களுடைய கட்சியின் கோட்பாடுகளை பெரியார் அவர்கள் மீது தாங்கள் வைத்திருக்கின்ற மரியாதையைக் காட்டுகிற பாணியில் காஞ்சிபுரத்தில் அவருடைய சிலையை வைக்கப் போகிறோம் என்றும் இந்த அரசு அதற்கு அனுமதி தர மறுத்தால், நாங்கள் சிலையை வைத்தே தீருவோம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்த நாடு மதச்சார்பற்ற நாடு என்ற கோட்பாட்டை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவர்கள் பெரியாருக்குச் சிலை வைப்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் இந்துக்களின் இதயம் போல் இருக்கின்ற, அவர்களால் போற்றிப் பாராட்டப்படுகின்ற காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின் மடத்திற்கு எதிரே — அதாவது தற்போது காலையில் கேள்விப்பட்டேன், சிலை வைப்பதாகச் சொல்லப்படும் இடத்திற்கும், மடத்திற்கும் 120 அடிதான் இருக்கிறது என்று—சிலை வைத்தே தீருவோம் என்று சொல்வதும், அதற்கு அரசு அனுமதி மறுக்கப்படும் என்று சொல்கிறபோது, அந்த முயற்சியிலிருந்து பின் வாங்க மாட்டோம் என்று சொல்வதும் இந்த அரசுக்கு அவர்கள் விட்ட சவாலாக நான் கருதவில்லை. இந்துக்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கருதுகிறேன். இப்போது கூட எனக்கு பல தந்திகள் வந்திருக்கின்றன. அதாவது நேற்றைய தினம் இவ்வாறு கூறப்படுகின்ற சமயத்தில் இந்துக்களின் சார்பாக ஏதாவது பேசினீர்களா என்று என்னிடத்தில் கேட்கிறார்கள். வேறு யாரும் கிடையாது உங்களைப் போன்றவர்கள் தான் இந்துக்களுக்காகப் பேச முடியும் என்று கேட்டு எனக்குத் தந்தி அனுப்பி இருக்கிறார்கள். அதாவது இந்துக்களின் உணர்வை அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.

ஆகவே அவர்கள் நேற்றைய தினம் சொன்னது, இந்த அரசுக்கு விட்ட சவால் அல்ல, அப்படி நாங்கள் கருதவில்லை, இந்துக்களுக்கு எதிராக விட்ட சவால் என்றுதான் கருதுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னதற்கு பதில் சொல்கிறபோது கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைத் தெரிவித்தார்கள் ''நாங்கள் தேங்காயையும் உடைக்க மாட்டோம்'' அதே நேரத்தில் பெரியார் சொல்வது போல் பிள்ளையார் சிலையையும் உடைக்கத் தயாராக இல்லை என்று அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏதோ அண்ணா சொன்னார், பெரியார் சொன்னார் என்றெல்லாம்......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> துணை மானியக் கோரிக்கையை விட்டுவிட்டு இதையெல்லாம் பேசி உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். கொடுக்கப்பட்ட நேரத்தில் துணை மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுங்கள்.

1979 மார்ச் 23]

திரு. கே. கந்தசாமி: துணைச் சபாநாயகர் அவர்களே, கொஞ்சம் தயவு பண்ணி என்னைத் தொடர்ந்து பேச அனுமதிக்க வேண்டும். * * *

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * * என்று சொல்லப்பட்டதையும் அது குறித்து திரு. என். கிட்டப்பா அவர்கள் சொன்னதையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கே. கந்தசாமி: என்னைப் பேச விடுங்கள், இதைக் கூட சொல்ல எனக்கு அனுமதி இல்லை என்றால் நான் வேண்டுமானால் பதவியை ராஜினாமா செய்து விட்டுப் போய் விடுகிறேன். எனக்கு வக்கீல் தொழில் இருக்கின்றது. போய்விடுகிறேன். * * * புனிதமான இந்த அவையின் நேரம் வீணாக்கப்படுகிறது.

நான் நேற்றைய தினமே மாண்புமிகு கலைஞர் அவர்கள் பேசுகின்றபோது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று பேச எழுந்த போது, ''நீங்கள் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்லி உட்கார வைத்துவிட்டீர்கள், நானும் அமர்ந்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இப்படிப் பேசுவதிலேயே நேரம் போய்விடுகிறது.

[முற்பகல் 11–40]

திரு. கே. கந்தசாமி: இதையெல்லாம் நிறுத்திச் சொல்லுங்கள் என்று எங்களுக்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எங்களுடைய உணர்வுகளை இங்கே காட்டுகின்றோம். (குறுக்கீடு) எங்களுக்கு பேச தயவு செய்து சந்தர்ப்பம் கொடுங்கள். இங்கே சத்தம் போடுகின்றவர்களுக்குத்தான் சந்தர்ப்பம் என்று சொன்னால் நான் என்ன சொல்லுவது? இப்படிப்பட்ட ஒரு நிலையில் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், அவரைச் சேர்ந்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை பரப்புவதை நான் பாராட்டுகின்றேன், பெரியார் அவர்களுடைய கொள்கைகளை பரப்புவதை நான் பாராட்டுகின்றேன். அதே நிலையில் சங்கராச்சாரியார் இருக்கும் இடத்தில், பெரிவர்கள் எல்லாம் தெய்வமாக வைத்துப் போற்றும், இந்துக்கள் எல்லாம் தங்கள் தெய்வமாக நினைத்து வணங்கும் சங்கராச்சாரியார் மடத்தில்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

முன்பு, பலகோடி இந்துக்களின் வாக்குகளை பெற்று நாம் வந்திருக்கிறோம். அவர்களுடைய மனதை புண்படுத்துகின்ற வகையில் சங்ராச்சாரியார் இடத்திற்கு எதிரே பெரியார் சிலையை வைத்தே தீருவோம், உங்களுக்கு தெரிந்ததை பாருங்கள் என்று சொன்னால் என்ன பொருள்? இன்றைக்கு இந்துக்கள் இல்லாமல், ஒரு இஸ்லாமியக் கோவிலின் முன்னால் எல்லா மதமும் ஒன்று என்று நினைக்கிறவன் நான்—நான் கேட்டுக்கொள்வது ஒரு இஸ்லாமியக் கோவிலின் முன்போ, அல்லது ஒரு மாதா கோவிலின் முன்போ இந்த மாதிரி சிலை வைப்போம் வைத்தே தீருவோம் என்று பேசியிருந்தால் என்னவாயிருக்கும்? இந்துக்கள் ஏழையாக இருக்கலாம், ஆனால் கோழையாக இருந்து நினைத்து, இந்து மதத்தை எதிர்த்து, நகையாடுவதும், ஏளனம் செய்வதும் இப்படி அடிக்கடி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இந்த சவாலை எதிர்ப்பதற்கு இந்த இந்துக்கள் ஏழையாக இருந்தாலும், அவர்கள் கோழைகளாக இல்லை என்பதை எடுத்துச் சொல்வதோடு, அதை எதிர்ப்பதற்கு, அதை சந்திப்பதற்கு கந்தசாமி போன்றவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் (சில உறுப்பினர்கள் கைத்தட்டினர்....) தயவு செய்து கைதட்டி ஆரவாரம் செய்ய வேண்டாம். இதை நான் இந்துக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இதை டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களை வம்புக்கு இழுக்க வேண்டாம், சாது மிரண்டால் காடு தாங்காது என்று சொல்வார்கள், அதுபோல.....

திரு. மு. கருணாநிதி: தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவர் கந்தசாமி அவர்கள், ஏதோ சங்கராச்சாரியாருக்கு எதிராக பெரியார் சிலையை வைக்க வேண்டும் என்று நாங்கள் சொல்வதாக திரித்துக் கூறுகிறார். ஏற்கனவே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி இருந்தபோது, திராவிடக் கழகத் தோழர்களால் அனுமதி கேட்கப்பட்டது. அனுமதியும் கொடுக்கப்பட்டது. சங்கராச்சாரியார் மடத்திற்கு எதிராக சிலை வைத்தே தான் தீருவோம் என்று சவாலும் விடவில்லை. சங்ராச்சாரியார் மடம் இருக்கின்ற இடத்திற்கும், பெரியார் சிலை வைக்கவேண்டும் என்று கோரப்படுகிற இடத்திற்கும் இடையில் 120 அடிக்கு மேலாக வித்தியாசம் இருக்கிறது. சங்கராச்சாரியார் மடம் இருக்கின்ற சாலை வேறு, சிலை வைக்கவேண்டும் என்று கேட்கின்ற சாலை வேறு. அங்கிருக்கின்ற தேர் வீதியும், இன்னொரு வீதியும் சந்திக்கும் இடத்தில்தான் சிலை வைக்கவேண்டும் என்று இடம் கோரப்பட்டிருக்கிறது. ஆகவே சங்கராச்சாரியாரை எதிர்த்து சிலை வைக்கவேண்டும் என்ற கோரிக்கை அல்ல இது என்பதை கந்தசாமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு

வருகிறேன். மேலும் பெரியார் அவர்கள் மத மூட பழக்க வழக்கங்களை எதிர்த்து வந்திருந்தாலும், தன்னை இந்து என்றோ, முஸ்லீம் என்றோ, கிருஸ்துவன் என்றோ ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும், கடைசி வரை இந்து மதத்தில் தான் இருந்தார். இருந்தாலும், இந்து மதத்திலுள்ள மூட நம்பிக்கைகளையும், ஆஸ்தீக கொள்கைகளையும் எதிர்க்கின்ற உரிமை பகுத்தறிவாளர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட பகுத்தறிவாளராக விளங்கிய பெரியாருக்கு சிலை வைப் பதற்கு சங்கராச்சாரியார் அவர்களுக்குக் கூட நிச்சயமாக மறுப்பு இருக்காது. ஏதோ ராகவன், இருசப்பன் என்பவர்கள் கையெழுத்திட்டு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மறுப்பு தெரிவித்தார்கள். அதை அன்றைக்கு ஆட்சியில் இருந்த ஆணையாளர், கலெக்டர் இதற்கு அனுமதி மறுத்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதை மறுபரி சீலனை செய்யவேண்டும் என்ற பிரச்சினையைப்பற்றி நேற்று பேசியபோதுதான் பிரச்சினை பெரிதாக வளர்ந்தது. பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை மதுரை பல்கலைக் கழத்திற்கு வைக்கவேண்டும் என்று மதுரை மாவட்டத்திலுள்ள முக்குலத்தோர் மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது கூட காமராஜ் அவர்களுக்குப் பெருமை தரவேண்டும் என்று அவர்களுடைய பெயரை மதுரை பல்கலைக் கழகத்திற்கு பெயர் வைத்த நேரத்திலும், அதை எதிர்த்து இது போன்ற தந்திகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, பெரியார் சிலை வைக்கும் பிரச் னையில் இந்துக்கள் என்று முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பிரச்சினையை வளர்க்கக் கூடாது என்று கந்தசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பெரியார் அவர்களுக்கு விரோத மாக செயல்படவேண்டும் என்று தந்திகள் வந்திருப்பதாக நான் கூறவில்லை. காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட இருக்கும் இடத்தில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இராது, 120 அடி இடைவெளியிருக்கும் என்று குறிப்பிட்டார்கள். 120 அடி என்றால் எவ்வளவு தூரம் இருக்கும், சாதாரணமாக பேசு கின்ற கூட்டத்தில் கூட சிறிய அளவில் தூரத்தில் இருக் கின்ற இடங்கள் கூட ஆட்சேபகரமானவை என்று சொல்லி யிருக்கிறார்கள். மனுக்கள் கொடுத்திருக்கிறார் என்றால் எல் லோரும் சேர்ந்து கொடுக்க இயலாது. பொறுப்புள்ள ஒன்றிரண்டு பேர்கள்தான் மனுக்கள் கொடுக்க முடியும். அங்கிருக்கின்ற உணர்வுதான் முக்கியம். அந்த உணர்வை தெரிவிக்கின்ற முறையில் ஒன்றிரண்டு பேர்கள் மனு கொடுக்க கூடும்.

அதைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, பல சாதனை கள் செய்திருக்கிறார்கள் கடந்த காலத்தில். அப்போது

[திரு. கே. கந்தசாமி] [1979 மார்ச் 2?

1974-ல் காஞ்சிபுரம் முனிசிபாலிட்டி தீர்மானம் போட்டிருக்கிறது. 1976-ல் ஜனவரி வரையில் அவர் ஆட்சி இருந்தது. அதற்குள், அந்த இரண்டாண்டு காலத்தில் எத்தனையோ சாதனைக்ளைச் செய்திருக்கலாம். யார் தடுத்தார்கள்? அந்தக் காலத்தில் எல்லாம் விட்டுவிட்டு, இப்போது வேண்டாம். ஏன் இப்படி உத்தரவு பிறப்பித்தீர்கள் என்று இப்போது ஏன் கேட்க வேண்டும்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகப் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. எனவே, அந்த இடத்தில் வைத்து ஒரு குழப்பமான நிலைமையை உருவாக்குவதற்கு ஆளாக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : 74, 76 என்று சுருக்கமாகக் சொல்லி விட்டார்கள். ஆனால், 74 ஆம் ஆண்டு இறுதிச் கட்டத்திலேதான் அதற்கான அனுமதி, நகராட்சிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் கல்நாட்டு விழாச் செய்துவிட்டு, பல பெரிய கட்சிகளாலேகூட அதனை நிறைவேற்றுவதற்கு 3, 4 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. திராவிடக் கழகத்திற்கு அப்படிப்பட்ட வசதி இல்லை. எனவே, அந்த ஓராண்டு காலத்திற்குள் இதனைச் செய்வதற்கு முடியாமல போய்விட்டது.

திரு. கே. கந்தசாமி : திராவிடக் கழகத்திற்கு அப்படிப் பட்ட வசதியில்லை என்று சொல்வது தப்பு. தந்தை பெரியார் அவர்களுக்கு கோடிக்கணக்கான பணம் இருப்பது நாட்டுக்குத் தெரியும். அத்தனைக்கும் மேலாக கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கிறார்கள். அவர் விரல் அசைத்தால், சிலை வந்திருக்கும். விளக்கத்திற்கு அவர் அப்படிச் சொல்லலாம். வாய்ப்பு நிறைய இருந்தது. எனவே, இதை ஒரு பர்சனல் சேலஞ்சாக எடுத்துக் கொள்ளாமல், ஏற்கனவே பல இடங்களில் மக்களிடையே பேரணாம்பேடு, புளியந்தோப்பு போன்ற இடங்களில் மதமாச்சரியங்களும், இனக் கலவரங்களும் ஏற்பட்டிருக்கின்றன, அதுபோன்று விபரீதங்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான்

திரு. மு. கருணாநிதி : மதுரைப் பல்கலைக்கழத்திற்கு, காமராஜ் அவர்களுடைய பெயர் வைத்தது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திரு. கே. கந்தசாமி : மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அந்தப் பிராந்தியத்திலே தியாகம் செய்த தேவர் அவர்களுடைய பெயர் குறிப்பிட வேண்டும் என்ற கருத்து பொது மக்களிடையே இருந்தாலும், சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள்

சொன்னாலும், இதிலே கருப்பையா நாடார் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே, இது பணத்திற்காகவோ, இனத் துவேஷத்திற்காகவோ அல்ல. அருள்கூர்ந்து கலைஞர் அவர்கள் இதற்கு வேறு கலர் கொடுக்க முயற்சிக்கக் கூடாது. இனத் துவேஷத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. கருப்பையா நாடார் கைது செய்யப்பட்டார். ஆகவே, நாடார் இனத்தவர் இதற்கு எதிர்ப்பு என்று வரக்கூடாது. மற்றும் சோலைக் கொம்பன் என்பவர் கைது செய்யப்பட்டார். இன்னும் சிலர் கைது செய்யப்பட்டார்கள். அதையெல்லாம் சொல்லி முடியாது. ஆகவே இதிலே இனத் துவேஷம் என்று..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரச்சினையை சீக்கிரம் முடித்து விடுங்கள். அதன் மீது அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். 11–58க்குள் முடிக்க வேண்டும். டிமாண்டுகளை எடுத்துக்கொண்டு, ஓட்டிற்கு விடவேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி: முடித்து வடுகிறேன். ஆகவே, மக்களிடையே அப்படி ஒரு எழுச்சி இருந்தது. அதை அரசு மறு பரிசீலனை செய்தது. மதுரை போன்ற வார்த்தையை சேர்த்துக் கொள்வது என்று சொன்னோம். பொதுமக்களின் அந்த உணர்வுக்கு மதிப்பளித்து, இந்த அரசு நடந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். போராட்டம் நிறுத்தப்பட்டது. இதிலே இனத் துவேஷமோ மத சம்பந்தமோ இல்லை, மக்கள் உணர்வுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதை ஒரு பெரிதாக்க வேண்டாம். மக்கள் உணர்வுதான் முக்கியம். எனவே, அங்கே தந்தை பெரியார் சிலை வைத்து, குழப்பமோ, கலவரமோ ஏற்படுவதற்கு நாம் காரணமாக இருக்க வேண்டாம் என்று தெரிவித்து அமருகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் இறுதித் துணை மானியக் கோரிக்கையில் 192 கோடி ரூபாய்க்கான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசின் கவனத்திற்கு ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அளவுக்கு மானியக் கோரிக்கை கேட்கின்றபோது, நாட்டில் இப்போது இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி இந்த அரசு சற்றுச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது. பல்வேறு பிரச்சனைகள், சிறு அளவில் ஆரம்பித்து, அவைகள் ஆரம்பத்திலேயே தீர்க்கப்படாமல் இருந்த காரணத்தினால், பெரிய பிரச்சனைகளாக இன்று மாறியிருக்கிறது, உருவெடுத்திருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஜே ஜேம்ஸ்] [1979 மார்ச் 23

[முற்பகல் 11.50]

குறிப்பாக விவசாயிகள் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் எந்த அளவுக்கு அவர்கள் பிரச்சினை வளர்ந்திருக்கிறது என்று பார்க்கவேண்டும். இதிலே அரசின் நிலையைப் பார்க்கிறபோது வருந்தத்தக்க நிலைதான் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதும் இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட வில்லை என்று சொன்னால் நிச்சயமாக இந்த அரசு அதைத் தீர்க்க முடியாமல் கவிழக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் கேட்பது உயர்மட்டக் குழு அறிக்கை வரும் வரையில் விவசாயிகள் மீது எந்த கெடுபிடி நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்பதுதான். துண்டிக்கப்பட்ட மின்சாரத்திற்கு இணைப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டும். மேலும், மின்சார பாக்கிக்காக மின் துண்டிப்பு கூடாது என்பது அவர்கள் கோரிக்கை. கடன் பாக்கி களுக்காக தீவிர நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்பது அவர் களுடைய கோரிக்கை என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. உயர்மட்டக் குழு அறிக்கை வரும் வரை கெடுபிடி நடவடிக்கை களில் அரசு இறங்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் பிரச்சினை சிறு பிரச்சினையாக ஆரம்பித்து எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஆரம்பத்திலேயே நீதிபதியைக் கொண்டு விசாரிப்பேன், போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்வேன் என்று கூறியிருந்தால் நிச்சயமாக பிரச்சினையே வளர்ந்திருக்காது. இன்றையதினம் அந்தப் பிரச்சினை கவலை அளிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். இப் போதும் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே பிடியாக, அடாபிடியாக, கவுரவப் பிரச்சினையாக எண்ணிக் கொண்டிருப் பது நிச்சயமாக மாநிலத்திற்கு உகந்தது அல்ல. அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க அரசு முன்வரவேண்டும். வழக்கறிஞர்களின் குறைந்தபட்ச கோரிக்கை ''நீதிபதியைக் கொண்டு இந்தக் காரியத்தை விசாரிக்க வேண்டும். போலீஸ் அதிகாரியை தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்க வேண்டும்'' என்பது. இதை அரசு ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாளையதினம் 25,000 ஆசிரியர்கள் ஏற்கெனவே அரசாங்கத் திடம் கொடுத்திருக்கிற பதினாறு அம்சக் கோரிக்கையை வைத்து தீவிர நடவடிக்கைகளில் இறங்க இருப்பதாக அறிக்கைகள் வந்திருக்கின்றன. அந்தப் பிரச்சினையைக் கூட வளரவிடாமல் ஆசிரியர்களை அழைத்துப் பேசித் தீர்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மானியக் கோரிக்கை கேட்கிறபோது ஏற்கெனவே இந்த மாநிலத்தில் மழையினால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்வதற் காக பணம் கூடுதலாகக் கோரப்பட்டிருக்கிறது. நீலகிரி,

இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுந்தான் மழையி னால் பாதிக்கப்பட்டதாகக் கூறியிருப்பது உண்மைக்குப் புறம் பானது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் சேதம் ஏற்பட்டு பல வீடுகள் அழிந்து போயின. ஏழை எளிய விவசாயிகளின் வெற்றிலை கொடிகள், சிறு தொழிலாளர்கள் நடத்தும் செங்கற் சூளைகள் எல்லாம் அழிந்து விட்டன. இவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுக்க நிதி ஒதுக்கவேண்டுமென்று கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாகவே மனு கொடுத்தேன், பரிசீலனை செய்து நியாயமான கோரிக்கைகள் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்மீது இதுவரை எந்த நட வடிக்கையும் எடுக்கவில்லை. செங்கல் சூளை வைத்திருக்கும் ஏழைத் தொழிலாளர்கள் வெள்ளச் சேதத்தால் பெரும் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்லா யிரக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள வீடுகள் வெள்ளத்தால் சேதமுற்று நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவது சம்பள ஆணைக் குழு சிபாரிசின்படி அதிகமாக அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுத்திருப்பதால் கூடுதல் பணம் கோரப்பட்டிருக்கிறது. மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் அறிக்கையை ஏன் இந்த மன்றத்தில் இந்த அரசு வைக்கவில்லை? ஆணைக் குழுவின் அறிக்கையின்படி பல்வேறு அரசு ஊழியர்களுக்கு சம்பள மாற்றங்கள் ஏற்படுத்த இந்த அரசு தயாராக இல்லை. குறிப்பாக நகர் மன்றங்களில் பணி யாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு, 14–1–1970க்கு முன் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் ஏற்கெனவே இருந்தபடி 50 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், மற்ற அரசு ஊழியர்களுக்கு எல்லாம் குறைந்த பட்சம் ஓய்வூதியம் 100 என்று அளிக்கப்பட்ட போதிலும் இந்தப் பிரிவினருக்கு அந்த மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஞ்சினியர்களைப் பொறுத்தவரையில் மூன்றாவது ஆணைக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பல்வேறு தில்லுமுல்லுகள் இருக்கின்றன. அவர்கள் அதிலே பல்வேறு மாற்றங்கள் ஏற் படுத்தவேண்டுமென்று மனு அரசாங்கத்திற்குக் கொடுத்து இருக்கிறார்கள். பரிசீலனை செய்யவில்லை, உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பள ஆணைக் குழு ஏற்படுத்தப்பட்டால், எப்போதுமே அனாமலீஸ் கமிஷன் என்று போடுவது வழக்கம். ஆனால், அனாமலீஸைத் தீர்ப்பதற்கு இதுவரையிலே தனிநபர் நியமிக்கப்படவில்லை. அனாமலிஸ் இருக்கின்றன. ஆகவே, நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கபட்ட உறுதிகள், திட்டங்கள் பல இன்னும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை, நிறைவேற்றப்படவில்லை. பல ஏற்கெனவே எடுத்துச் சொன்னாலும் இப்போது ஒன்றிரண்டைச் சொல்ல விரும்பு கிறேன். ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் அமைக்கப் படுவதாக 1978—79ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப் பட்டது. இதுவரையில் அதற்கான பாரங்கள்கூட அடிக்கப் படவில்லை என்று எனக்குத் தகவல் இருக்கிறது. இதற்கு முன்னதாக ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் மற்ற தேசங்களுக்கு அனுப்ப இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிற போது அதைப்பற்றி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை . அந்த அளவிற்கு மந்த நிலைமையில் இந்த அரசு செயலற்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்களுக்காக கிராமத்திலே நியாய விலைக் கடைகள், மீன் நியாய விலையில் கிடைக்கவும், மீனவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் ஏற்படுத்தும் திட்டம் போடப்பட்டது. ஆனால், எந்த கிராமத்திலே மீன் நியாய விலைக் கடை அமைக்கப்பட்டிருக்கிறது என்று தேடித்தான் பார்க்க வேண்டி யிருக்கிறது. இடிபப்பட்ட அறிவிப்புகளால் மக்கள் ஏமாற்ற மடைந்திருக்கிறார்கள். மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு ஏதோ நிதி கோரப்பட்டு இருக்கிறது. தொழிலாளர்களுக்கு கம்பல்சரி டெபாசிட் ஒரே தவணையிலே அளிக்க வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்தும் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த முறையிலே வழங்கப்பட வில்லை. அதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கப்பல் வாங்குவதற் காக நிதி கோரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த மாமன்றத் திலே இதைப்பற்றி விவாதிக்கப்பட்டு ஏற்கனவே வாங்கப்பட்ட கப்பல்கள் ஒட்டைக் கப்பல்கள், அதனால் நஷ்டத்தில் இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறபோது இப்போது மேலும் கப்பல் வாங்குவதற்கு என்ன தேவை என்பதை கேட்க விரும்பு கிறேன். கஞ்சிக்கு வழியற்ற மக்கள் நாட்டிலே ஏராளமாக இருக்கிறபோது கப்பல் எதற்காக வாங்க வேண்டும், தேவை தானா ? அதைப்போலவே விமானங்கள் வாங்குவதாக இருக் கிறது என்று பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். அதுவும், தேவையற்றது, இப்படி தேவையற்ற செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேச வேண்டியவைகளையெல்லாம் பேசியதற்குப் பிறகு அவையின் நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை என்று கூறி இந்த துணை மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே நான் இங்கே சமர்ப்பித்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அவை உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி வுற்றது. 1978-79 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு :

பேரவை முன்னுள்ள கேள்வி : "1978-79 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் அடங்கிய 20-3-1979 தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 58 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1978-79 ஆம் நிதி ஆண்டிற்கான கூடுதல் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று கோரிய தொகைகள் வழங்கப் பெற்றன.

நிறைவேற்றப் பெற்ற

1978-79 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான

கோரிக்கைகள்— விவரம்.

A. வருவாய்க்கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை	1	நிலவரித் துறை	41,47
ஷை	2	மாநில ஆயத்தீர்வை ..	18,07
ஷை	3	மோட்டார் வண்டிகள் சட் டங்கள்— நிர்வாகம்.	10,22
ஷை	4	பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வை களும்— நிர்வாகம்.	49,64
ஷை	5	முத்திரைத் தாள்கள் நிர்வாகம்	3,55

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

		(ரூபாய் ஆயிரத்தில்)
ஷை	6 பத்திரப் பதிவு	9,88
ஷை	7 மாநிலச் சட்ட மன்றம் ..	11,01
ஷை	8 தேர்தல்கள் ..	11,69
ஷை	9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.	2,23,60
கோரிக்கை	11 மாவட்ட நிர்வாகம்.. ..	1,02,74
ஷை	12 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.	12,58
ஷை	13 நீதி நிர்வாகம்	35,[illegible]
ஷை	15 காவல்துறை	1,75,16
ஷை	17 கல்வி	11,43,24
ஷை	18 மருத்துவம்	5
ஷை	19 பொதுச் சுகாதாரம்.. ..	3,84,71
ஷை	20 வேளாண்மை	4,14
ஷை	21 மீனளம்	1,65,47
ஷை	22 கால்நடை வளர்ப்பு ..	12,18
ஷை	23 கூட்டுறவு	1,85,25

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 23]

ஷை	24	தொழில்கள்	3,81,82
ஷை	25	சின்கோனா	23,80
ஷை	26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்.	2,06,53
ஷை	27	கதர்	85,52
ஷை	28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.	1,50,45
ஷை	29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.	32,66
ஷை	30	சமூக நலன்	4
ஷை	31	பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.	64,38

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

			(ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	32	பின்தங்கிய வகுப்பினர் நலன்	1
ஷை	35	நுகர் பொருள் வழங்கல். .	20,25
ஷை	36	பாசனம்	3,66,35
ஷை	37	பொதுப் பணிகள் கட்டடங்கள்	2,17,37
ஷை	38	பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும்.	2,81,00
ஷை	39	சாலைகளும் பாலங்களும் ..	8,49,50
ஷை	40	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து.	1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஷை	41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.	1,36,88
ஷை	42 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.	2.50,18
ஷை	43 பல்வகை	1
ஷை	45 காட்டு வளத் துறை ..	38,34
ஷை	46 இழப்பீடுகளும் ஒதுக்கீடு களும்.	2,14,14
ஷை	47 தகவல் சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல்.	14,74
	மொத்தம்—A வருவாய்க் கணக்கு ..	59,83,97

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

		(ரூபாய் ஆயிரத்தில்.)
கோரிக்கை	48 ஜமீன்தார்களுக்கு இழப்பீடு	9,93
ஷை	50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.	1
ஷை	51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.	1,30,23
ஷை	53 பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்ட டங்கள்.	6
ஷை	55 சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து குறித்த மூலதனச் செலவு.	3,45,46

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 23]

ஷ	56 காட்டுவள மூலதனச் செலவு	1,71,22
ஷ	57 பல்வகை மூலதனச் செலவு ..	13,86,72
	மொத்தம்—B. மூலதனக் கணக்கு..	20,43,63

C. கடன்களையும், முன்பணங்களையும் வழங்குதலும், கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

கோரிக்கை	58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.	1,11,42,87

(நண்பகல் 12—00)

(1) அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(1) அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1971–72-ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையின் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது :—

"In pursuance of Article 203, clause (3) of the Costitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Excess Expenditure for the year 1971–72".

(8) 1971–72 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "1971–72ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979 மார்ச் 20ஆம் நாள் இட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் 3 முதல் 45 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே மூன்றாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1971–72 ஆம் நிதி ஆண்டிற்கான மிகைச் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகைகள் வழங்கப்பெற்றன.

நிறைவேற்றப்பெற்ற 1971–72ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(1)		(2)	(3) (ரூபாய்)
கோரிக்கை	3	பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் ..	6,10,040
	6	மாநிலச் சட்ட மன்றம் ..	25,608

1979 மார்ச் 23]

(1)		(2)	(3) (ரூபாய்)
கோரிக்கை	7	தேர்தல்கள்	3,49,208
ஷை	11	சிறைச்சாலைகள் ..	10,40,589
ஷை	14	மருத்துவம்	91,19,326
ஷை	16	வேளாண்மை	88,57,504
ஷை	23	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன	5,96,447
ஷை	26	பாசனம்	11,11,793
ஷை	27	பொதுப் பணிகள்—பணிகள்	1,05,13,810
ஷை	29	பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் ..	7,79,892
ஷை	31	பஞ்சத் துயர் தணிப்பு	1,16,14,748
ஷை	32	ஓய்வூதியங்கள்	15,82,316
ஷை	36	ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ..	71,87,204
ஷை	43	சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	2,11,97,735
ஷை	44	காட்டுவள மூலதனச் செலவு	3,70,573
ஷை	45	ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்	1,00,825
		பெரு மொத்தம் ..	7,50,57,618

1. அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு'' அறிமுகம் செய்ய அதினுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(1) அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979–80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1979–80.

(9) வரவு செலவுத் திட்டம், 1979—80—வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,89,64,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஊராட்சிகள் ஒன்றியத் தேர்தல்கள் உடனடியாக நடத்தக் கோரி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சி நலத் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,89,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''. என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, கிராமங்களில் உள்ள அரிஜன குடியிருப்புகளுக்கு சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, சுடுகாட்டுக்கு நல்ல பாதை அமைப்பது, வானொலி வழங்குதல் ஆகியவைகள் செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 40,89,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன : தலைவரவர்களே, ஊராட்சி-பேரூராட்சி மன்றங்கள் நிதி பற்றாக்குறையால் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற இயலாத நிலைமையை மாற்ற அதிகமாக அரசு உதவித் தொகைகளை ஒதுக்க வேண்டுமென்பதை வற்புறுத்த—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,89,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''. என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to bifurcate the Panchayats in Kanyakumari District as viable units before the Panchayat elections as some of the Panchayats do not have minimum population and income to pay even the electricity bill I move——

"That the allotment of Rs. 40,89,64,000 under Demand No. 28-Community Development Projects be reduced by Rs. 100".

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 40,89,64,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,80,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, நகர்ப்பகுதி மேம்பாடு நலனைக் குறித்து, வாகனப்போக்கு வரத்து எதிர் காலத்தில் மிக நெருக்கடியாக ஏற்படக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்க சாலைகளை அகலப்படுத்துவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,80,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1979 மார்ச் 23]

திரு. ரெ. வீ சவுந்திரராஜன் : தலைவரவர்களே, நலிவுற்ற நகராட்சிகளுக்கு அரசு நிதி உதவி செய்வது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ, 9.80,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத்தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கு. ர மணி : தலைவரவர்களே, கோவை மாநகராட்சியில் வீட்டு வரிகளை அதிகமாக திடீர் என்று உயர்த்தி ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் தாமதமாவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,80,40,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.9,80,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை நகருக்கு இதுகாறும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,80,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. பெ சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தினுடைய இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை

* 701-731ம் பக்கத்தில் கொள்கை விளக்கம், இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

நான் வற்புறுத்தி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஏற்கனவே, இங்கே ஊராட்சிகள் சட்டம் வந்தபொழுது, ஜுன் மாதத்திலேயே தேர்தல் நடத்தப்படும் என்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இங்கே அறிவித்தார். மக்கள் எல்லாம் தேர்தல் வரும் என்கிற அடிப்படையில், கிராமங்களில் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி ஜுன் மாதத்திலே நடத்தப்பட வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும், எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே, தேர்தலுக்கு முன்னதாக சில ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படவுள்ளன என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படவுள்ளன என்று சொல்வதனால், ஊராட்சிகள் தேர்தல் தள்ளிப் போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. அந்த அச்சம் ஏற்படாவண்ணம், ஜுன் மாதத்திலே தேர்தல் நடத்தப்படுவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

அதே நேரத்திலே, இங்கே பல்வேறு தலைப்புகளில் ஊராட்சி ஒன்றியங்களுடைய வளர்ச்சிக்காக, அல்லது கிராம வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதிகளை நான் பார்க்கின்றபொழுது இன்றையதினம் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அதனுடைய வருவாய் உயர்ந்திருக்கிற அளவிலே இந்தச் சமுதாய நலத் திட்டத்திற்கு அதிகமான தொகை ஒதுக்கப்படவில்லையென்பதை நான் மெத்த பணிவுடன் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலங்களிலும் சரி, அரசாங்கம் சொல்கின்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளைக் கிராமங்களிலே இருக்கிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஒன்றியக் குழு, அதிலே பணியாற்றுகிற பல்வேறு அலுவலர்கள் எந்த அளவிற்கு உற்சாகத்தோடு, அக்கறையோடு, பாடுபடுகிறார்களோ, அரசாங்கம் எத்தனை திட்டம் போட்டாலும், அந்த அளவிலேதான் திட்டங்கள் கிராமங்களிலே செயல்பட முடியும்.

1979 மார்ச் 23] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

[பிற்பகல் 12-10.]

அந்த அளவிலேதான் அரசாங்கம் எத்தனை திட்டங்கள் போட்டாலும் கிராமங்களிலே அந்த திட்டங்கள் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். சமுதாய நல திட்டம் என்று சொல்கிற போது சமுதாயத்திலிருக்கிற, அடித்தளத்தில் இருக்கிற மக்களுக்கு, கிராமப்புறங்களுக்கு வேண்டிய சாலைகள் அமைக்க, பாசன வசதிகள் அமைக்க, குடிதண்ணீர் கிடைக்கச் செய்ய, நீர்தேக்க தொட்டிகள் அமைக்க, கால்நடை வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, பள்ளிக்கூடங்கள் கட்டுதல், மருத்துவ வசதி இப்படி பல்வேறு வசதிகள் எல்லாம், அடித்தளத்திலே இருக்கிற கிராம மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று தான் ஊராட்சி ஒன்றியங்கள் பல ஆண்டுகளாக நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க வேண்டுகிறேன். ஆனால் இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு விட்டன. தனி அதிகாரிகள் இருந்து ஆட்சி செய்து வருகிறார்கள். 6 மாதத்திற்கு ஒரு முறை தனியதிகாரியினுடைய பதவிகாலம் நீட்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இன்றைய தினம் கிராமங்களுடைய வளர்ச்சிப் பணி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதிலே ஆளும் கட்சிக்கோ, எதிர்க் கட்சிக்கோ கருத்து வேற்றுமை இருப்பதற்கு நியாயம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலும், காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலும் கிராமங்களிலே தெருவிளக்குகள் அமைப்பதற்கு நாங்கள் எல்லாம் எத்தனை பாடுபட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிற நேரத்திலே, இன்றையதினம் அந்த தெருவிளக்குகள் எரிகின்றனவா என்று பார்த்தாக வேண்டும். இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு ஒரு மாறுதலை செய்தார்கள். ஊராட்சி மன்ற தலைவர்களே அதற்கு, அந்த விளக்குகளுக்கு வேண்டிய பல்புகளை வாங்கி போட்டுக் கொள்ளலாம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், பல்புகளை நாங்கள் வாங்கிப் போட்டாலும், அதற்கு வேண்டிய மற்ற சாமான்கள் நாங்கள் வாங்கிப்போட்டாலும், மின்சாரத் துறையிலே இருக்கிற அலுவலர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களோடு ஒத்துழைப்பதில்லை. அப்படிப்பட்ட காரணத்தினால் இன்றைய தினம் கிராமங்களிலே இருக்கிற தெருக்கள் இருளோடி இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்தாக வேண்டும்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மின்துறை அமைச்சர் அவர்கள் அதை விரைவாக கவனிக்கப்படும் என்று சொன்னதாக சொன்னார்கள்........

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவில்லை. நமது மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிவித்தார்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நன்றி, ஆனால் அதை மிக விரைவாக செயல்படுத்துவதற்கு நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தெருவிளக்குகளின் காரணமாக ஊராட்சியினுடைய வருவாயிலிருந்து பெரும் பகுதி நிதி மின்சாரத்துறைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதற்காக மீட்டர்கள் வைத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய நிர்வாக சீர்கேடுகளை களைவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் சுதந்திரம் வாங்கி இத்தனை ஆண்டுகள் ஆன பிறகும் கூட கிராமங்களில் மின் விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டு தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தெருவிளக்குகள் அமைக்கிறபோது, மின் துறையினர் ஒரு பெரிய தொகையை டெப்பாசிட்டாக கட்டியாக வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்தத் தொகையை கட்டுவதற்குரிய நிலையில் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமை இல்லாத காரணத்தினால், மின்சார விளக்குகள் போடுவது காலதாமதம் ஆகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதை நீங்கள் நீக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குடிநீர்ப் பிரச்னை. ஊராட்சிகளின் அடிப்படைச் சட்டத்தைப் படித்தாலே ஊராட்சி ஒன்றியங்களின் தலையாய கடமை என்று சொன்னால் கிராமப்புறங்களிலே இருக்கிற மக்களுக்கு ஊராட்சி நிதியிலிருந்து குடி தண்ணீர் பெறுகிற கடமைதான் தலையாய கடமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றையத்தினம் கிராமப்புறங்களிலே குடி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை நான் கூறித்தான் ஆக வேண்டும். ஆனால் அதைச் சொன்னால் நீங்கள் இருந்தீர்களே இந்த ஆட்சியிலே, காங்கிரஸ் கட்சி இருந்ததே இந்த ஆட்சி பீடத்திலே அப்பொழுது என்ன செய்தீர்கள் என்று கேட்பார்கள்.

இந்தக் கட்சிகளெல்லாம் ஆட்சியிலே இருந்தபோது அவர்கள் செய்தார்கள். குடி தண்ணீர் வசதிகள் நல்ல முறையிலே செய்துத் தரப்பட்டன. எந்த ஒரு ஆட்சியிருந்தாலும் குடி தண்ணீர் பிரச்னை தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. எந்த ஆட்சியும் அதை முழுமையாக செய்திருக்காது என்றாலும் கிராமங்களிலே ஏற்கெனவே மேல் நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. குடிநீர் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. குடிநீர்

வாரியமும் செயல்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களும் செயல் பட்டன. ஆனால் பராமரிப்பு பணிகளை ஊராட்சி மன்றங்கள் செய்து வந்தன. ஆனால் இன்றைய தினம் இவைகள் எல்லாம் குடிதண்ணீர் வடிகால் வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் சட்டம் போடுகிறீர்கள்.

சாதாரணமாக ஒரு கிராமத்தில் அங்கே இருக்கின்ற மோட் டார்கள் மின்சாரம் வராத காரணத்தால் காயல் தீய்ந்து போய் விடுகிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கமிஷனர்களிடத்தில் பணம் பெற்று மறு நாளோ அல்லது அதற்கு மறு தினமோ அதை எடுத்துச் சென்று ரிப்பேர் செய்து உடனடியாக போடுவதற்கு வசதிகள் இருந்தன. ஆனால், இன்றையத் தினம் 3 மாதம், 6 மாதம் ஆகின்றது. என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர் கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுத்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லி, பலமுறை அங்கேயுள்ள பொறியாளரைச் சந்தித்தும், மோட்டார் பழுது பற்றியும் எடுத் துச் சொல்லியும் 6 மாத காலம் ஆகிறது என்பதை இந்த நேரத் தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர் களே, இப்போது ''ஆஸ் எ டிரையல் மெஷர்'' பரிட்சார்த்த மாக மெயிண்டனென்சை தென்னாற்காடு, வடாற்காடு, செங் கற்பட்டு ஆகிய 3 மாவட்டங்களிலும் டிவாட் போர்ட் நிறை வேற்றி வருகின்றது. எங்கெங்கே இப்படி மோட்டார்கள் வேலை செய்யவில்லை என்று தகவல் வருகிறதோ அங்கே அவர்கள் உடனடியாகச் சென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து அதை பழுது பார்த்து வருகிறார்கள்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். எடுத்துக் கொண்டு இருக்கிற மானியம் ஒன்றுதான். எனக்கு இதிலே ஒரு சந்தேகம். டிரைனேஜ் வாட்டர் சப்ளை பற்றியும் எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? தனித்தனியாக எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? நீங்களே டிரைனேஜ் வாட்டர் சப்ளைபற்றி ஒரு வெட்டுத் தீர்மானம் அனுமதித்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டிற்கும் சம்பந்தம் இருக்கின்ற காரணத்தால், உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொன்னால் போதும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நிர்வாகத்தில் கீழ் மட்டத்தில் இருக்கும் பிரச் னையை நாங்கள் இங்கே சொல்கிறோம். அவர்கள் ஏதோ 3 மாவட்டங்களில் பரிட்சார்த்தமாக அதைச் செய்வதாகச்

சொன்னார்கள். அவர்கள் பரிட்சார்த்தமாக அந்தத் திட்டத்தைச் செய்து கொண்டு வருவதால், அந்த மக்களும் பரிட்சார்த்தமாக கஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, அது முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் அது சரிப்பட்டு வராது. அதிலே குறைபாடுகள் வரும். ஆகவே, ஏற்கெனவே உள்ளது போல் ஊராட்சி மன்றங்களே அதைச் செய்வதற்கு விட வேண்டும். ஊராட்சி மன்றங்களும் புதிய முறை வேண்டாம் என்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அதை ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசு இதை கவனித்து அந்த மக்களின் கஷ்டத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் இன்றையத்தினம் நான் முதலில் கூறியதுபோல் ஏராளமான ஒன்றியங்களில் துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன. துவக்கப் பள்ளிகளுக்கு ஏராளமாக கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் ஏற்கெனவே அரசாங்க மானியம் கொடுப்பதை விட பொது நிதியில் இருந்து ஏராளமான கட்டிடங்களை எல்லாம் நாங்கள் கட்டி வந்து இருக்கிறோம் கிராமப்புறத்தில். அப்படியிருந்தும் மக்கள் தொகை அதிகமாக வளர்ந்து வருவதால் ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடங்கள் கிராமப்புறங்களில் போதுமானதாக இல்லை. ஆகவே, 300 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் புதிய பள்ளிகள் துவங்கவேண்டுமானால் அதற்கு கட்டிடம் தேவைப்படுகிறது. அப்படி இருக்கிறபோது, அரசாங்கம் ஆண்டுக்கு ஒரு பள்ளி எடுத்துக் கொண்டால் போதும் என்று அந்த அளவில் நிதி ஒதுக்கித் தருகிறார்கள். பள்ளிகள் கட்டுவதற்காக ஒன்றியத்தில் தீர்மானம் போட்டு, மதிப்பீடு தயாரித்து, கோட்டப் பொறியாளர் அனுமதி பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பணியைச் செய்யலாம், அது நியாயமான பணிதான் என்று அவர்கள் உத்தரவு தந்த பிறகு, ஒன்றியங்கள் அந்தப் பணியை நிறைவேற்றி வந்தன. இது காலதாமதத்தை குறைப்பதற்காக முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் செய்யப்பட்டது. பிறகு நெருக்கடி நேரத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் இருந்த அதிகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மாற்றப்பட்டது. 1 இலட்ச ரூபாய் நிதி என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அளிக்கலாம். அதற்கு மேல் இருந்தால் ஊரக வளர்ச்சி இயக்குனருக்கு வரவேண்டும். $3\frac{1}{2}$ இலட்சம் ரிசர்வ் நிதி இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12·20]

நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்தில் 3 இலட்சம் ரூபாய் ரிசர்வ் நிதியாக வைக்க வேண்டுமென்பது அவசியமா? நிச்சயமாக அந்த அவசியம் ஏற்படாது. 3 இலட்சம் ரூபாய்க்கு உடனடியாகச் செலவு வரவேண்டிய அவசியம் எந்த ஒன்றியத்திற்கும் ஏற்படாது. அதனால் ஒரு இலட்சம் ரூபாய் ரிசர்வ் நிதியில் வைத்துக் கொண்டு

மீதிப் பணத்தை இப்படிப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு செல வழித்துக் கொள்ள அனுமதி அளிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்க வேண்டும். அப்படியானால்தான் ஊராட்சி ஒன்றியங்கள் விரைவாகப் பணியாற்றி, வேகமாக முன்னேற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களுக்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். ஏற்கெனவே மெயின் பில்டிங் இருந்தாலும் கூட் துணைக் கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் பல்வேறு இடங் களில் இருக்கிறது. அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டால் அதற்கு அனுமதிக்க வேண்டும். சில ஒன்றியங்களில் மெயின் பில்டிங் இருக்கும். முதலிலே 3 அல்லது 4 ஆசிரியர்கள் அங்கே பணியாற் றியிருப்பார்கள். வளர்ந்து வரும் தேவைக்கேற்ப, 12, 13 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் துணைக் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது ஒரு குறைபாடாக இருக்கிறது. அப் படிப்பட்ட இடங்களில் துணைக் கட்டடம் கட்ட நிச்சயமாக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது சாலை. சாதாரணமாக ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சாலைகள் பழுதுபார்க்கப்படுவது எப்போது என்றால் ஒன்றில் புயல் அடிக்க வேண்டும். இல்லையென்றால் பெருமழை பெய்து வெள்ளம் அதிகமாக வரவேண்டும். இல்லா விட்டால் வறட்சி வரவேண்டும். இப்படி ஏதாவது ஒன்று வந்தால் தான் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஓரளவுக்கு செப்பனிடப் படக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இல்லை என்றால் அந்த சாலைகள் அப்படியே கிடக்கின்ற கட்டாய சூழ்நிலை இருந்துவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம் ஊராட்சிகளின் நிதி மிகவும் குறைவு. 3 மைல், 4 மைல் நீளமுள்ள சாலைகள் கூட ஊராட்சியின் பொறுப்பில் இருக்கின்றன. அதைப்போல் ஊராட்சி ஒன்றியத் திற்கும் இருக்கிறது. நிதிவசதி மிகவும் குறைவாக இருப்பதால் பராமரிக்க முடியாமல் இருப்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் சாலைகளைப் பராமரிக்க ஒதுக்குகின்ற நிதியில் பெரும் பகுதி ரோடு இன்ஸ்பெக்டர்கள், காங்க் கூலிகளுக்கு சம்பள மாகப் போய் விடுகிறது. மீதி இருக்கிற சிறு நிதியைக் கொண்டு சாலைகளைச் சரியாக செப்பனிட முடியவில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் ஒரு முடிவு எடுத்து, கிராமச் சாலைகளை செப்பனிடுவதில் அக்கறை காட்ட வேண்டுமென்று இந்த நேரத் தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏராளமான சாலை களைப் போட்டார்கள். சாலைகளுக்காக பல இலட்சக்கணக் கான ரூபாய் செலவிடப்பட்டது. இன்றையதினம் அந்த சாலை

களைப் பராமரிக்கக்கூடிய சூழ்நிலை இல்லாமல், ஏற்கெனவே போட்ட சாலைகள் பழுதடைந்து கிடக்கிற காரணத்தால் புதிய சாலைகள் போட முடியாமல், இருக்கின்ற சாலைகளைப் பழுது பார்ப்பதற்கே ஏராளமான பணம் செலவிடப்படுகிறது. இந்த நிலையை எண்ணிப்பார்த்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி என்று சொல்லுகிறபோது, வருவாய் அடிப்படையில் இரண்டு, மூன்று வகையாகப் பிரித்து, ஊராட்சியினுடைய நிதிக்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட தூரமுள்ள சாலைகளை ஊராட்சிகள் பராமரிக்க வேண்டும்; அதற்குமேல் ஒரு குறிப்பிட்ட தூரமுள்ள சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்க வேண்டும்; அதற்குமேல் தூரமுள்ள சாலைகளை அரசாங்கம் பராமரிக்க வேண்டும் என்ற ஒரு அடிப்படையை வகுத்துக்கொண்டு, அதைச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்றையதினம் கிராமப்புறங்களில் இருக்கிற சாலைகள் சரியான முறையில் செப்பனிடப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று சிறுபாசனம். ஏற்கெனவே சிறுபாசனம் என்பதற்கு மிகக்குறைந்த நிதியைத்தான் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதித்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு ஒரு ஏரியை பராமரிக்க வேண்டுமென்றால், 1,500 ரூபாய், 2,000 ரூபாய் என்று மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கிய நேரம் கடந்துவிட்டது. ஒவ்வொருவருக்கும் 10, 10 நிமிடம்தான். முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஆகவே, அந்தக் குறைந்த நிதியைக்கொண்டு சரியாக ஏரிகளைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் அதற்கும் கோரிய நிதியைத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இன்றைக்கு ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் சீர்கேடு அடைந்திருக்கிறது. இங்கே நிதிநிலை அறிக்கையில் பேசும்போது கூட பல பிரச்சனைகளைச் சொல்லியிருக்கிறோம். அவைகளை எல்லாம் அரசாங்கம் மனதிலே கொண்டு, ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

1979 மார்ச் 23]

*திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவித் தலைவரவர்களே, இந்த சமுதாய நலத்திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சமுதாயம் இப்போது நன்றாக இல்லை என்றே சொல்லலாம். ஏன், இந்த சட்டமன்றமே கூட இப்போது நன்றாக இல்லை. சட்டத்தின் பெயரால் கூச்சல்களும் குழப்பங்களும் உண்ணாவிரதங்களும் அன்றாடம் எங்கே பார்த்தாலும் நடந்துகொண்டிருக்கின்றன. இது போன்ற நிகழ்ச்சிகள் இப்போது அதிகமாகி இருக்கின்றன. இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ற பெயராலே இந்த மன்றம் கூட நடப்பது தடைப்படுகிறது. இதற்கு ஆளும் கட்சி மாத்திரம் பொறுப்பல்ல என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். எதிர்க்கட்சிகளும் கூட இதற்குப் பொறுப்பு என்று தான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். இந்த மன்றம் எவ்வளவு பாரம்பரியமானது. அப்படிப்பட்ட இந்த மன்றம் நடப்பதிலே கூட இருள் சூழ்ந்திருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் நியாயத்திற்கு துணை போனால்தான் இந்த நாடு நன்றாக இருக்கும். அதற்குப் புறம்பாக நாம் எல்லாம் நடப்பது நல்ல நிலையிலே கொண்டுபோய்விடாது. என்பது என்னுடைய அபிப்பிராயம், என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வெளியிலே நம்மைப் பற்றி நன்றாகப் பேசவில்லை. இந்த சட்ட மன்றத்தைப்பற்றி வெளியிலே மிக மோசமாகப் பேசுகிறார்கள். ஆகவே இந்த மன்றத்திலே இருப்பவர்கள் இந்த மன்றத்தினுடைய பாரம்பரியத்தைக் காப்பாற்றி நடக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி வளர்ச்சி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி வளர்ச்சி இப்போது ஸ்தம்பித்திருக்கிறது. ஊராட்சி ஒழுங்காக நடைபெறவில்லை. அங்கே குழப்பம் மேலோங்கி இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாக கமிட்டிகள் அமைக்கப்பட்டு அவை செயல்படத் துவங்கியதன் காரணமாக ஊராட்சி வளர்ச்சி குன்றியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நிர்வாக அமைப்பின் வளர்ச்சி பற்றிக் கூறியிருக்கிறார்கள். நிர்வாகம் தவறான கணக்குகளை எழுதி, கஜானா காலியாகக் கூடிய நிலையைச் செய்துகொண்டிருக்கிறது. இதற்காக மறுபடியும் ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தலை நடத்தி சரியான முறையிலே ஏற்பாடு செய்யாததன் காரணத்தால் இப்போது அது மோசமான நிலையை அடைந்துகொண்டிருக்கிறது என்று நான் கூறிக்கொள்கிறேன். நிர்வாகக் கேடு பற்றி அரசு கவலைப்படுவதில்லை என்று நான் நினைக்கிறேன். அதைப் பற்றி எத்தனையோ முறை சொன்னாலும் கூட அதற்காக விரைவிலே நடவடிக்கை எடுப்பதில்லை. எப்படியாவது ஆட்சி நடந்தால் சரி என்று நினைத்தால், அது தவறாகக் கொண்டு

போய்விடும் என்பதை இந்த ஆட்சி உணரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக கன்னங்குடி ஊராட்சி ஒன்றியத்திலே கமிஷனர் ஒருவர் தவறு செய்கிறார் என்று அதாவது அவர் லஞ்சம் வாங்குகிறார் என்று அப்போதிருந்த கலெக்டர் நாராயணன் அவர்களிடம் எத்தனையோ முறை எடுத்துக் கூறினோம். எங்கே பார்த்தாலும் அப்படி இருக்கிறது. இதை என்ன செய்வது என்று அவர்கள் சொன்னார்கள். அதை நமது ஊராட்சி உள்ளாட்சித்துறை அமைச்சரிடத்திலே நானும் மதிப்பிற்குரிய மேலவை உறுப்பினர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் கூட ஐந்து, ஆறு முறை எடுத்துச் சொன்னோம். ஆனால் உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் அதன்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பிறகு விஜிலென்ஸ் போலீசார், அவர் லஞ்சம் வாங்கியபோது நேரடியாக அவரைப் பிடித்து அவர்மீது கேஸ் போட்டிருக்கிறார்கள்......

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவர் கள் கொடுத்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்ததின் விளைவாகத்தான் அவர் மீது வழக்கு பதிவாகி இருக்கின்றது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அவ்வாறு கேஸ் போடப்பட்டது வேறு சிலருடைய முயற்சியினால்தானே தவிர அமைச்சர் நடவடிக்கை எடுத்ததின் விளைவு என்று சொல்வது சரியல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

இப்படி எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறுகின்ற உண்மையான குற்றச்சாட்டைக்கூட கவனிப் பதற்கு ஏற்பாடு செய்யவில்லை. இந்தச் சமுதாயம் எப்படி உருப்படியாக இருக்கும். ஆகவே இதை எல்லாம் நன்றாக யோசித்து இப்படிப்பட்ட விஷயங்களிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30.]

குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரையிலும் ஒருசில இடங் களில் மட்டும், குழாய்களை பதித்து குடிநீர் திட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசியவர் கள் எல்லாம் சொன்னார்கள். குழாய்கள் எல்லாம் ரிப்பேர் ஆகி மோசமான நிலையில் இருக்கிறது என்று. இதை பஞ் சாயத்துக்கள் தான் நிர்வகிக்க வேண்டும் என்று சொல்லப்பட் டது. பஞ்சாயத்து நிர்வகிப்பது என்பது சரியல்ல. நல்லதல்ல

1979 மார்ச் 10] [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

இதை உடனடியாக செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்களில் அங்கே வேலை செய்கின்ற கிளார்க்குக்குக் கூட சம்பளம் கொடுக்க பணம் இலலை. இந்த நிலையில் எப்படி குழாய்களை ரிப்பேர் செய்ய செலவு செய்ய முடியும்? ஆகவே கிராமங்களில் உள்ள குழாய்களை எல்லாம் டிப்பார்ட்மெண்ட் தான் ரிப்பேர் செய்து வைக்க வேண்டும். கிராமங்களில் குழாய்கள் ரிப்பேராக இருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னாலும் அதை சரியாக கவனிப்பதில்லை. இப்படி குடி தண்ணீர் பிரச்னையில் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தால் எப்படி நாம் மக்களுக்கு நன்மை செய்ய முடியும்? ஆகவே அதை துரிதப்படுத்தி எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இணைப்புச் சாலைகள் மான்யமாக 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை வகுத்துப் பார்த்தால் ஒரு யூனியனுக்கு 21 ஆயிரம் ரூபாய் பங்கு வருகிறது. இந்த 21 ஆயிரத்தில் இணைப்புச் சாலைகளை போட முடியுமா? இப்படி போட்டுக்கொண்டிருந்தால், இணைப்புச் சாலைகளை எல்லாம் போட்டு முடிப்பதற்கு எத்தனை வருடங்கள் ஆகும். குறைந்தது 100 வருடங்களாவது ஆகும். இந்த 21 ஆயிரத்தை வைத்து எப்படி இணைப்புச் சாலைகளைப் போடுவது? ஆகவே இதற்கு அதிக அளவு தொகை ஒதுக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்போதுள்ள நிலையில் கிராமங்களில் போடுகின்ற ரோடுகளில் செலவு செய்கின்ற தொகை வீணாகும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தொகையை வழங்கும்போது அந்தந்த கிராமங்கள் பங்கு தொகை கொடுக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பங்குத் தொகையை கிராமங்கள் கொடுக்கவில்லை என்றால் இந்த ரோடுகள் கிராமங்களில் போட முடியாது. ஆகவே இந்தப்பங்குத் தொகை இருப்பது வரையிலும் கிராமப்புறங்கள் ரோட்டையே காண முடியாது. கிராமங்களுக்குத்தான் நன்மை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, கிராமங்களில் பங்குத் தொகை வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தால் என்ன பொருள்? ஆகவே பங்குத் தொகை என்பதை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூட கட்டிடங்கள், இதற்காக ஒரு யூனியனுக்கு 20 ஆயிரம் ரூபாய் என்றும். உயர்நிலைப் பள்ளிக் கூட கட்டிடங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் என்றும் ஒதுக்கிக் கொண்டிருந்தால், எத்தனை வருடங்களுக்கு நாம் பள்ளிக்கூட கட்டிடங்களை கட்டிக் கொண்டிருப்பது. பள்ளிக்கூட கட்டிடங்கள் இருந்தால் தான் பள்ளிக்கூடங்கள் நன்றாக நடக்க முடியும். ஆகவே இவைகளுக்கு தனியாக கிரான்ட் ஒதுக்கி பள்ளிக்கூட கட்டிடங்கள் இல்லாத நிலைமையை போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை பராமரிப்புக்காக 250 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை யூனியன் வாரியாகப் பார்த்தால் 60 ஆயிரம் ரூபாய் என்று வருகிறது. இந்த 60 ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு எப்படிச் சாலைகளைப் பராமரிக்க முடியும்? இரண்டு சாலைகளைக் கூட பராமரிக்க முடியாதே. இப்படி குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பது சாலை பராமரிப்புக்கு போதுமானதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் பஸ் போகின்ற சாலைகளில் பராமரிப்பு இல்லையென்றால் பஸ்போக்குவரத்து நின்று விடுகின்றன. சாலைகள் போடுவதற்கும், பங்குத் தொகை கொடுக்க வேண்டும் என்ற முறையை ஒழித்துக் கட்ட வேண்டும். அப்போது தான் கிராமங்கள் முன்னேற்றம் அடைய முடியும். இதைப் பற்றி பல முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியும் இன்னும் அந்த பங்குத் தொகை முறையை அகற்றாமல் இருப்பது சமுதாயத்திற்கு நல்லதல்ல. கிராமங்கள் முன்னேற வேண்டுமானால், பங்குத் தொகையை அகற்றி அரசாங்கமே கிராமச் சாலைகளை எல்லாம் போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர்—தலைமை

இந்த குடிதண்ணீர் வசதிக்காக நடவடிக்கை எடுத்திருப்பது போல் அடுத்த வருடம் பட்ஜெட்டில், இந்தச் சாலைகளை போடுவதற்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கி சாலைகளை போட வேண்டும். போட்ட சாலைகளில் தூம்பு கூட சரியாக இருப்பதில்லை. கால்நடைகள் கூட போவதற்கு சிரமமாக இருக்கிறது. இதையெல்லாம் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணங்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றுக்கு ஸாங்ஷனாகியிருக்கிறது. இதற்கு கட்டிடம் கட்ட வேண்டும் என்பதற்காக 10 ஆயிரம் ரூபாய் பங்குத் தொகை கட்டப்பட்டு ஆறு வருடங்களாகிறது. கட்டப்பட்ட அந்தத் தொகை என்னவாயிற்று என்று தெரியவில்லை. கண்டிப்பாக உடனடியாக இந்தக் கட்டிடத்தை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணங்குடி யூனியனிலே அலுவலர்களுக்கு குடியிருப்பு இல்லை. அலுவலர்கள் எல்லாம் தேவகோட்டையிலே இருந்து வருகிறார்கள். பஸ் நின்று போகும் நாட்களிலே ஆபீஸ் நடப்பதில்லை. அதேபோல் மழைக் காலங்களிலும் ஆபீஸ் நடப்பதில்லை. தவிர, கண்ணங்குடி சிறிய கிராமமாக இருப்பதால, அங்கே வீடுகள் குடியிருப்புக்குக் கிடைப்பதில்லை. எனவே, அவர்களுக்கு அங்கே அலுவலர் குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஏற்கனவே 10 நிமிடங்கள் ஆகி விட்டது. உடனே முடித்துக் கொள்ளுங்கள்.

1979 மார்ச் 23]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : கிராமங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு புறக்கணிக்கின்றது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், கோடிக் கணக்கான ரூபாய்களை மற்றத் திட்டங்களுக்கு ஒதுக்கிவிட்டு, கிராமங்களுக்கு ஒதுக்கப்படும்போது லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கினால், கிராமங்கள் எப்படி முன்னேற முடியும் ? ஆகவே, கிராமங்களுக்கு இந்த அரசு அதிகமான தொகையை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்தால்தான், கிராமங்கள் முன்னேற முடியும், இல்லாவிட்டால் கிராமங்கள் முன்னேற முடியாது.. ...

(மணியடிக்கப்பட்டு, திரு. மு. அண்ணாமலை அழைக்கப் பட்டார்.)

*திரு. மு. அண்ணாமலை : தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டம், நகர மேம்பாட்டுத் திட்டங்களுக் கான மானிய கோரிக்கைகளின் பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற முன வருகிறேன். ஊராட்சிகள், நகராட்சிகள் மூலம் தான் மக்களுடைய அத்தியாவசியமானத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அமைப்புகளாகும். அந்த அமைப்புகளினுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, இப்போது ஒதுக்கப்பட்ட நிதியும் கூட சரியான முறையில் மக்களுக்குப் பயன்படுமா என்ற அய்யம் ஏற்படுகிறது. இருப்பினும் இருக்கக்கூடிய பலஹீனங் களை அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு கிராமங்களைப் பார்க்கும் போது தெரு விளக்குகள் இன்றி, இருண்ட கிராமமாகத்தான் இருக்கிறது. இதனால் பல்வேறு இன்னலுக்குள்ளான மக்கள் கோரிக்கைகள் எழுப்பி குறைகளை எடுத்துச் சொல்லும் நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன என்பதை நாம் அறிவோம். இந்தத் தெரு விளக்குகள் இப்படி மோசமாக இருப்பதற்கான காரணம் என்ன என்பது குறித்து, சமீபத்தில எனக்கு கிடைத்த தகவல்படி அரியானாவில் உள்ள எலக்ட்ரானிக் லிமிடெட் என்ற கம்பெனியிடம் நீலகிரி, கன்னியாகுமரி, கோவை, சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய ஏழு மாவட்டங்கள் பல்புக்கு கொட்டேஷன் கொடுக்கப்பட்டு, அது இன்று வரையிலும்கூட சப்ளை செய்யப்படவில்லை என்று எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. மேலும், அந்த பல்புகள் வினியோகிக்கப்பட்டாலும்கூட, ஒரு ஆண்டிற்கு ஒரு விளக்குக் கம்பத்திற்கு 3 பல்புகள்தான் என்று சொல்லப்படுகிறது. அப்படி இன்றைக்குப் போடப்படும் இந்த பல்புகள் எல்லாம் போட்ட மறுநாளோ அல்லது 10 தினங்களிலோ அல்லது ஒரு மாதத்திலோ பியூஸ் ஆகிவிடுகின்ற நிலைமையில் இருக்கின்றது. இந்த நிலைமையில் தான் இன்றைக்கு பெரும்பாலும் இந்த தெருவிளக்குகள் இருக்கின்றன. இந்த நிலைமைக்கு இதற்கான காரணத்தை பார்க்

கும்போது, கான்ட்ராக்ட் எடுக்கப்படும் கம்பெனிகள் பல்புகளைத் தரக்குறைவானதாக உற்பத்தி செய்து லாபம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு தரம் குறைக்கப்படுவதன் பெரும் காரணம். ஆண்டுக்கு மூன்று பல்புகள் என்ற இந்த விதிமுறையின் காரணமாகவும் இன்றைக்கு தெரு விளக்குகள் அற்ற கிராமங்களாக இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து, குடி நீர் பிரச்சனை. இந்தப் பிரச்னையைப் பொறுத்த மட்டில, இன்றைக்கு இங்கே கொடுத்த அறிவிப்பின் படி கை பம்புகள் மாநில அளவிலே 17,000 குழாய்க் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் 230 எந்திர கம்மியன்களும், 19 ஆய்வாளர் குழுக்களும் செயல்பட்டு வருவதால் சராசரி 3,000 மாதம் ஒன்றுக்கு குறைபாடுகளைக் களைந்து வருவதாகக் கொடுக்கப்படுகின்ற தகவல், முற்றிலும் உண்மைக்கு மாறுபட்டது என்பதை நான் இங்கே அழுத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-40]

இன்றைக்கு ஒரு யூனியனில் ஒரு பிட்டர் இருக்கிறார், அவர் பழுதுபட்ட இடத்திற்குச் சென்று பார்த்து ரிப்போர்ட் செய்து என்ன ரிப்பேர் என்று அறிவிப்பதற்குள்ளாக காலங் கடந்து முடிந்து விடுகிறது. பெரும்பகுதியான கிராமங்கள் குடிதண்ணீர் அற்ற சூழ்நிலையில் தவித்த நிலையில் உள்ளதோடு போட்ட போர் வெல் பெரும் பகுதி தூர் பிடித்திருக்கும் நிலை. ஒரு போர் வெல்லுக்கு பத்தாயிரத்திலிருந்து பன்னிரண்டாயிரம் வரை செலவு செய்தும் கூட குடிதண்ணீருக்குக் கூட உபயோகமற்ற முறையில் இருக்கின்றன. இதிலே துரித கவனம் செலுத்தி இந்தக் குறையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாலைப் பராமரிப்பைப் பொறுத்தவரை இணைப்புச் சாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி கூட மிகக் குறைவு. 1978-79–ல் 80 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்து ; 1976-77–ல் 67.56 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்தியில் இரண்டாண்டுகளில் குறைக்கப்பட்ட நிதியைச் சமமாகப் பார்க்கும்போது இந்த நிதி பெரிதாகாது. ஐந்து ஆண்டும் சராசரி ஒரே நிலையில் தான் உள்ளது. இதைக் கொண்டு எப்படி கிராமச் சாலைகளை சீர்படுத்த முடியும் என்ற ஐயப்பாடு யதார்த்தமாக எழுகிறது. மேலும் கடந்த காலங்களில் மக்களின் சிரமதானங்களைப் பெற்று உழைப்பைப் பெற்று போட்டதாகச் சொல்லப்படும் சாலைகள் நடக்கவும் உதவாத நிலைமையில் உள்ளன. அந்தச் சாலைகளுக்கான இடங்கள் முன்பு பட்டாதாரர்களிடத்திலிருந்து இலவசமாகப் பெறப்பட்டது. தற்போது அந்த இடங்களில் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து இன்றைக்கு நடக்க முடியாத அளவுக்கு

1979 மார்ச் 23] [திரு. மு. அண்ணாமலை]

அவை விளைநிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே' விவசாய ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியும் கிராமச் சாலைகளை அமைப்பது பொறுத்தவரை கூடுதல் நிதி ஒதுக்க முடியுமா என்பதைப் பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வரி உயர்வை எடுத்துக் கொண்டால் பல்வேறு போராட்டங்கள், இயக்கங்களை நடத்தி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அந்த நிலைமையைச் சுட்டிக் காட்ட இரண்டொரு நிகழ்ச்சியை நான் கூற விரும்புகிறேன். ஹரூரில் ஒருவர் 12 ரூபாய் வீட்டு வரி கட்டிக் கொண்டிருந்தார், சென்ற ஆண்டு. இன்று 42 ரூபாய்க்கு உயர்த்தி விட்டார்கள். அவர் சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர். இந்தத் தொகையைக் கட்ட முடியாத நிலை. அதே போல், மதுரை மாவட்டத்தில் எஸ். தனசேகரன் என்பவர் தோழர் சங்கரய்யாவுக்கு அனுப்பப்பட்ட மனுவின் விபரத்தை குறிப்பிடுகிறேன். 1977 ஆண்டுவரை வீட்டு வரி ரூ. 110—55 பைசா ; 1978—ல் தனி அதிகாரியால் ரூ. 291—12 பைசாவாக உயர்த்தப்பட்டது. உயர்வு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்த புகார் மனுக்களின் பேரில் மதுரை தேர்தலுக்கு முன்பு அந்த வரிகளை ரத்து செய்வதாக அறிக்கை விடப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகு அந்த வரி அப்படியே நிர்ணயிக்கப்பட்டு விடுபட்ட காலங்களையும் சேர்த்து 1,200 ரூபாய் கட்டவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தபடுவதாக புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று நாடு முழுவதும் வீட்டு வரி உயர்வால் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். இதிலே சீரான பரிசீலனை செய்து ஏழை நடுத்தர மக்களுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுடைய நியமனங்களிலும் பல்வேறு மாறுதல்களிலும் கடந்த கால கொடுமைகள் இன்றைக்கு ஓரளவு குறைந்திருக்கிறது என்பதை உணருகிறேன். என்றாலும் இன்றும் கூட அந்த நிலைமைகள் பல இடங்களில் மாறவில்லை. இதைக் கவனித்து போக்கவேண்டும் என்பதோடு தர்மபுரி மாவட்டத்தில் 1978 அக்டோபர் மாதத்தில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் நியமனத்தில் மாவட்ட வளர்ச்சி மன்ற அதிகாரி முறைகேடுகளை நடத்தி இரண்டு மூன்று லட்சம் ஊழல் நடந்ததாகப் பரவலாகப் புகார் வந்தது. அங்கு வருகை தந்த செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஹரூர் பொதுக் கூட்டத்தில் 27—10—1978—ல் கண்டித்துப் பேசியுள்ளார்கள். இன்றுவரை அது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அந்த டி.டி.ஓ.வை வேறு இடத்திற்கு மாற்றப் பட்டதே தவிர எந்த நடவடிக்கையும் இல்லை. தகுதி முன்னுரிமைகளையும் புறக்கணித்து முறைகேடு செய்து நியமனம் செய்ததால் அந்தப் பகுதியில் இன்று பெரும் அதிருப்தி நிலவிக் கொண்டிருக்கிறது. உடனடியாக இதிலே தலையிட்டு இந்தப்

பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும் இன்றைக்கு உள்ளாட்சி நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஆன தேர்தல்களில், பழங்குடியினர் அரிசனங்கள், மகளிர் ஆகியவர்களுக்கு உறுப்பினர்களுக்கான தனி இடங்கள் கொடுக்கிறதாக இங்கே குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று வருகின்ற ஒன்றியத் தேர்தல்களிலேயும் அப்படிப்பட்ட முறையைக் கொண்டுவரவேண்டும், இந்தக் கருத்தை இந்த மன்றத்திலேயும் சரி வெளியேயும் சரி, பரவலாக எல்லோரும் அதை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆகவே வரவிருக்கும் ஊராட்சி தேர்தலின் போதே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

*திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டிற்கான சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள், நகரப் பகுதி மேம்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஊராட்சிகளை எடுத்துக் கொண்டு பார்த்தால் அவைகளின் நிதிநிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது எனபதை எல்லோரும் உணருவார்கள். குறிப்பாக, சாலை வசதிகள், தெரு விளக்கு வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத அளவிற்கு ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது. குமரி மாவட்டத்திலே, ஊராட்சிகளுடைய, பேரூராட்சிகளுடைய பொருளாதாரத்தில் பற்றாக்குறை இல்லாத வகையில் சிறப்பாக பணியாற்றக்கூடிய வகையில் அவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த அரசு அமைந்த நாளிலிருந்தே நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். அங்கே இருக்கிற நிலைமையை இந்த அரசு நன்றாக அறியும் என்ற காரணத்தாலே பலமுறை அரசுக்கு இது குறித்து உணர்த்தப்பட்டும், அமைச்சர் அவர்கள் பல்வேறு தடவைகளிலே அவை குறித்து எங்களுக்குச் சொன்னாலும் அதைப் பற்றி எந்தவித தீவிரமான, திட்டவட்டமான ஒரு கருத்தையும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது. அந்த நிலைமைகளை மாற்றி குமரி மாவட்டத்திலே உள்ள ஊராட்சி, பேரூராட்சிகள் பொருளாதார நிலையில் இயங்கக்கூடிய வகையில் மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு பேரூராட்சி என்று முன்னாலே சிறப்பாக இருந்தது, இன்றைக்குப் பல்வேறு அரசியல் சூழ்நிலைகளின காரணமாக பல்வேறு ஊராட்சிகள், பேரூராட்சிகள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு அலுவலர்க்கு சம்பளம் கூட கொடுக்கமுடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. அரசாங்கம்

79 மார்ச் 23] [திரு. பொ. விஜயராகவன்]

உடனடியாக மறுபரிசீலனை செய்து அந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள் நிலையில் பொருளாதார அடிப்படையிலே மாற்றியமைக்க திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீரைப் பொறுத்தவரையில், புதுக்கடை, கருங்கல் பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று ஒரு சில ஆண்டுகளாகச் சொல்லியும்கூட குமரி மாவட்டத்திலே உள்ள பேரூராட்சிகள் தங்களுடைய நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை. குடிநீர் வசதிக்காக குமரி மாவட்ட பேரூராட்சிகளுக்கு முழுமானியத் தொகையும் அரசே அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டிலே அது வலியுறுத்தப்பட்டு குடிநீர் வடிகால் வாரியத்தாலே ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று உணருகிறேன். ஆகவே உடனடியாக பரிசீலனை செய்து முழு மானியத் தொகையைக் கொடுத்து புதுக்கடை, கருங்கல் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த உசரத்துவளை, இரணிபுரம் ஆகிய பஞ்சாயத்துக்களிலும் முஞ்சுறை பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த மங்காடு ஆகிய இடங்களிலே குழாய்கள் சரியாகச் செயல்படாத காரணத்தால் அந்த மேல்நீர் தொட்டிகளும் பாழடைந்து இருப்பதால் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. அதைப் போலவே கிள்ளியூர், மிடாலம், மேல் மிடாலம் போன்ற பகுதிகளிலேயும் குடிநீர் கிடைக்கவில்லை. மேல்மிடாலம் பகுதியிலே குடிநீர் இல்லை, பைங்குளம் பேரூராட்சியில் மேல்நீர்த் தொட்டி பழுதடைந்திருக்கிறது. ஆகவே உடனடியாக அவைகளைச் செயல்படச் செய்து குடிநீர் மக்களுக்கு கிடைக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

[பிற்பகல் 12-50]

அடுத்தபடியாக, இங்கேயிருக்கின்ற கொள்கை விளக்கப் புத்தகத்தில், 31-வது பக்கத்தில் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். ''வேலைக்காக உணவுத் திட்டம்'' என்ற தலைப்பில், ''மத்திய அரசால் தொடங்கப் பெற்ற வேலைக்காக உணவுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யவிருக்கிறது.

நீர்ப்பாசனம், வெள்ளம், மண் பாதுகாப்பு. சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் இன்னும் இது போன்ற இதர பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் ஒரு பகுதி தானியமாக அளிக்கப்படும். இது மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படும். இதுவே இத்திட்டத்தில்

ஒரு முக்கிய அம்சமாகும்.'' என்று சொல்லப்படுவது மட்டுமல்லாமல், ''சுமார் 26,000 டன் அரிசி இந்த ஆண்டிற்குள் இம்மாநிலத்திற்கு இத்திட்டத்தை நிறைவேற்ற அளிக்குமாறு கேட்கப்பட்டு உள்ளது. இன்னும் அதிக அளவு அரிசி அடுத்த ஆண்டு கேட்கப்படும்'' என்ற கருத்தும் சொல்லப்பட்டுள்ளது. நான் தெரிவிக்க விரும்புவது இந்தத் திட்டம் இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டதுமட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்கள் இதை எந்த அளவிற்குப் பயன்படுத்தியிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நான் ஏற்கனவே இந்த அவையிலே சொல்லியதைப் போல பல மாநிலங்களில் வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தில் எவ்வளவோ முன்னோடியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது மட்டுமல்ல, எவ்வளவு முன்னாலே செயல்படுத்தத் தொடங்கி விட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரிசா, இராஜஸ்தான் மாநிலங்களை எடுத்துக் கொண்டால், ஒரிசாவில் ஏறக்குறைய 1 இலட்சத்து 12,000 டன் தானியமும், இராஜஸ்தான் மாநிலத்திலே 1 இலட்சத்து 13 ஆயிரம் டன் தானியங்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய அரசு இனிமேல்தான் 26,000 டன் கேட்கப் போகிறது என்பது வேதனைப்படக்கூடியதாக நிச்சயமாக அமைந்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், ஒரிசாவில் ஏறக்குறைய மூன்று இலட்சத்து 5,301 கியூபிக் மீட்டர் எர்த் வொர்கை வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின் மூலம் முடித்திருக்கிறார்கள். 3,885 கிலோ மீட்டர் ரோடு வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. 10,000 ஹெக்டேர் நிலங்களில் முந்திரிச் செடி நடுகின்ற திட்டத்தை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். 24 குளங்களை அவர்கள் புதுப்பித்திருக்கிறார்கள். அதாவது பெரிய ஏரிகளை 307 கிணறுகளை வெட்டியிருக்கிறார்கள். ஏறக்குறைய 234 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களை அவர்கள் நல்லபடியாக பழுது பார்த்து இருக்கிறார்கள்.

மேலும் சொல்ல வேண்டுமானால், மேற்கு வங்கத்தில் மட்டும், 80,000 டன் உணவுப்பொருட்களை அந்த வகையில் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் 53,000 டன் உணவுப் பொருட்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள், பீகார் மாநிலத்தில் ஏறக்குறைய 43,000 டன் உணவுப் பொருட்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இப்படி எல்லோரும் பயன்படுத்தி, அவர்களெல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவந்த பிறகு, நம்முடைய அரசு இப்பொழுதுதான் 26,000 டன் உணவுப் பொருட்களைக் கேட்கப் போகிறது என்றால் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு காலத்தில் வழிகாட்டியாக இருந்த தமிழ்நாடு இன்றைக்குப் பின் தங்கியிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

1979 மார்ச் 23] [திரு. பொ. விஜயராகவன்]

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 29-இல் ''வருமான வரிச் சட்டம் பிரிவு 35 (சிசி)-யின் கீழ் அளிக்கப்படும் சலுகை'' என்ற தலைப்பில் ''1—9—1977 ஆம் ஆண்டிலிருந்து 35 (சிசி) என்ற புதிய பிரிவு ஒன்று வருமான வரிச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. நாட்டின் வளமான வருங்காலத்தை உருவாக்கும் இப்பணியில் தொழில் வர்த்தக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்கலாம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புரட்சிகரமான இந்தத் திட்டத்தை இன்றைக்கு மத்திய அரசு கொண்டு வந்து ஏறக்குறைய இரண்டு வருடங்களாகிவிட்டன. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பல நன்மைகளை இந்த மாநிலத்திலே செய்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நாம் பார்க்கும்பொழுது, ''சில தொழில் வர்த்தக நிறுவனங்கள் எடுத்துள்ள மூன்று மனுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சலுகையைப் பயன்படுத்தி தொழில் வர்த்தக நிறுவனங்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்ள பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக நான்கு மனுக்கள் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பப் பட்டுள்ளது.'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இனிமேல்தான் அந்த நிறுவனங்கள் ஆக்கப் பணிகளுக்கு உதவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நான் அறிந்தவரையில், அரசாங்கத் துறையிலிருக்கும் கம்பெனிஸ் கவர்மெண்ட் கம்பெனிஸ் என்று சொல்லும் பொழுது, ஏறக்குறைய 41 கம்பெனிகள் இருக்கின்றன. அரசாங்கத் துறையில் இருக்கும் 41 கம்பெனிகள் வருமான வரியைக் கட்டிவரும் கம்பெனிகள். குறிப்பாக நான் சொல்ல வேண்டுமானால், பல்லவன் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் போன்ற இப்படிப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்கள், இந்த வருஷம் ஏறக் குறைய 7 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் எவ்வளவு தொகையை வருமான வரியாகக் கட்டியிருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்,

அவைகளையெல்லாம் அணுகி, அரசாங்கத் துறையில் இருக்கும் கம்பெனிகளிடமிருந்து இதுபோன்ற சலுகைகளை வாங்குவதற்கு இந்த அரசு தயாராக இல்லையென்று சொன்னால், தனியார் துறையில் அவர்கள் எப்படிச் செய்யப் போகிறார்கள் என்ற சந்தேகம் நமக்கு எழ இடம் இருக்கிறது.

ஆகவே, நாங்கள் சொல்வது, இன்று இந்த அரசு மத்திய அரசால் வழங்கப்படுகிற நல்ல திட்டங்களை முனைப்பாக, விருவிருப்பாகச் செயலாற்ற முடியாமல், தளர் நடைபோட்டுச் செயல்படுகிறது அரசு என்கிற நிலைமையை நான் எடுத்துக்

[திரு. பொ. விஜயராகவன்] [1979 மார்ச் 23

காட்டாமல் இருக்க முடியாது. பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை மத்திய அரசு அறிவித்திருந்தால் மாநில அரசு போட்டி போட்டு அவைகளைச் செயலாற்ற முன்வரவேண்டும். ஆனால், நான் சொல்வது என்னவென்றால், மத்திய அரசு அளிக்கின்ற சலுகைகைளைக் கூட, பெறமுடியாத அளவு நிர்வாகத் திறமை குறைந்த அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதாகும். மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, தமிழகம் என்றைக்கும் முன்னோடியாக இருக்க வேண்டுமென்ற ஆவலின் காரணமாகத்தான் நாங்கள் இதைச் சொல்கிறோம். இல்லாமல், வேண்டுமென்றே விமர்சிக்க வேண்டுமென்ற நிலைமையில் நாங்கள் சொல்லவில்லை. ஆகவே, 'பாசிடிவ் கிரிடிசிஸமாக' எடுத்துக்கொண்டு, நல்ல திட்டங்களைச் செயலாக்க இனிமேலாவது முன் வரவேண்டும், குறித்த காலத்தில் உரிய முறையில் செயலாக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருமையாகப் பேசுகின்ற அம்பிகாபதி, 5 நிமிடத்தில முடிக்க வேண்டுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, அன்பிற்குரிய தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அவைமுன் வைத்திருக்கிற சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி என்கின்ற அந்தக் கோரிக்கையின் மீது சில முக்கியமான விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். 'ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் எற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தகைய வளர்ச்சி வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவத்து, உழைக்கத் தூண்டும் ஒரு திட்டமாகும். தனிமனிதன் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ளும் திட்டம்தான் இது எனினும், மக்களின் ஆக்கங்களிலும் ஊக்கங்களிலும், அரசு பெரும் பங்கேற்று அம்மக்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழி வகுக்கிறது' என்று முன்னுரையில் அழகாகக் கூறியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 31-ஆம் பக்கத்தில், 'வேலைக்காக உணவுத் திட்டம்' என்பதையும் அறிவத்து இருக்கிறார்கள். மத்திய அரசினுடைய உதவயோடு, 26,000 டன் அரிசியை பெற்று—இந்த ஆண்டிற்குள் இம்மாநிலத்திற்கு இத்திட்டத்தை நிறைவேற்ற அளிக்குமாறு கேட்டுள்ளோம், என்றும் கூறியுள்ளார்கள். குறிப்பாக, கிராமப் புறங்களிலே மறுமலர்சசி ஏற்பட்டால்தான் வேலையில்லா திண்டாட்டம் போகும். அதற்குப் பிரதானமானது நிலச் சீர்திருத்தம். அதைப் பற்றி என்னுடைய தோழர்கள் பின்னால் விரிவாகப் பேசுவார்கள்.

இன்றைக்குக் கிராமத்தில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உத்தர வாதம் வேண்டுமென்று கோரி, கன்னியாகுமரியிலிருந்தும், கோயம்புத்தூரில் இருந்தும் புறப்பட்ட இலட்சக்கணக்கான இளைஞர்கள் பாத யாத்திரையாக வந்து, மாண்புமிகு நிதி யமைச்சரிடம் விவரமான விண்ணப்பத்தினை அளித்திருக்கிறார் கள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை முழுமையாக நீக்க, சேலம் இரும்பாலை, தூத்துக்குடி துறைமுக விரிவுத் திட்டம் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு, நாகப்பட்டினம், கடலூர், புதுவை துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல், சென்னையில் கப்பல் செப்பனிடும் தளம் அமைத்தல், வேதாரண்யம் ரசாயனத் தொழிற்சாலை, பழனி மாலிப்டினம் தாது தொழிற்சாலை, கேரள நதி நீரைத் தமிழகத்துக்குத் திருப்புதல், கங்கை-காவேரி தாமிரபரணி இணைப்பு, தமிழக இருப்புப் பாதைகளை அக லப் பாதைகளாக மாற்றுதல் போன்ற பல்வேறு திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சரிடத் திலே கொடுத்த விண்ணப்பத்திலே இளைஞர்கள் கூறியிருக்கி றார்கள். அந்த இளைஞர்களோடு, தோழர்கள் எம். கல், யாணசுந்தரம், ஏ. சீனிவாஸ், எம். கோபு, கே. எம். சுந்தரம், கோவை கண்ணன், கே. டி. கே. தங்கமணி, கோவை இராச மாணிக்கம், து. ராஜன், பழனி ஆகியோரும் வந்து, விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள், நிதியமைச்சரிடத்திலே.

[பிற்பகல் 1-00]

கிராமப் புறங்களிலே மாற்றம் என்று குறிப்பிடுகிறபோது அடிப்படையான பல மாற்றங்களைச் செய்ய வேண்டும். மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 1979—80-ம் ஆண்டுக்கு பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி அளவு 181 கோடியே 57 லட்சமாக இருக்கும் என்றும், இது மேலும் 408 கோடியே 46 லட்சத்து 4 ஆயிரமாக இருக்கக் கூடிய வகையில்தான் இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். ஒரு தேசீய அளவிலான ஒருங்கிணைப்பு கிராம வளர்ச்சித் திட்டம்— இந்த திட்டம் 1—4—1978 முதல் அமுலில் இருக்கிறது. இந்த அமுலில் உள்ள திட்டம் அனைத்து வட்டாரங்களுக்கும் அமுல் ஆக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் அமைப்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பாசன வசதிகளை கவனித்துப் பார்த்தால் ஊராட்சி ஒன்றி யங்கள் 374, பேரூராட்சி 69, ஊராட்சிகள் 1,260, நகராட்சிகள் 12, வருவாய் துறை கிராமங்கள் 16,616. இவ்வளவு விரிவான முறையில் இருக்கக் கூடிய அந்த கிராம அமைப்புகளில் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டிருப்பது 7,899

கிராமங்களில்தான். 7,899 கிராமங்கள் போக மீதம் உள்ள கிராமங்கள் மேல்நிலை நீர்த் தொட்டிகள் அற்றதாக இருக்கிறது. சுதந்திரம் வந்து 32 ஆண்டுகள் முடிந்தும் கூட அனைத்து கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கான திட்டம் போட மத்திய அரசாலும் முடியவில்லை, ஆண்டவனாலும் முடியவ்ல்லை, ஆண்டு கொண்டிருக்கிற உங்களை முடித்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம். 16 ஆயிரத்து சொச்சம் கிராமங்களிலே 7 ஆயிரத்து சொச்சம் கிராமங்களுக்குத்தான் முடிந்தது என்று 1978 மார்ச் 31 வரையிலுள்ள புள்ளி விவரங்கள். 32 ஆண்டுகளுக்குப் பிறகு கூட போதிய குடி தண்ணீர் கொடுக்க முடியவில்லை.......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் கொடுப்பதற்காக கிராமங்களை 6 வகையாகப் பிரித்து, 2 வகைகளுக்கு வழங்கி முடித்து விட்டோம். இன்னும் 2, 3 மாதங்களிலே மற்றும் இரண்டு பிரிவுகள் முடிந்து விடும் நிலையில் இருக்கின்றன.

ஒன்று, குடி தண்ணீரே கிடைக்காத கிராமங்கள்: இரண்டு, குடி தண்ணீர் கிடைத்தும் உப்புத் தண்ணீராக உள்ள கிராமங்கள்; மூன்று, குடி தண்ணீர் கொடுக்கப்படாத கிராமங்கள் என்று 3 ஸ்டேஜ்களாக பிரித்திருக்கிறோம். அதில் கடைசிப் பணிக்கு perennial source என்ற கடைசிப் பணிக்குப் போய் விட்டோம். 4 ஆண்டுக்குப் பிறகு குடி தண்ணீர் இல்லாத கிராமங்களே இல்லாது போய் விடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : நன்றி. கட்டப்பட்ட மேல் நிலை நீர்த் தொட்டிகள் மூலமாக குழாய்கள் போடப் பட்டிருக்கின்றன. குழாய்களைத் திறந்தால் சாற்றுதான் வருகிறது. தண்ணீர் வரவில்லை.

1978–79-ல் சாலைகளைப் பராமரிப்பதற்காக 2 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,12,909 சதுர கிலோ மீட்டர் கொண்ட 374 பஞ்சாயத்து சாலைகளில் இருக்கக் கூடிய அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த நிதி ஒதுக்கம் போதாது என்று சொல்லிக் கொள்கிறேன். சாலைகள் மிகவும் பழுதடைந்து மோசமாக இருக்கின்றன. இவைகளுக்குக் கவனம் தேவை. ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளைச் சீரமைக்க வேண்டும் என்பதைக் கூறுவதோடு சிறு பாசனத்தை எடுத்துக் கொண்டால், 100 ஏக்கர்களுக்குக் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்

களின் பராமரிப்பின் கீழ் விடப்படும் என்கிற போது, முகவை, தஞ்சை மாவட்டங்களில் மேலும் கவனம் செலுத்தி சிறப்பாக அமுலாக்க வேண்டும். இந்தத் திட்டம் சரிவர அமுலாக்கப்பட்டால் விவசாயிகளுக்கு பணப் பயிர் சாகுபடி செய்யும் அளவிற்கு உறு துணையாக இருக்கும். தஞ்சாவூர், முகவை மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு இது வசதியளிக்கும். அதனால் இதை அங்கே சிறப்பாக அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அது மிகவும் வரவேற்க வேண்டிய திட்டம். இன்னும் அதிகமான சமுதாயக் கிணறுகள் ராட்சத இயந்திரங்கள் போட்டு கிணற்றை இறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். தஞ்சாவூர், கோவை மாவட்டங்களிலும் இம் மாதிரி சமுதாயக் கிணறுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள பள்ளிகள். பள்ளிகள் மிக அதிகமாக உள்ளது. பள்ளிக் கூட கட்டிடங்கள் தான் மிக சேதாரமாக இருக்கின்றன. புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக சிறப்பான முறையில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

அடுத்து மீனளம். மீனளம் மிக முக்கியமான அம்சம் ஆகும். அதில் உள்ள மிக முக்கியமான பிரச்னை பஞ்சாயத்துக்களை கேட்காமலேயே குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான். கோட்டூர்புரத்தில் கூட அப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறது. பராமரிக்கும் நிலையில் இருக்கக் கூடிய அந்தப் பஞ்சாயத்துக்களின் தலையீடு இல்லாமல் குளங்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. சேலம் மு. ஆறுமுகம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய துறைகளைப் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை கூறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த ஊராட்சித் துறையைப் பொறுத்தவரையில் 1919-ம் ஆண்டு சென்னை சிட்டி கார்ப்பரேஷன் ஆக்ட் என்றும், 1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்களின் சட்டம் என்று தயாரிக்கப்பட்டதாகும். இன்றைக்கு ஏறத்தாழ 60 ஆண்டு காலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட சட்டம் அவைகள். நாடு விடுதலை அடைந்து நாட்டு மக்களுக்கு வளர்ச்சிப் பணிகள் நகராட்சி மன்றங்கள் மூலம் செய்ய வே டும் என்ற சூழ்நிலை தற்போது இருக்கிற இந்தக் காலத்திற்கேற்ப அவைகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த உளுத்துப் போன அந்தச் சட்டங்களை வைத்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல.

கிராமங்களில்தான். 7,899 கிராமங்கள் போக மீதம் உள்ள கிராமங்கள் மேல்நிலை நீர்த் தொட்டிகள் அற்றதாக இருக்கிறது. சுதந்திரம் வந்து 32 ஆண்டுகள் முடிந்தும் கூட அனைத்து கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கான திட்டம் போட மத்திய அரசாலும் முடியவில்லை, ஆண்டவனாலும் முடியவில்லை, ஆண்டு கொண்டிருக்கிற உங்களை முடித்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம். 16 ஆயிரத்து சொச்சம் கிராமங்களிலே 7 ஆயிரத்து சொச்சம் கிராமங்களுக்குத்தான் முடிந்தது என்று 1978 மார்ச் 31 வரையிலுள்ள புள்ளி விவரங்கள். 32 ஆண்டுகளுக்குப் பிறகு கூட போதிய குடி தண்ணீர் கொடுக்க முடியவில்லை.......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் கொடுப்பதற்காக கிராமங்களை 6 வகையாகப் பிரித்து, 2 வகைகளுக்கு வழங்கி முடித்து விட்டோம். இன்னும் 2, 3 மாதங்களிலே மற்றும் இரண்டு பிரிவுகள் முடிந்து விடும் நிலையில் இருக்கின்றன.

ஒன்று, குடி தண்ணீரே கிடைக்காத கிராமங்கள்: இரண்டு, குடி தண்ணீர் கிடைத்தும் உப்புத் தண்ணீராக உள்ள கிராமங்கள்; மூன்று, குடி தண்ணீர் கொடுக்கப்படாத கிராமங்கள் என்று 3 ஸ்டேஜ்களாக பிரித்திருக்கிறோம். அதில் கடைசிப் பணிக்கு perennial source என்ற கடைசிப் பணிக்குப் போய் விட்டோம். 4 ஆண்டுக்குப் பிறகு குடி தண்ணீர் இல்லாத கிராமங்களே இல்லாது போய் விடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : நன்றி. கட்டப்பட்ட மேல் நிலை நீர்த் தொட்டிகள் மூலமாக குழாய்கள் போடப் பட்டிருக்கின்றன. குழாய்களைத் திறந்தால் காற்றுதான் வருகிறது. தண்ணீர் வரவில்லை.

1978–79-ல் சாலைகளைப் பராமரிப்பதற்காக 2 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,12,909 சதுர கிலோ மீட்டர் கொண்ட 374 பஞ்சாயத்து சாலைகளில் இருக்கக் கூடிய அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த நிதி ஒதுக்கம் போதாது என்று சொல்லிக் கொள்கிறேன். சாலைகள் மிகவும் பழுதடைந்து மோசமாக இருக்கின்றன. இவைகளுக்குக் கவனம் தேவை. ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளைச் சீரமைக்க வேண்டும் என்பதைக் கூறுவதோடு சிறு பாசனத்தை எடுத்துக் கொண்டால், 100 ஏக்கர்களுக்குக் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்

[1979 மார்ச் 23 [திரு. மு. அம்பிகாபதி]

களின் பராமரிப்பின் கீழ் விடப்படும் என்கிற போது, முகவை, தஞ்சை மாவட்டங்களில் மேலும் கவனம் செலுத்தி சிறப்பாக அமுலாக்க வேண்டும். இந்தத் திட்டம் சரிவர அமுலாக்கப்பட்டால் விவசாயிகளுக்கு பணப் பயிர் சாகுபடி செய்யும் அளவிற்கு உறு துணையாக இருக்கும். தஞ்சாவூர், முகவை மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு இது வசதியளிக்கும். அதனால் இதை அங்கே சிறப்பாக அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அது மிகவும் வரவேற்க வேண்டிய திட்டம். இன்னும் அதிகமான சமுதாயக் கிணறுகள் ராட்சத இயந்திரங்கள் போட்டு கிணற்றை இறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். தஞ்சாவூர், கோவை மாவட்டங்களிலும் இம் மாதிரி சமுதாயக் கிணறுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள பள்ளிகள். பள்ளிகள் மிக அதிகமாக உள்ளது. பள்ளிக் கூட கட்டிடங்கள் தான் மிக சேதாரமாக இருக்கின்றன. புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக சிறப்பான முறையில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

அடுத்து மீனளம். மீனளம் மிக முக்கியமான அம்சம் ஆகும். அதில் உள்ள மிக முக்கியமான பிரச்னை பஞ்சாயத்துக்களை கேட்காமலேயே குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான். கோட்டூர்புரத்தில் கூட அப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறது. பராமரிக்கும் நிலையில் இருக்கக் கூடிய அந்தப் பஞ்சாயத்துக்களின் தலையீடு இல்லாமல் குளங்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய துறைகளைப் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை கூறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த ஊராட்சித் துறையைப் பொறுத்தவரையில் 1919-ம் ஆண்டு சென்னை சிட்டி கார்ப்பரேஷன் ஆக்ட் என்றும், 1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்களின் சட்டம் என்று தயாரிக்கப்பட்டதாகும். இன்றைக்கு ஏறத்தாழ 60 ஆண்டு காலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட சட்டம் அவைகள். நாடு விடுதலை அடைந்து நாட்டு மக்களுக்கு வளர்ச்சிப் பணிகள் நகராட்சி மன்றங்கள் மூலம் செய்ய வே டும் என்ற சூழ்நிலை தற்போது இருக்கிற இந்தக் காலத்திற்கேற்ப அவைகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த உளுத்துப் போன அந்தச் சட்டங்களை வைத்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல.

அன்றைய தினம் பிரிட்டிஷ்காரர்கள் இருந்தபோது, லோகல் பாடீஸ் என்ற அமைப்பை வைத்துக் கொண்டு, உள்ளாட்சித் துறைக்கு லோகல் பீபிள் இருந்து தங்களுக்குச் சலுகைகள் செய்து கொண்டு விடுவார்களோ என்ற சந்தேகத்தின் காரணமாக உள்ளாட்சித் துறை அதிகாரங்கள் அனைத்தையும் கையில் வைத்துக் கொண்டு, ரெவின்யூ போர்ட் அமைத்து, அதனிடம் அந்த அதிகாரங்களைக் குவித்து வைத்து இருந்ததை நாம் அறிவோம். ஆகவே, 60 ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றப் பட்ட அந்தச் சட்டங்கள் இன்றைக்கு மறு பரிசீலனை செய்யப் பட வேண்டியவை, அவை காலத்திற்கு ஏற்ப, மக்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப, மாற்றப்பட வேண்டியவை என்பதைத் தெரிவித்து அதற்கு ஒரு நிபுணர் குழு போட்டு அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிபுணர்களைக் கொண்டு இந்த ஆட்சி காலத்திற்கு ஏற்ப சட்டங்களைக் கொண்டு வரும் என்று சொன்னது என் நினைவில் இருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் கட்சி சார்பு இல்லாமல் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அந்த உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1976-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் எல்லா நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் பதவிக் காலம் முடிவுற்று அவைகள் இன்றைக்கு தனி அதிகாரியின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. இப்படி தனி அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருவதன் காரணமாக மக்களின் அன்றாட தேவைகள் கவனிக்கப்பட முடியவில்லை. ஆங்காங்கு மக்கள் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் கடந்த 1½ ஆண்டு காலத்தில் மக்களின் தேவைகளை உணர்ந்து, மக்கள் அன்றாடம் செய்யக் கூடிய சில தேவைகளை, அவசியமான காரியங்களைச் செய்ய முடியாமல் போய் விட்டு இருக்கின்றது. ஆகவே, நகராட்சிகளுக்கு, மாநகராட்சிகளுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்கள் வருகிற காலத்திற்கு முன்னால் ஒவ்வொரு வட்டத்திற்கும் தினசரி குறைந்தது 2 மணி நேரம் மாநகராட்சி ஆணையரும், தனி அதிகாரியும் சேர்ந்து அந்தப் பகுதிகளில் மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து அதைப் போக்குவதற்கு அவர்களுக்கு அறிவுரை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பொது மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லக் கூடிய மக்கள் ஆணையரையோ, தனி அதிகாரியையோ நேரில் சென்று சொல்ல முடியவில்லை. ஆகவேதான் அவர்களே மக்களை வந்து தினசரி இரண்டு மணி நேரம் சந்திக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன்.

1979 மார்ச் 23] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

தமிழகத்தில் பல நகராட்சிகளில் வருஷக் கணக்கில் ஆயிரக் கணக்கான தெரு விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. அதற்கு காரணம் என்ன? நகராட்சி மன்றத்தில் இருக்கும் விளக்குகளைப் பராமரிக்கும் பணி மின் வாரிய அலுவலர்கள் இடத்தில் இருக் கிறது. பல்புகள் மாற்றும் சிப்பந்திகள் வாரியத்தில் இருக்கி றார்கள். ஆனால், அவர்களுக்குத் தேவையான பல்புகளை நக ராட்சி மன்றங்கள் தர வேண்டும். ஆகவே, நகராட்சிகளில் உள்ள மின் விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு, பல்புகளை மாற்றும் பொறுப்பு, அதிகாரம், நகராட்சி மன்றங்களுக்கு ஒப்பு விக்கப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

[பிற்பகல் 1-10]

அதன் மூலம் அந்த விளக்குகளைப் பராமரிக்கத் தேவையான சிப்பந்திகளை நியமித்து, நல்ல முறையில் கண்காணித்து வரு வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ் நாடு எங்கும் நகராட்சிகளில் சொத்து வரி, வீட்டு வரிகளை அதிக அளவில் கண்மூடித்தனமாக விதித் திருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே இல்லாததுதான் அதற்குக் காரணம். இரண்டு, மூன்று ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் தனி அதிகாரிகளும் மற்றவர்களும் தன்னுடைய இஷ்டம் போல் தன்னிச்சையாக 35 சதவீதம், 40 சதவீதம் அளவுக்கு சேலம் போன்ற பெரிய நகரங்களில் வீட்டு வரியை உயர்த்தியிருக்கி றார்கள். அதுபற்றி அவர்கள் அப்பீல் செய்ய அல்லது முறையீடு செய்ய வழிவகை இருந்த போதிலும் அவர்கள் முறையாக அந்தக் கோரிக்கைகளைப் பரிசிலித்து முடிவு செய்யாமல், தாங்கள் ஏற்கெனவே விதித்த வரிகளையே உறுதி செய்யக் கூடிய நிலையிலே இருக்கிறார்களே தவிர அதை மறு பரிசீலனை செய்வதாக இல்லை. ஆகவே, அர சாங்கம் ரிவிஷன் ஆபிசர்களை எல்லா நகராட்சிகளுக்கும் அனுப்பி இப்போது இருக்கிற அதிக வரியை மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியிலுள்ள மிருகக்காட்சி சாலை அமைந் திருக்கும் இடத்தை சென்ட்ரல் இரயில்வேக்கு கொடுப்பதாகத் தெரிகிறது. அப்படிக் கொடுக்கும்போது அந்த மிருகக் காட்சி சாலை வண்டலூருக்கு மாற்றப்படும் என்றும் அதைப் பரா மரிக்கும் பொறுப்பு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது வனத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : வனத் துறைக்கு மாற்றப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. அது வர வேற்கத்தக்கது. ஏற்கெனவே இருந்த மிருகங்களில் பாதிக்கு மேல் செத்து விட்டன. இன்னும் இருக்கிற மிருகங்களும் செத்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எல்லாம் காட்டு இலாகா டிமாண்டிலே பேசிக் கொள்ளலாம். இப்போது உள்ளாட்சித் துறையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : இன்றைக்கு நாடு சுதந்திரம் அடைந்து 32 ஆண்டுகள் ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லை. மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளில் காற்றும் தண்ணீரும் தான் இலவசமாகக் கிடைக்கக் கூடியவை. ஆனால், காற்று கிடைக்கிறது; தண்ணீர் கிடைக்கவில்லை என்று கூறினார்கள்.

இன்றைய தினம் சேலம் மேட்டூரிலிருந்து வரக் கூடிய, குடி நீர் வடிகால் வாரியத்தினால் செயல்படுத்தக்கூடிய குடிநீர்த் திட்டம் வழியில் இருக்கிற 10, 15 ஊர்களை இணைத்து வரு கிறது. தாரமங்கலம், சூரமங்கலம், ஓமலூர் போன்ற பஞ் சாயத்துக்களையும் நகராட்சிகளையும் இணைத்து, வறட்சியாக உள்ள எல்லா ஊர்களுக்கும் அதிலிருந்து பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கும் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் சேலம் இரும்பாலைத் திட்டம் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் செயல்பட இருக்கிறது. அப்போது அதிகமான ஜன நெருக்கம் ஏற்பட வழி இருக்கிறது. அந்த மக்கள் பெருக்கத்தின் தேவைக்கேற்ப மூன்றாவது குடி நீர்த்திட்டம் ஒன்றை நம்முடைய குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலமாக இன்றைக்குப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக நம் முடைய அமைச்சரவர்கள் நேற்று மேலவையில் அறிவித்ததாகத் தெரிகிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் உடனடியாக நிறைவேற்றினால் சேலத்து மக்கள் அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாநகராட்சி நூல் நிலையங்களைப் பற்றி ஒன்றி ரண்டு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு மாநகராட்சிக்கு உட்பட்ட நூல் நிலையங்கள் நல்ல முறையில் இல்லை. நான் ஒரு சில நூல் நிலையங்களைச் சென்று பார்த் தேன். அங்கெல்லாம் நியூஸ் பேப்பர் தான் படிப்பதற்குக் கொடுக்கப்படுகிறது. மக்களிடமிருந்து வசூல் செய்த பணத் தைக் கொண்டு மாணவர்களுக்கும் சிறுவர்களுக்கும் நல்ல அறிவு ஊட்டக் கூடிய, விளக்கம் தரக் கூடிய புத்தகங்கள் அங்கே வாங்கி வைக்கப்பட வில்லை.

1979 மார்ச் 23] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

1924 ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணியில் பை கிராப்ஸ் ரோடும் பிக் ஸ்ட்ரீட்டும் சந்திக்கும் இடத்தில் இந்துப் பத்திரிகை ஸ்தாபகரும், பத்திரிகை உலக பிதாவுமான ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் நினைவாக நூல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு, மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்றைக்கு அது பழுதடைந்த, பழுதுபட்டு நிலையில் காட்சி யளிக்கிறது. அதைச் சரியாகப் பேணி, நல்ல முறையில் அமைத்து, பத்திரிகைப் பிதாவான அந்தப் பெரியவரின் நினைவால் அமைக் கப்பட்ட அந்த நூலகத்தை மீண்டும் புத்தொளி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் நகராட்சியில் 35 ஆண்டு காலமாக பாதாளச் சாக்கடை திட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக் கொண் டிருக்கிறார்கள். இதனை நான் சேலம் நகரத்திற்காகச் சொல்ல வில்லை. மகாத்மா காந்தியடிகள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இந்த நாட்டில் மனிதனுடைய கழிவுப் பொருளை மனிதனே சுமக்கக் கூடிய நிலை போக வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். இது விஞ்ஞான காலம். விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. ஆகவே நவீன உலகத்தில் வாழ் கின்ற நாம் மனிதனுடைய கழிவுப் பொருளை மனிதனே சுமக்கக் கூடிய நிலையில் இருக்கின்றோம். இந்த நிலையைப் போக்க வேண்டும் என்ற அளவில் ஒவ்வொரு நகராட்சியிலு மாவது இந்த பாதாள சாக்கடை திட்டத்தை அமலாக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்..............

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்)

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசுகிறேன்.

நகர்ப்புற மையங்கள் உள்ள மாநிலங்களில் தமிழகம் ஒன் றாகும். அதிகமாக மக்கள் தொகை கொண்ட சென்னை நகர் அதில் ஒன்றாகும். இவற்றின் வளர்ச்சியும் சீராக இல்லை. கிராமப் புறங்களிலிருந்து மக்கள் நகர்ப் புறங்களில் குடியேறு கிறார்கள். அவர்கள் வாழ்வதற்கு குடியிருப்புகள் தேவைப் படுகிறது. இதனை நிறைவேற்றுவது மாநில அரசின் பொறுப் பாகும். இந்த நோக்கத்தை எய்த வேண்டி தமிழ்நாடு ஒருங் கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்று 1978–79 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இதன் விளை வாக நகர்ப்புற நிலைமைகளைப் படிப்படியாக மேம்படுத்து வதற்கும், நகர்ப்புற மையங்கள் சிலவற்றின் விரைவான வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் திட்டங்கள் தீட்டப்படும். இவ் வாறு மேற்கொள்ளப்படும் திட்டங்களில் வீட்டு வசதி, தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, போக்குவரத்து வசதி, சரக்கு போக்குவரத்துவசதி, வணிக மையங்கள் ஆகியவை அடங்கும்.

[திரு. சு. பாலன்] [1979 மார்ச் 23

நகரத்தைப் போன்று கிராமப் புறங்களில் உள்ள பகுதிகளையும் மேற்கொள்வது என முடிவு செய்துள்ளது வரவேற்கப்படுகிறது. இங்கெல்லாம் கூட சாலை வசதி, கழிவு நீர் அகற்றும் வசதி, தெரு விளக்கு, தண்ணீர் வழங்குதல், கல்வி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதின் மூலம் கிராமங்களை மேம்படுத்தலாமென்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு 50 சதவிகிதம் கடனுதவி வழங்கி வருகிறது. இத்திட்டம் 1979-80 ஆம்ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுவிற்கென சென்னை பெருநகர் பகுதியின் நிழற்படங்களை ஆய்வு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வரை படங்களையும் ஆவணங்களையும் நுண்ணிய படச் சுருள்களில் பாதுகாக்க 2.09 இலட்சம் செலவில் இயக்குநர் அலுவலகத்தில் படச் சுருள் பதிவுக் கருவி அச்சாகும் பிரிவு ஒன்று 1979–80 ஆண்டில் நிறுவ முடிவு செய்துள்ளது வரவேற்கத் தகுந்தது.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் 1977–78 ஆம் ஆண்டு முதல் அரசு செயற்படுத்தி வருகிறது. சென்னை நகரம் படிப்படியாக வளர்ச்சி பெற திட்டமிடுவதற்கென சென்னைப் பெருநகர் குழுமம் பெரு முயற்சி எடுத்து வருகிறது. அதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது.

குடிநீர் வழங்குதல், சாலைப் போக்குவரத்து, குடிசைப் பகுதி மாற்று திட்டங்கள், சமூக ஆதரவு திட்டங்கள் ஆகிய பல்வேறு துறை திட்டங்களை உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக வகுத்து ஒருங்கிணைத்து வருகிறது. இதற்கு 1979–80-ல் வரவு செலவு திட்டத்தில் 14.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மணலி புறவெளி நகரையும், மறைமலை நகர் என்னும் புதிய நகரையும் (துணை நகரம்) உருவாக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மணலியில் 198 ஹெக்டேர் பரப்பில் குடியிருப்பு தொகுதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 543 வீடுகள் கட்டப்பட்டு அங்கு தொழிலாளர்களுக்கும், பிறருக்கும் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும், இரண்டாவது திட்டத்தில் 300 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இங்கே ஒரு லட்சம் மக்கள் வாழ வகை செய்யப்படுமெனவும் சொல்லப்படுகிறது.

இப்படி உருவாக்குகிறபோது அங்கே குடிபுகும் தொழிலாளர்களும் மற்றவர்களும் தங்கள் பணிகளுக்குச் சென்றுவர பஸ் வசதி செய்வதற்கும், நல்ல பாதை வசதிகள் போடுவதற்கும் குடிநீர் வடிகால், திருமண மண்டபங்கள், பள்ளிகள், விளையாட்டுத் திடல் முதலியவைகளை முதலில் அமைத்துக் தரவும் ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 23] [திரு. சு. பாலன்]

[பிற்பகல் 1-20]

மேற்படி அமைப்பின் கீழ் பெருந்திட்டமும், பகுதிவளர்ச்சித் திட்டமும் சென்னை மாநகருக்கும்,அதன் பல்வேறு பகுதிகளுக்கும் உரிய விரிவான திட்டங்களை வகுப்பது ஆகிய அடங்குமென சொல்லியிருக்கிறது. சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு நன்மை அளிப்பதற்கான திட்டத்திற்கு உலக வங்கி 21.6 கோடி ரூபாய் கடனுதவி மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது. மத்திய அரசு இதை மாநில அரசுக்கு வழங்குகிறது. மேற்படி திட்டத்திற்கு 46.80 லட்சம் ஆகும். மொத்தச் செலவில் 50 சதவிகிதம் தமிழ் நாடு அரசு நிதியிலிருந்து செலவிடுகிறது. மனைகள் அதன் தொடர்பான பணிகள், குடிசைப் பகுதி மேம்பாடு, சமூகப்பணி, போக்குவரத்து ஆகியவற்றுக்கு கணிசமான அளவு முதலீடு செய்ய திட்டம் உள்ளது. மேலும் சிறு தொழில்களில் 4,000 வேலை வாய்ப்புக்கள், குடிசைத் தொழில்களில் 5,000 வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என சொல்லப்படுகிறது. இப்போது மேற்படி பணிகளை மேற்கொண்டு, காண்டிராக்டர்களாக ஆளுங்கட்சியினரே நியமிக்கப்பட்டு பெருந்தொகை கொண்ட வேலைகளை ஒப்படைத்திருக்கிறார்கள். இதனால் பெரும் ஊழல் நடைபெற்று வருகிறது.

எனது தொகுதியில் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப் பணியை மேற்பார்வையிட சரியான சூப்பர்வைசர்கள் கிடையாது. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி வேலையைச் செய்யாமல் பெரும் கொள்ளை அடிக்கிறார்கள். ஆகவே இந்தப் பணிகளை மேற்பார்வையிட அந்தப் பகுதியில் உள்ள அனைத்துக் கட்சியினர் குழு ஒன்று அமைத்து சரியான முறையில் சாலை பணிகளும் மற்ற பணிகளும் செய்திட வழிவகுக்கக் கேட்டுக்கொள்கிறேன். வேலைக்கு ஆட்களை நியமிக்கும்போது பாரபட்சம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி திட்டத்தை மேற்கொள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி சமூக நலத்துறை, பல்லவன் போக்கு வரத்துக் கழகம், சென்னைப் பெருநகர் நீர்வழங்கு—வடிகால் வாரியம் ஆகியவை நிறைவேற்றும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சென்னை நகரில் வீட்டுவசதி வாரியம் குடிசைப் பகுதிகளை சீரமைக்கும் பணியில் ஈடுபடும்போது அவர்களுக்கு மனைகளைக் கையகப்படுத்தி முறையாக குடிசை அமைத்துக் கொடுக்கப்பட்ட இடங்கள் பெரும்பாலும் பள்ளப் பகுதிகளாகவே இருக்கின்றன. அங்கெல்லாம் சரியான முறையில் சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி இது போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை. தவிர அங்கு சுகாதாரம் மிகவும் மோசமடைந்துள்ளது. அங்கு குப்பைகளை அகற்றுவதில்லை. இதனால் அங்குள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனை போக்க பள்ளப் பகுதிகளுக்கு மேடான இடமாக உருவாக்கித்

தரவேண்டும். அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு ஆவனச் செய்யக் கேட்டுக் கொள்வதோடு சென்னை நகரைப் பொறுத்தவரை விளையாட்டுத் திடல்கள் மிகக் குறைவாக உள்ளது. இதனை அதிகமாக உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எனது தொகுதியான பெரம்பூர் தொகுதியில் வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், அரிசனத் துறை போன்ற துறைகளுக்கு சம்பந்தப்பட்ட குடிசை பகுதிகள் உள்ளன. இங்கெல்லாம் மழைக்காலத்தில் பெய்யும் மழைநீர் தேங்கி வீடுகளில் புகுந்துவிடுகின்றன. மழை நீர் வடிய சரியான கால்வாய் அமைக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் எந்தவிதமான முன்னேற்றமும் இதுவரையில் காணப்படவில்லை. இங்கு அமைக்கப்பட்டுள்ள குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளாக அவர்களுக்கு கட்டித்தர வேண்டும் அல்லது அவர்களே, கட்டிக் கொள்வதற்கு அரசு மான்யமும் கடன் உதவியும் கொடுக்கவேண்டும். தவிர இங்கெல்லாம் குப்பைகளை அகற்ற மாநகராட்சிக்கு அதற்கான செலவினங்களை ஈடு செய்யும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அவர்களுக்கு அந்த இடங்களை உரிமை ஆக்கித்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனத்துறைக்குச் சொந்தமான பகுதியை உடனடியாக சென்னை மாநகராட்சியோடு இணைத்து அங்கு எல்லா வசதிகளும் மாநகராட்சியே செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். வெங்கடேசபுரம் காலனி வீட்டுவசதி வாரியத்திற்கு உட்பட்டது. அங்கு கட்டப்பட்ட வீடுகளுக்கு அரிசனங்களிடத்தில் நீண்ட வருடங்களாக வாடகை வாங்கப்படுகிறது. இந்தக் கட்டிடங்களை அவர்களுக்கே சொந்தமாக ஆக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாசர்பாடி, பர்மா மக்கள் வாழ் பகுதியில் சாஸ்திரிநகர், பக்தவத்சலம் நகர் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டித்தர திட்டம் உள்ளது. அங்கு குடிநீர் குழாய்கள், வடிகால் குழாய்கள் அமைக்கப்படவில்லை. ஆனால் சாலைகளை மட்டும் பெருநகர் திட்டத்தின் கீழ் போடுகிறார்கள். அதுவும் சரியான முறையில் போடவில்லை என அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். முதலில் ஒரு குடியிருப்புப் பகுதி கட்ட நிர்மாணிக்கப்படும் பொழுது, முதலில் குடிநீருக்காகவும், கழிவு நீருக்காகவும் குழாய்கள் அமைக்கப்படும். அதன் பிறகுதான் பாதைகளைப் போடுவார்கள். ஆனால் இங்கு அப்படி செய்யாத காரணத்தால் நமக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் உருவாகுமா என்ற கேள்வியை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

1979 மார்ச் 23]]திரு. சு. பாலன்[

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி மானியத்தின் மீதும், நகர்ப்புற பகுதி மேம்பாட்டு மானியத்தின் மீதும் பேசுகின்ற வாய்ப்பு பெற்ற நான், முதற்கண் என் தொகுதியிலே உள்ள கள்ளக்குறிச்சி பேரூராட்சியை, நகராட்சியாக மாற்றியதற்காக, இந்த அரசு முன் வந்திருப்பதற்காக மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி மாற்று கின்றபோது, ஒருசில கோரிக்கைகளை இங்கே நான் முன்வைக்க வருகிறேன். இங்கே நிர்வாகச் சீர்திருத்தம் செய்யும்போது, குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் எத்தனை பேர்கள் அங்கே இருக்கவேண்டுமென்று ஒரு நிலையை உருவாக்கி, அதை நகராட்சி யாக மாற்ற வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த மானியத் திலே ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திலே சென்ற ஆண்டு 161 வட்டாரங்கள் முழு பயன்பெற்றிருக்கின்றன. அப்படி ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலே 130 வட்டாரங்கள் பயன் பெற்றார் கள். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினால் 31 வட்டாரங்கள் பயன்பெற்றன. இந்த 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டாரங்கள் எடுக்க முன்வந்திருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி 30 வட்டாரங்களை எடுக்கின்றபோது என்னுடைய சின்னசேலம் மிகவும் வறட்சியான பகுதியாகும். வறட்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, கிராம முழு வளர்ச்சி, கிராம மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்த அரசு மிகவும் அக்கறையுடனும், ஆர்வத் துடனும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அதனை கிராமங் களிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் பாராட்டுகிறார்கள். இதற்காக இங்கே நிதி ஒதுக்கப் பட்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. அது பாராட்டத்தக்க தாகும். இவைகளுக்காக 1976—77-லே இங்கே ரூ. 11,625 லட்ச மாக இருந்தது, 1977—78-லே ரூ. 13,255 லட்சமாகவும், 1978—79-லே ரூ. 14,307 லட்சமாகவும், 1979—80-ல் ரூ. 18,156 லட்சமாகவும் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்த அரசு நல்லதொரு திட்டத்தை தீட்டி, அதற்காக அதிக நிதி ஒதுக்கியிருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப் பேசுகின்றபோது, இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். சாண எரிவாயு தயாரிக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிலே சின்னசேலத்தில் 4 பேர்கள் இந்த சாண எரிவாயு திட்டத்திலே மின்சாரம் தயாரித்து வருகிறார்கள். இதை நம்முடைய உள்ளாட்சித்துறை

செயலாளர் அவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். அங்கே இதன் மூலம் பம்பு செட்டுகள் வைத்து, கிணற்றிலே இருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். இது தமிழ் நாட்டிற்கே ஒரு முன் மாதிரியாக இருப்பதால், மேலும் இத்திட்டத்திற்கு இங்கே ஊக்கம் அளிக்க வேண்டும், உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவுக்கு இங்கே நம்முடைய அரசு கிராம மக்களுக்கு நன்மை செய்கின்றபோது, நகரப்பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு எந்த அளவுக்குச் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கும் போது, சென்னைப் புற நகரிலே மறைமலை தொழில் நகர் ஏற்படுத்துவதற்கு முன்வந்திருக்கின்ற இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அங்கே ஒரு லட்சம் பேர்கள் வாழ்வதற்காக ஒரு பகுதியை ஏற்படுத்தி, அங்கே அம்பத்தூர் தொழிற்பேட்டையை போல் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குகின்ற முயற்சிக்கு இந்த அரசுக்கு நான் பாராட்டுத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், கோயம் பேட்டிலே, கொத்தவால்சாவடிப் பகுதியை அங்கே அமைப்பதற் காக, இங்கே உள்ள அந்தக் கடைகளை எல்லாம் எடுத்துவிட்டு, 3,000 கடைகளை அமைக்க ஒரு புதிய திட்டத்தை ஒரு அங்காடியை திறப்பதற்காக முன்வந்திருப்பதை நான் உண்மை யிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது, குடிநீர் பிரச்சனையைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பிரச்சனையைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். காங் கிரஸ் ஆட்சிக் காலத்தில் 50 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு வைத்து குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டு வந்தது, ஆனால் இன்றைய தினம் 170 ஹார்ஸ் பவர் வைத்து, 17 லட்சம் செலவில் இரண்டு மாத காலத்திலே அந்தப் பகுதி மக்கள் அத்தனை பேருக்கும் குடி தண்ணீர் வசதி கிடைக்கின்ற அளவிற்கு குடிநீர் வடிகால் வாரிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த அரசு நன்மை செய்ய இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசுகின்றபோது, இன்றைய தினம் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் சிலர் பேசினார்கள். சென்னைப் புற நகரிலே உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதியும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு நன்மைகள் செய்யவும், உலக வங்கியிடமிருந்து உதவி பெற்று, குடிசைவாழ் மக்களுக்கு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வசதிகள் செய்து வருகிறது. நான் இதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

அடுத்து நகராட்சித்தேர்தல் வருகிற வரையிலும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு மன்றத்தின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

1979 மார்ச் 23]

[பிற்பகல் 1-30]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: எந்த நோக்கத்தில் பேசப்பட்டது என்பதை நான் அறிவேன். சென்னை நகர மக்கள் எல்லாம் அன்றைய தினம் எந்த நிலையில் இருந்தார்கள். இன்றையதினம் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியலில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரிலிருந்து பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் வரை முதலமைச்சர்களாக இருந்தவர்கள் ஒரு முறை முதலமைச்சர் பதவியிலிருந்து இறக்கப்பட்டவர்கள் மீண்டும் முதலமைச்சராவது இல்லை என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை யாராவது எந்தக் கனவாவது கண்டு கொண்டிருந்தால், அந்தக் கனவுகள் பலிக்காது என்பதற்காகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்லுகிறபோது சென்னை மாநகரத்தில் சென்ற ஆண்டு வெள்ளம் வந்து ஏகப்பட்ட நஷ்டங்கள் ஏற்பட்டு தொகுதி மக்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளானபோது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது 'ஏசியா மாகசின்' என்ற பத்திரிகை உலகம் முழுவதும் 10 மில்லியன் காப்பிகள் சர்குலேட் ஆகக் கூடிய பத்திரிகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரைப்பற்றி வந்திருக்கிறது. He likes to keep the Popular touch என்று வெளியிட்டிருக்கிறார்கள்.

When floods ravaged India, Ministers customarily grab a headline or two by going on an aerial inspection tour of the devasted area but Tamil Nadu Chief Minister M. G. Ramachandran is no ordinary politician: he continues to be Tamil filmdom's most popular matinee idol. So when Madras City was recently flooded by heavy rains M.G.R. seized the opportunity to mingle with his fans. A rumble of approval went up as he waded into muddy waters unmindful of that his spotless white sarang was soaking up the dirt, naturally, accompanion photographers had a field day.

என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த மாகசின் 10 மிலிய்ன் காப்பிகள் உலகம் முழுவதும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அதாவது ஒரு கோடி பிரதிகள் விற்பனையாகக் கூடிய அந்தப் பத்திரிகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்களைப் பற்றி எந்த அடிப்படையில் பாராட்டி எழுதியிருக்கிறது என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். Not only a Politician but also a statesman என்று சொல்வதற்காகத்தான்.

இந்த மானியத்தின்மீது அதிகமாகப் பேச நேரம் கொடுக்கப் படவில்லை என்றாலும் ஒரு சில கோரிக்கைகளை நான் சொல்லியாக வேண்டும். நம்முடைய நகராட்சி மன்றங்களில் பணிபுரிந்து 1—4—1970-க்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கு அட்ஹாக் பென்ஷன் 50 ரூபாய் என்று கொடுப்பதை முடிந்தால் 100

ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அதைப் போல் உடுமலைத் தொகுதியில் சங்கராமநல்லூர் டவுன் பஞ்சாயத்தில் எந்தவிதமான வரி வசூலும் இல்லை, அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை. ஆகவே டவுன் பஞ்சாயத்தை சாதாரண பஞ்சாயத்தாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்ன சேலம் தொகுதியில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தில் முழு கிராம வளர்ச்சித் திட்டத்தில் என்னுடைய பகுதியில் குறைந்தது நான்கு கிராமங்களையாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு இந்த மானியத்தை வரவேற்று முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. எம். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்ட மானியத்தின்கீழ் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக சமுதாய நலத் திட்டம் என்பது கிராம மக்களுக்கு கிராம மட்டத்திலே அவர்களுக்கு வேண்டிய வசதிகளை, கோரிக்கைகளை, நிறைவேற்றுகிற திட்டமாகும். பொதுவாக, பஞ்சாயத்துக்கள் சாலை வசதி, குடிநீர் வசதி, பள்ளிக்கூட வசதி ஆகிய இந்த மூன்று வசதிகளையும் பெற்றிருக்கிறதா என்று ஆராய்ந்து அதிலே எந்த ஒரு வசதி இல்லையோ அதைக் கிடைக்கச் செய்வது ஊராட்சி ஒன்றியத்தின் கடமையாகும் என்பதுதான் முதல் தீர்மானம்.

இன்றைக்கு சாலை வசதி என்று எடுத்துக் கொண்டால் ஜில்லா போர்டு நாளிலிருந்து, தாலுகா போர்டு நாளில் இருந்து ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்தது வரை இதுவரை சாலைகள் சரியாக அமையவில்லை. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக வேண்டுமென்றால் கட்டை வண்டியில் தான் செல்ல வேண்டும். காரில் செல்ல முடியாது. லாரிகள் பஸ்கள்செல்ல முடியாது. பார்மேஷன் ஆப்ரோட்ஸ் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பணம் செலவழிக்கப்படுகிறது. நடுவிலே ஓடைகள், வாய்க்கால்கள் குறுக்கிடுவதால் சரியாக சாலை வசதி செய்ய முடிவதில்லை, ஆகவே, சாலைகளை அமைக்கும்போது பாலங்களை அமைக்கவும் திட்டமிட வேண்டும். சாலைகளைச் சரியான முறையிலே பயன்படுத்தவேண்டுமென்றால்சாலைகளிலே குறுக்கிடும் ஓடைகள், வாய்க்கால்களின்மேல் பாலங்களைக் கட்டித் தர வேண்டும். அந்தப் பாலங்களை அமைத்து சாலைகளிலே தார் போட்டு அவைகளைத் தார் ரோடுகளாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எல்லா கிராமங்களுக்கும் மினி பஸ் விட வேண்டுமென்ற கோரிக்கைகள் விடப்படுகின்றன. ஆனால் இப்போதுள்ள சாலைகள் பஸ்களை விடுவதற்கு லாயக்கு இல்லாததாக உள்ளன. திருக்கோயிலூர் பேரூராட்சி எல்லைக்குள்

நெடுஞ்சாலை ரோடுகள் குறுக்கிடுகின்றன. அங்கே ரீடெயினிங் வால்ஸ் கட்டிக் கொடுத்து சாக்கடை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். என்னுடைய பேரூராட்சியில் உள்ள எல்லா வார்டுகளிலும் டிரெய்னேஜ் கட்டியாகி விட்டது. இன்னும் கட்டாமல் மிச்சம் இருப்பது நெடுஞ்சாலையின் இரு புறங்களும் தான். ஆகவே டிரெய்னேஜ் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடுகளைப் போடுகிறபோது ஊராட்சி ஒன்றியங்களிலே லேபர் கான்ட்ராக்டர் சொஸைடி என்ற பெயராலே முறை கேடான நிலைமைகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங் களில் விடப்படும் வேலைகளை லேபர் கான்ட்ராக்ட் சொஸைடி மூலமாக எடுத்து 5 பர்சன்ட் கமிஷன் அவர்களுக்குக் கொடுத்துவிட்டுச் செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே அவர்கள் டெண்டர்கள் கேட்டு வேலை செய்கிறபோது 40 பர்சன்ட் என்ற முறையிலே கொடுக்கிறார்கள். 45 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வேலை இருக்கிறது என்றால் லேபர் கான்ட்ராக்ட் சொஸைட்டிக்கு 5 சதவீதம் கமிஷன் என்ற முறையிலே தரப் படுகிறது. ஆகவே லேபர் கான்ட்ராக்ட் சொஸைடிக்கு கான்ட்ராக்ட்களைக் கொடுக்கக்கூடாது. அந்த சொஸைடியை அபாலிஷ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலைப் பராமரிப்பிற்காக அதிக மான நிதி ஒதுக்கவேண்டும். தற்போது என்னுடைய மாவட்டத் திலே 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளுக் குச் செல்கின்ற சாலைகள் அபிவிருத்திக்கு என்று சுகர்கேன் செஸ் பண்ட் நிதி என்று அதிகமாக இருக்கிறது. அந்த நிதியை வைத்து அந்தச் சாலைகளை தார்சாலைகளாக அமைத்து போக்கு வரத்து நல்ல முறையிலே நடக்கக்கூடிய வகையிலே செப்ப னிட்டுக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் கொடுக்கவில்லை. வீராணம் குடிநீர் திட்டத்திற்காகத் தயா ரிக்கப்பட்ட பைப்கள் அப்படியே கிடக்கின்றன, கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கக்கூடிய முறையிலே கிரவுண்ட் லெவல் ரிசர் வாயர் அமைத்து அந்த பைப்புகளைப் பயன்படுத்தி அவைகளின் மூலமாக தண்ணீர் வழங்கவேண்டுமென்ற யோசனையைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கிராமங்களிலே பள்ளிக் கூடங் களுக்குக் கட்டடங்கள் கிடையாது. மரத்தடியிலும், கூரைக்கட் டடங்களின் கீழேயும் தான் பள்ளிகள் நடக்கின்றன, ஆகவே நிரந்தரமான கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். சுந்தரம்] [1979 மார்ச் 23

திருக்கோயிலூர், சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை ஆகிய தாலுக்காக்களில் கல்லூரி வசதி கிடையாது. ஆகவே அங்கே படிக்கிற மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்றால், 25 மைல்கள் தூரத்திற்கு அப்பாலுள்ள கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டும். அரியூரில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அங்கே 40 ஏக்கர் காலி இடம் இருக்கிறது. அங்கே கல்லூரி அமைக்க வேண்டுமென்று நாங்கள் பங்குத் தொகை இப்போது இல்லாவிட்டாலும் தனியாக அரசு அறிவித்தாலும் வழங்குகிறோம், அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ரிஷிவந்தியம் வட்டாரத்திலே மருத்துவ வசதி கிடையாது. இப்போது மருத்துவ மனை வாடகைக் கட்டடத்தில் நடந்து கொண்டிருக்கிறது, அரியூரிலே இருக்கிற அலுவலகத்திற்கு பின்னாலே ஒரு குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம் இருக்கிறது. அதைக் கட்டி நான்காண்டுக்காலமாக செயல்படாமல் மூடப்பட்டுக் கிடக்கிறது. அதனால் குடும்பக் கட்டுப்பாடாக இல்லாமல் பெருக்கக்கூடிய காரியம் தான் அங்கே நடைபெறுகிறது. நான்கு வருடங்களாகக் கட்டப்படாமல் இருக்கிற அந்த நிலையத்தைச் செயல்படும்படி ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பிரைமரி ஹெல்த் சென்டர்கள் 374 பஞ்சாயத்து யூனியன்களில் 391 இருக்கின்றன. ஒரு ஊரில் இரண்டு கூட இருக்கின்றன, ஆகவே ரிஷிவந்தியத்திலே இரண்டு பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஏற்படுத்தி மக்களுக்கு மருத்துவ வசதியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1—40].

திருக்கோயிலூர் தாலுக்கா தலைமையிடமாக இருந்தும், அங்குள்ள மருத்துவ மனையில் எக்ஸ்ரே வசதி இல்லை, லேபரட்டரி வசதி இல்லை, ஆப்பரேஷன் தியேட்டர் வசதி இல்லை. மக்கள் விபத்திற்கு உள்ளாகும்பொழுது 45 மைல்களுக்கு அப்பாலுள்ள கடலூருக்குச் சென்று எக்ஸ்ரே எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்காக 100 ரூபாய், 200 ரூபாய் செலவாகும். ஆகவே, ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனை

1979 மார்ச் 23] [திரு. எம். சுந்தரம்.]

யிலும் எக்ஸ்ரே பிரிவும், ஆபரேஷன் தியேட்டரும், லேபரட்டரி வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்தப் பகுதியிலுள்ள ஏரிகள் மேடிட்டு உள்ளதால் கொள்ளளவு எவ்வளவு தண்ணீர் பிடிக்க வேண்டுமோ அந்த அளவிற்குப் பிடிக்காமல் இருப்பதால் பாசனத்திற்குத் தண்ணீர் குறைவாகக் கிடைக்கிறது. ஏரியின் நடுவில் மேடிட்டுள்ள இடங்களை டி.சி.ஆர்.மூலமாகத் திட்டம் தீட்டியாவது மேட்டைக் குறைத்து தண்ணீர் கொள்ளளவு பிடிக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இலாக்கா மூலம் பராமரிக்கப்படும் திருக்கோயிலூரிலுள்ள ஏரி பொதுப்பணித் துறை ஏரியாக இருந்தாலும், தனியாரின் மேலாதிக்கம் அதிகமாக இருக்கிறது, அதைக் குறைக்க வேண்டும். மீன் பிடிப்பதில் பேரூராட்சிக்கும், ஊராட்சிக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயிலூரில், மலட்டாறு பகுதியில் தண்ணீர் விடுவதில்லை, இதனால் அந்தப் பகுதி கரம்பாக இருக்கிறது. மிராசுதார்கள் பக்கத்து நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு நிலங்களை மேலும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இலட்சம் ஏக்கர்களுக்கு மேல் மலட்டாறு பகுதியைச் சேர்ந்த நிலம் இருக்கிறது. அதைக் கையகப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்குத் தலைக்கு மூன்று ஏக்கர்கள் வீதம் கொடுத்தால் அந்த ஏழை மக்கள் பலனடைவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேல் நாடுகளில் நகரங்களின் நடுவில் ஓடும் நதியின் இருபுறமும் சுவர் கட்டி, சாலை அமைத்து, பூங்காக்கள் அமைத்துப் பராமரித்து வருகிறார்கள். அதைப் போல, நம்முடைய நகரத்திலே ஓடும் கூவம் நதியின் இருபக்கங்களிலும், வீராணத்திற்குச் செய்யப்பட்ட குழாய்களை அமைத்து, கழிவு நீரை அகற்றிவிட்டு, மற்ற இடத்திலே சாலைகளை அமைத்து, நல்லமுறையில் பயன்படுத்த வேண்டுமென்று முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். அங்கே உள்ள ஆணையாளரை அவரது செயலாளராகச் செயல்படச் செய்ய வேண்டும். ஆணையாளர்கள் விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கு ஆணையிட்டால் மதிப்பதில்லை. ஏனென்று கேட்டால், மேலதிகாரிகள் உத்தரவிட்டால் தான் செய்ய முடியுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலையை நீக்க, ஒற்றுமையாக நிர்வாகம் நடைபெற வேண்டுமென்றால் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் கமிஷனரின் கீழ் செயல்படும் அளவிற்கும், கமிஷனர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரின் செயலாளராகச் செயல்படும் அளவிற்கும் செய்ய வேண்டும்.

நிர்வாக வசதிக்காக ஒரு மாவட்டமாக இருப்பதை இரண்டாகப் பிரிப்பதைப்போல, தமிழ்நாட்டையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். தென் மாநிலம் என்றும், வட மாநிலம் என்றும் அமைத்து, இரண்டு அமைச்சரவைகளை ஏற்படுத்த இந்த அமைச்சரவை சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இங்கேயுள்ள மேல் சபையைக் கலைத்து விட்டு இரண்டு அமைச்சரவைகளைத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்துவதற்குச் சிபாரிசு செய்ய வேண்டும். ஆகையால், நம்முடைய தென் மாநிலத்திலே மூன்று தமிழ் பேசும் மாநிலங்கள் இருக்கின்றன என்ற பெருமையும் உண்டு. அத்துடன், குறுகிய பகுதியாக இருந்தால் வளர்ச்சிக்கும், நிர்வாகத்திற்கும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின்சார வசதி வழங்குவதுபற்றி எடுத்துக்கொண்டால், பல்புகளைக் கடையிலே வாங்கும்பொழுது சில தவறுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு தவறுகள் ஏற்படா வண்ணம் இருக்க, பல்புகளிலும், டியூப்லைட்டுகளிலும் ' எல்.ஏ., அல்லது ' ஊராட்சி ' அல்லது ' ஊராட்சி ஒன்றியம் ' என்ற முத்திரையிட்டு வழங்கினால் தவறுகள் நேராமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சர்க்காருக்கு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் வாங்குவதுபற்றி யோசனை இருக்கிறது. உளுந்தூர்பேட்டையிலும், வேலூரிலும் ஏரோடிராம்கள் இருக்கின்றன. இந்த இரண்டு விமான நிலையங்களையும் புதுப்பித்து, விமானங்கள் செல்ல வசதி செய்து, லோகல் சர்வீஸ், மாநிலத்திற்குள்ளேயே விமான சர்வீஸ் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1) அறிவிப்புகள்.

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள்) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி, ஏற்கெனவே எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் பற்றிய நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்டவாறு மாறுதல்கள் செய்யப் பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

1979 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகள் 22—கால்நடை வளர்ப்பு, 30—சமூக நலன், 13—நீதி நிர்வாகம், 14—சிறைச்சாலைகள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் என்று குறிப்பிட்டிருந்தது 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாள் என்று மாற்றப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சி தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மானியத் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் 4—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 6—4—1979-க்கு மாற்றப்பட்டுள்ளது.

அதேபோன்று, மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள், மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 2—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 16—4—1979 அன்றைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன், மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா, மானியக் கோரிக்கை எண். 45—காட்டு வளத் துறை, மானியக் கோரிக்கை எண். 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், மானியக் கோரிக்கை எண். 56—காட்டு வள மூல தனச் செலவு 16—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 2—4—1979-க்கு மாற்றப்பட்டிருக்கிறது.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் 31—3—1979 என்று குறிப்பிட்டிருந்தது 3—4—1979-க்கு மாற்றப்பட்டிருக்கிறது. அன்று, தேவை இருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும், மானியக் கோரிக்கை எண். 27—கதர், மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் 3—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 31—3—1979 அன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

126. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977–78 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்கு குறித்த தணிக்கை அறிக்கையும் மற்றும், 31 - 3 –1978ஆம் தேதி வரையிலானஅந்த தொகைக் குறிப்பு. (தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (a) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*81. கோரிக்கை எண் 34 —வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**82. தமிழ்நாடு கூட்டுறவு இயக்கத்தின் கருத்துச் சுருக்கம் (ஆங்கிலம்).

**83. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**84. தமிழகத்தில் மத்திய கூட்டுறவு வங்கிகள் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

**85. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**86. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

**87. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் பணிகள் பற்றிய குறிப்பு. (தமிழ். ஆங்கிலம்).

**88. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

**89. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

90. தொழிற் பேட்டைகள் உள்ளிட்ட கிராம மற்றும் சிறு தொழில்கள் குறித்த 1977–79- ஆம் ஆண்டுகளின் மதிப்பீட்டுக் குழு அறிக்கை. (ஆறாவது பேரவை ; ஏழாவது அறிக்கை.)

***91. உடுக்குறியிடாத வினாவிடை பட்டியல் (551 முதல் 650 வரை .

கோரிக்கை எண்கள்—2, 34-க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 21-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

1978–79 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைக்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 22-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

* 21-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 22-3-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*** 22-3-1979 அன்று பேரவை முன் வைக்கப் பெற்றன.

[1979 மார்ச் 23

இணைப்பு I

[......657-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

முன்னுரை.

ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, அத்தகைய வளர்ச்சி வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவித்து, உழைக்கத் தூண்டும் ஒரு திட்டமாகும். தனிமனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் திட்டம்தான் இது எனினும், மக்களின் ஆக்கங்களிலும் ஊக்கங்களிலும், அரசு பெரும் பங்கேற்று அம்மக்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழி வகுக்குகிறது. பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் சமுதாயம் மேம்பட்டுத் திகழச் செய்வதே இதன் இன்றியமையா நோக்கம் எனினும், ஆண்டுகள் உருண்டோடும் போது, பலவகையாகப் பிரிவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய நீரோடைகள், நாட்டு முன்னேற்றம் என்ற ஆற்றல் ஒன்று சேர்ந்து கலக்க, அந்த நாட்டின் வளத்திற்கு அவைகள் இறுதியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்கின்றன. மக்கள் தமக்குரிய திட்டங்களைத் தாமே வகுத்து தாமே நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தை செயலில் காட்டும் முன்னேற்றப் பாதையைத்தான் ''சமுதாய வளர்ச்சி'' என்ற கைகாட்டி காட்டுகிறது. எனவே அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியில் அவர்களையே ஈடுபடுத்தினால் தேவைப் படும் நேரத்தில் தேவைக்கும் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்ற எண்ணம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இதயமாகும். மேலும், இத்திட்டம், ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை மக்கள் மனமுவந்து அளிக்கின்ற திட்டமாகவும் அமைவதால், வளர்ச்சிப் பணிகளில் தளர்ச்சியின்றித் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளச் சமுதாயம் முழுவதும் தூண்டிவிடப்படுவதற்கான வாய்ப்பு அப்போது உருவாகிறது. இத்தகைய சாதனை எல்லைகளை அடைய உறுதி அளிக்கும் சட்டப் பூர்வமான அமைப்புகளாக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் திகழ்கின்றன.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப் பதற்கு 1979-80-ல் பல்வேறு கோரிக்கைளில் ஒதுக்கப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு சுமார் ரூ. 181.57 கோடியாக இருக்கும். சட்டப் பேரவையின் முன்னுள்ள இக் கோரிக்கையான ரூ 40·90 கோடி என்பது ரூ. 181.57 கோடியின் ஒரு பகுதியேயாகும். இக் குறிப்புரையுடன், சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நீதி நிலை அறிக்கை இணைப்பானது ஊராட்சி வளர்ச்சிக்குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்துக் காட்டுகிறது. இதற்கு மேலும் 1—4—1978 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித், திட்டம் என்ற ஒரு தேசியத் திட்டம் தொடங்கப்பட்டது. சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் மேம்

1979 மார்ச் 23]

பாட்டுக்காகவும் அவர்களிடையே வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் இத் திட்டம் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் 100 சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை (SFDA) வட்டாரங்களிலும் 30 வறட்சி நிவாரணப் பகுதித் திட்ட (DPAP) வட்டாரங்களிலும், சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை வட்டாரங்களல்லாத மற்றும் வறட்சி நிவாரணப் பகுதித் திட்ட வட்டாரங்களல்லாத 31 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பலன் கொடுக்கும் இத் திட்டம் 1979–80 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பல தொண்டு நிறுவனங்கள் தொழில் மற்றும் வாணிபக் கழகங்களும் கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அக்கறை கொண்டு பல கிராம வளர்ச்சி திட்டங்களில் பங்கு கொண்டு வருவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1978–79-ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் ஆய்வும் 1979-80 ஆம் ஆண்டில் திட்டங்களும் இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

(அ) அமைப்பு.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1978) தற்போது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமப் பகுதிகளிலும் செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் அடங்கியுள்ள ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப்பகுதியில் ஊராட்சிகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்டவுடன், தனியாக ஓர் ஊராட்சி ஒன்றியம் இப்பகுதியிலும் அமைக்கப்படும்.

(அ) நிர்வாக அமைப்பின் வளர்ச்சி.

நிர்வாக அமைப்பும் அது செயல்படும் முறையும் அரசின் பரிசீலனையில் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதுவரை செய்யப்பட்டுள்ள மாற்றங்களும் இனி செய்ய இருக்கின்ற மாற்றங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன :—

(i) வட்டாரங்கள், அரசின் உதவிகள் அளிக்கப்படுவதற்கு வசதியாக தலை விகித நில வருவாயின் அடிப்படையில் ஆறு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தலை விகித நில வருவாயின் அடிப்படையில் மீண்டும் வட்டாரங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

197 மார்ச் 23]

(ii) ஊராட்சிப் பொதுத் தேர்தல்களுக்கு முன்பே, மிகப் பெரிய வட்டாரங்களைப் பிரிக்கவும்—அவற்றின் எல்லைகளை மாற்றியமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் வட்டாரத்தைத் திருவரங்குளம், புதுக்கோட்டை, கந்தர்வ கோட்டை என மூன்று வட்டாரங்களாகப் பிரித்து அமைக்கப் பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள போக்லூர் வட்டாரமும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி வட்டாரமும் ஊராட்சி பொதுத்தேர்தல்களுக்கு முன்பே பிரித் தமைக்கப்படவுள்ளன.

(iii) ஊர் வளர்ச்சி நிர்வாகக் கிளைகளில் பணிபுரியும் தொழில் நுட்பமில்லா இதர பணியாளர்களின் பணி விதிகளைச் சீரடையச் செய்யும் எல்லா நிலைகளிலும் தேக்கத்தைப் போக்க வும், வேலை உயர்வில் அனைவருக்கும் சம வாய்ப்புகள் அளிக்க வும் "ஒரு பணி விதிகள்" அமைக்க முடிவு செய்யப்பட்டுத் தீவிர நடவடிக்கையில் உள்ளது.

(iv) 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஊராட்சிகளுக்கு கடைசியாகத் தேர்தல் நடைபெற்றது. குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவுற்ற போதிலும் சில தவிர்க்க இயலாத காரணங்களால் அனைத்து ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக் காலம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டது. ஊராட்சி ஒன்றியங்களை நிர்வகிப்பதற்கு 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி முதல் 'சிறப்பு அலுவலர்கள்' நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் பதவிக் காலமும் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப் பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் தேதி அன்று 21 வயது நிரம்பிய வாக்காளர்களின் எண்ணிக்கையை வீடு வீடாகச் சென்று சேகரித்து 1978 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் தேதியன்று 21 வயது பூர்த்தி அடைந்தவர்கள் பெயர்களையும் சேர்த்து வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி முடிவுற்ற தும் ஏப்ரல் மாத இறுதியில் இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்பு தேர்தல்கள் இவ்வாண்டு மத்தியில் நடை பெறவிருக்கின்றன.

(இ) பயிற்சித் திட்டங்கள்.

ஊரக வளர்ச்சி இயக்ககம் நடத்தி வரும் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களில் வெவ்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது :—

[1979 மார்ச் 23

(1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம்—பவானி சாகர்.

(2) ஊரக வளர்ச்சி பணி பயிற்சி நிலையம்—பவானி சாகர் (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது); தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்); பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம்): சத்திய விஜய நகரம் (வடாற்காடு மாவட்டம்); கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).

மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில், மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊராட்சி கொள்கை பற்றிய பயிற்சியும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் பணி பயிற்சி மற்றும் ஊட்டச் சத்துணவுத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஊர்நல அலுவலர்களுக்கு வேளாண்மை, கால்நடை வளர்ச்சிப் பணிகளில் இரண்டாண்டுக்காலம் ''பணி முன்பயிற்சி'' அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்கு, வேளாண்மைப் பணிகளில் செறிவுப் பயிற்சியும் கூட அளிக்கப்பட்டு வருகின்றது. கிராம கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஓராண்டுக் காலத்திற்குத் தொழிற்கூடப் பயிற்சி, தச்சு மற்றும் கருமார்த் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பெண் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகள் சத்திய விஜய நகரத்திலும், தே. கல்லுப்பட்டியிலும் அமைந்துள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் உள்ளன.

இந்தப் பயிற்சித் திட்டங்கள், அலுவலர்களுக்கு மேன்மேலும் பயிற்சி அளிப்பதோடு அவர்கள் தங்கள் பணியினைத் திறம்படச் செயலாற்றுவதற்குப் பெரும் உதவிபுரிகின்றன.

(ஈ) நிதி நிலை மற்றும் திட்டங்களின் சாதனைகள்.

ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்ாகும் நிதிச் செலவு படிப்படியாக உயர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. 1974–75 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

ஆண்டு.	நிதி ஒதுக்கீடு.	ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1974–75 ..	1,04,22·05	27·87
1975–76 ..	1,11,23·87	29·74

1979 மார்ச் 23]

ஆண்டு.	நிதி ஒதுக்கீடு.	ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1976–77 ..	1,16,25·40	31·08
1977–78 ..	1,32,55·30	35·44
1978–79 ..	1,43,07·36	38·25
1979–80 ..	1,81,56·90	48·55

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும். (1974–75 ஆம் ஆண்டு வரையில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு வளர்ச்சியைக் காட்டும் வரைபடம் ஒன்று கடைசியில் இணைக்கப்பட்டுள்ளது).

''உள்ளூர் செஸ் மேல் வரி'' யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப்பெருக்கிக் கொள்ளத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியமாக அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவது இதற்குச் சான்றாகும். 1979–80 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியத்திற்காக மட்டும் ரூபாய் 1,700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கேளிக்கை மற்றும் காட்சி வரிகள் மீது ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. 1979–80 ஆம் ஆண்டு அத்தகைய வரி மட்டும் ரூ. 115 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில திட்டங்களைப் பொறுத்த மட்டில், 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படிச் சேகரிக்கப்பட்ட அடிப்படைப் புள்ளி விபரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் அளவு விபரங்களும்.	31-3-1975.	31-3-1976.	31-3-1977.	31-3-1978.
	ஆம் நாள் நிலவரப்படி.			
(1)	(2)	(3)	(4)	(5)
1 இணைப்புச் சாலைகளின் நீளம் (கி.மீ.)	35,750	36,681	36,852	36,632**
2 மேநிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், தானியங்கி அழுத்த நீர்த் தொட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	6,270	6,796	7,400	7,899
3 குடிநீர்க் கிணறுகள் எண்ணிக்கை.	76,560	79,460	81,310	83,281
4 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் உள்ள தொடக்க நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை.	19,646	19,826	19,922	20,071
5 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் உள்ள உயர் நிலைத் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை.	3,166	3,175	3,155*†	3,123*†
6 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டிடங்கள்.	17,360	18,034	18,615	18,939

** சில சாலைகளை ஒன்றியச் சாலைகளாக மாற்றியதன் காரணமாக குறைவு ஏற்பட்டுள்ளது.

*† உயர் நிலைத் தொடக்கப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாக மாறியதன் காரணமாக இந்த எண்ணிக்கையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1975-76ஆம் ஆண்டு முதல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களையும், 1979-80ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டும் :—

திட்டத்தின் பெயர்.	1975-76.	1976-77.	1977-78.	1978-79 திருத்தப் பட்ட திட்ட மதிப்பு.	1979-80 வரவு-செலவு திட்ட மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
வேளாண்மை	38·12	38·82	39·00	45·00	45·00
கால்நடை வளர்ச்சி ..	10·53	10·02	9·85	10·00	12·00
மீன் வளம்	1·90	1·97	2·93	3·00	3·00
இணைப்புச் சாலைகள் ..	67·56	56·00	60·26	75·00	80·00
குடிநீர் வழங்கல்	1,91·94*	3,15·58*	1,37·02	1,50·00	1,50·00
பள்ளிக் கட்டடங்கள் ..	53·16	53·79	54·20	85·00	1,00·00
சமூகக் கல்வி	4·20	8·02	8·19	8·00	8·00
மகளிர், குழந்தைகள் நலன்.	16·12	17·66	16·04	14·57	14·57

* வறட்சி நிவாரணத்திற்காகச் செலவழித்துள்ள தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

[1979 மார்ச் 23

3. பணிகள் பற்றிய திட்டங்கள்.

(அ) கிராம வேலைத் திட்டங்கள்.

'குடிநீர் வழங்கல்', 'இணைப்புச் சாலைகள்', 'பள்ளிக் கட்டடங்கள்' அமைத்தல் ஆகிய பணிகள் இத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகின்றன. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் முடிய இந்தத் திட்டத்தின் மூலம் செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரம் வருமாறு :—

1.	மேநிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் (எண்ணிக்கை). ..	7,899
2.	கிணறுகள் (எண்ணிக்கை)	83,281
3.	இணைப்புச் சாலைகள் (கி.மீ.)	36,632
4.	பள்ளிக் கட்டடங்கள் (கட்டி முடிக்கப்பட்டவை)	18,939

ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டம்.

ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டம் சம்பந்தமாக சமீபத்தில் நடந்த ஆய்வின்படி தமிழ்நாட்டிலுள்ள கிராமக் குடியிருப்புகள் ஆறு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க சில வகை குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இப் பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது, 1-வது, 2-வது குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதாவது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடி நீர் வசதிகளே இல்லாத குடியிருப்புகள், மற்றும் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் குடிக்கத் தகுதியற்ற குடி நீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்விரு வகையிலும் உள்ள பெரும்பான்மையான வேலைகள் 1979ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிந்து விடும். துரித ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகளுக்கு அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு மத்திய அரசும் உதவி புரியத் தீர்மானித்துள்ளது.

1978–79 ஆம் ஆண்டின் சாதனைகள்.

1978–79 ஆம் ஆண்டு ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டத்திற்கு மாநில அரசு ரூ. 6,00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு 'துரித ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின்கீழ்' ரூ. 2,90 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஆக 1978–79ஆம் ஆண்டில் ரூ. 8,90 இலட்சம் இத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1979 மார்ச் 23]

ஒதுக்கீட்டிற்கு மேலும் கிராம வேலைத் திட்டத்தின்கீழ் தேவை அடிப்படையில் வட்டாரங்களுக்கு ரூ. 1,50 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நன்கொடையைச் சேர்த்து 1978–79ஆம் ஆண்டு சுமார் ரூ. 12 கோடி இத் திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

1978–79ஆம் ஆண்டில் 1-வது மற்றும் 2-வது வகைக் குடியிருப்புகளில் பெரும்பான்மையானவற்றிற்குக் குடிநீர் வழங்கப்பட்டுவிடும். இதன் விவரம் கீழே காண்க:—

தொடர் எண்.	விவரிப்பு.	குடியிருப்புகளின் எண்ணிக்கை.	பயனடையும் மக்கள். (இலட்சத்தில்.)
(அ)	வகை 1 குடியிருப்புகள்	14·98	5·38
(ஆ)	வகை 2 குடியிருப்புகள்	8·19	4·52
	மொத்தம்.	23·17	9·90

1-வது, 2-வது வகைக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தைத் துரிதப்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இத் திட்டத்துடன் இணைந்து பெரிதும் செயலாற்றி வருகிறது. 31—3—1979-ல் 1-வது மற்றும் 2-வது வகையைச் சார்நத 3,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு விடும்.

1979–80 ஆம் ஆண்டுக்குள் 1-வது, 2-வது வகையைச் சார்ந்த 5,420 குடியிருப்புகளுக்குச் சுமார் ரூ. 25 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தி முடிக்கப்படும்.

1979-80 ஆம் ஆண்டு கிராமவேலைத் திட்டத்தின்கீழ் ரூ. 1,50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைப்பம்புகள் பராமரிப்பு.

மாநிலத்திலுள்ள கைப்பம்புகள் பொருத்தப்பட்ட 17,000 ஆழ்க் குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கத் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தில் 230 இயந்திரக் கம்மியர்களும், 19 இயங்கு குழுக்களும் பணியாற்றி வருகின்றன. மாதம் சராசரியாக 3,000 குறைபாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

மின் விசைப்பம்புகள் பராமரிப்பு.

செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஊர்ப்புறங்களில் இயங்கிவரும் 2,730 விசைப்பம்புகளைப் பராமரிக்கும் பொறுப்பும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்

தின் வெற்றியைப் பொறுத்தே மற்ற மாவட்டங்களில் இயங்கி வரும் விசைப் பம்புகள் பராமரிப்பையும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக் கொள்ளும்.

'கிராமக் குடிநீர் வழங்கல்' திட்டங்களுக்காக அரசு மானியம் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின்வருமாறு :—

வகை.	அரசு மானியம்	பொது மக்கள் நன்கொடைத் தொகை
(1)	(2)	(3)
	(சத வீதம்.)	(சத வீதம்.)
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

(ஆ) இணைப்புச் சாலைகள்.

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1979–80 ஆம் ஆண்டு ரூ. 80 இலட்சம் இத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இணைப்புச் சாலை வேலைகளை நிறைவேற்ற அரசு மானியமும், பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின்வருமாறு :—

வட்டாரத்தின் வகை.	அரசு மானியம்.	பொது மக்கள் நன்கொடைத் தொகை.
(1)	(2)	(3)
	(சத வீதம்.)	(சத வீதம்.)
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

1979 மார்ச் 23]

அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென 15 சத வீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சத வீதமும், அரிசன நலத்துறை நிதியிலிருந்து பெறப்படுகிறது. குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் 20 சத வீதமும் அரிசனங்கள் பயனுக்காகச் செய்யப்பெறும் பணிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

தொடக்க, முதல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், உயர் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூ. 20,000, ரூ. 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு 1974–75 ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு அரசு மானியமும் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதமும் திருத்தியமைக்கப் பட்டது.

வட்டார வகை.	அரசு மானிய விகிதம்.	பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதம்.
(1)	(2)	(3)
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

மலைப்பகுதி வட்டாரங்களைப் பொறுத்தமட்டில் கட்டுமானப் பணிகளுக்கான உச்ச வரம்பு 25 சத வீதம் உயர்த்தப் பட்டுள்ளது. 1979–80 நிதி நிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) சாலைகளைப் பராமரித்தல்.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென 'உள்ளூர் சாலைகள் மானியம்' ஒவ்வோராண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்து வழங்குவதற்காக ரூ. 250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ) சிறு பாசனம்.

சிறு பாசனம் அமைப்புகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப் படவும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்டபூர்வமாக ஒப்படைக் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாசன அமைப்புக்கும் குறைந் தது ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறையேனும் பராமரிப்புச் செய் யப்படும். 'உள்ளூர்ப் பாசன மானியம்' என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் தொகையைச் செலவிடும். ஊராட்சி ஒன்றியங்கள் இப்பாசன அமைப்புக்களைச் சரிவரப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆயக்கட்டைக் கொண்ட எல்லா பாசன அமைப்புக்களையும் பொதுப் பணித் துறை எடுத்துக் கொள்ளும் என்று அரசு ஆணை பிறப்பித்துள் ளது. 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட சிறு பாசன அமைப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக் கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழ் விடப்பட்டு விட்டாலும் ஏரிகளைப் பரா மரிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானி யங்களில் எவ்விதக் குறைப்புமின்றி தற்போதைய அளவிலேயே இருக்கும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏரிகளை மேலும் சிறந்த முறையில் பராமரித்து வரும் நிலையில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1979–80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத் திற்கென ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஊ) சமுதாயக் கிணறுகளும் ஆற்று நீரேற்றுத் திட்டமும்.

விவசாயத்தில் நம்பிக்கையுடன் உறுதியுடன் குடியானவர்கள் செயல்பட அதிகப்படியான பாசன வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே சமுதாயக் கிணறு மற்றும் ஆற்று நீரேற்றுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின்கீழ் அதிகப்படியான பணிகளை நிறை வேற்றும் பொருட்டு, சமுதாயக் கிணறுகள், மற்றும் ஆற்று நீரேற்றுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதையும், பராமரிப் பதையும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதியுடன் ஒரு கிணறுக்கு ரூ. 40,000 மதிப்பீடு என்ற கணக்கில் ஒரு சமுதாயக் கிணற்றை இறக்க உபரி நிதிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றி யங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சமுதாயக் கிணறுகளை இறக்க நிதி குறைந்த வட்டாரங்களுக்கு கடன்களும் வழங்கப் படுகின்றன. 1979–80 ஆம் ஆண்டில் மேலும் அதிக சமுதாயக் கிணறுகள் இறக்கப்படும்.

4. உற்பத்தித் திட்டங்கள்.

விவசாயம், கால்நடை வளர்ச்சி, மீன்வளம்.

1979–80-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசு ஆணைகளின் மூலமும் தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை அளிக்கப்பட்டு உள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத் திட்டம் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டு உள்ளன

(அ) வேளாண்மை.

(1) வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்.

(2) ஊராட்சித் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக் கேற்ப கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனையத் திட்டங்கள்:—

(i) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனம் வழங்குதல்.

(ii) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

(iii) உதவிகள் விரிவாக்குதல், கிராம விழாக்கள், பொருட் காட்சிகள், போட்டிகள் நடத்துதல்.

(iv) வேளாண்மை விரிவாக்கப்பணி—விளக்கப் பாத்திகள் அமைத்தல்,

(v) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1979—80-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 12,032 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 10,350 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்—

		ரூ.
(i)	வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்	2,500
(ii)	ஊராட்சித் தோட்டங்கள் பராமரிப்பு ..	400
(iii)	ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள்.	9,132
	மொத்தம் ..	12,032

(ஆ) கால்நடை வளர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 12 இலட்சம் அரசு மானியமாகத் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 3,476 மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஈட்டுத் தொகையாக ரூ. 2,045 உள்ளூர்வாசிகளிடமிருந்து பெற வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(1) கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்துதலும்;

(2) கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

(3) கால்நடை, பால்பண்ணை, கோழித் தீவனம், பன்றி வளர்ப்பு ஆகியவைகள் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் இதர திட்டங்கள்.

(இ) மீன் வளம்.

இததிட்டத்தில் மாநிலம் முழுவதற்கும் ''ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புத்துறைகளைப் போன்றே மீன் வளங்களின் மேம்பாட்டுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு எங்கெங்கு இயலுமோ அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1979 மார்ச் 23]

1979–80 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்:—

(1) மீன் குஞ்சு வளர்ப்பு—பேணுதல்.

(2) மீன் குஞ்சுகளை வழங்குதல்.

(3) ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவை முழுவதற்கும்).

5. நலப்பணித் திட்டங்கள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியங்கள் தத்தம் பகுதிகளில் அவைகளின் நிதி வசதிக்கேற்ப ஒரு நியாயமான நிதியை ஒதுக்கித் தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி விரிவுபடுத்தி, மேம்படுத்துவதையும், தனியார் தொடக்கப்பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதையும் ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாக 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (ε) பகுதி வகுத்துள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும் ஊராட்சி ஒன்றியங்களையே சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் தற்போது 28,494 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,194 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் பட்டு வருகின்றன. எஞ்சியவை உதவிபெறும் நிறுவனங்களாகும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் மொத்தம் 1,30,540 ஆசிரியர்கள் 49,23,000 மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றனர். 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அரசின் செலவு, ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

ஆண்டு.	அரசின் செலவு.	ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1973—74	34,32.41	3,72·00
1974—75	36,36·97	3,92.00
1975—76	38,98·28	4,32·04
1976—77	43,00·02	6,62·94
1977—78	50,69·72	7,41·18
1978—79	54,68·00	8,17·06
1979—80	73,45·00	10,01·60

TRUTH ALONE TRIUMPHS

மதிய உணவுத் திட்டம்.

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் உள்ளாட்சி நிறுவனங்களைப் பங்கு பெறச் செய்து மதிய உணவுத் திட்டத்தை அரசு நிலைத்துச் செயல்படச் செய்ய முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும் பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண். 17–ல் ரூ. 418·85 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மக்கள் நல்வாழ்வுப் பணிகள்.

ஆதார சுகாதார நிலையங்கள் :

ஆதார சுகாதார நிலையம், சமுதாயத்துக்கு நோய் தடுப்புச் சிகிச்சையளிப்பது, நோய்ச் சிகிச்சையளிப்பது மற்றும் மக்களின் உடல்நலம் ஊட்டம் பெறச் செய்வது ஆகிய பல்நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 382 ஆதார சுகாதார நிலையங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.

தாய்–சேய் நல நிலையங்கள் :

தாய்–சேய் நலப் பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடும் மொத்தச் செலவில் 3–ல் 2–பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படும் தாய்–சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,806 ஆகும். 1979–80 ஆம் ஆண்டின் இந்த இனத்தின்கீழ் ரூ. 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :

மருந்தகங்களை நிறுவுவதும் நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, கிராம மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 5 சதவிகிதம் (ஆண்டொன்றுக்கு ரூ. 5,400–க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டம் :

குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டம் 374 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1979 மார்ச் 23]

(இ) சமூகக் கல்வி.

தற்போது 13,259 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர் நாட்டு நடப்புச் செய்திகளின்மீது அவர்களுக்குள் விவாதிக்கும் ஒரு நிலையமாக இவை அமைக்கப் பட்டுள்ளன. உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப் படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகிறார்கள்.

திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 13,734 கிராம வானொலி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப் பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப்புறப் பகுதிகளில் 12,308 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வாழ்க்கையில் முன்னேற சிறப்பான வழிமுறைகளை இம்மன்றங்களின் மூலம் கற்று வருகின்றனர். மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கெனத் தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது.

6. சிறப்புத் திட்டங்கள்.

(அ) செயல் முறை ஊட்டச்சத்துணவுத்திட்டம்.

மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962–63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக செயல்முறை சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது.

கிராமப் பகுதிகளில் குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பரப்புவதும், சத்துணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிராமச் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்வதுமே இத் திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை மற்றும் நாட்டு மக்கள் குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகளின் சத்துணவு உட்கொள்ளும் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பிற முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே கல்விப் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டமாக இச்சத்துணவுத் திட்டம் விளங்குகிறது.

[1979 மார்ச் 23

1962–63 ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டம் 75 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப் பெற்றுள்ளன. இவற்றில், 38 வட்டாரங்களில் செயல்முறைச் சத்துணவுத் திட்டம் முடிவுற்றது. 23 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. 1978–79 ஆம் ஆண்டில் மேலும் 14 புதிய வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் 6 ஆண்டுக் காலத்திற்குச் செயலில் இருக்கும். திட்ட காலத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு மத்திய அரசு 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. திட்டம் செயல்படும் காலத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பெற்று நிதி ஒதுக்கங்களைக் கொண்டு, ஒவ்வோராண்டும் என்னென்ன பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு அந்த வகையில் முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. திட்ட காலத்தில், திட்டத்தினைச் செயல்படுத்தும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பொருள் வடிவிலும், ரொக்க வடிவிலும் ரூ. 1.6 இலட்சம் அளவிற்கு 'யூனிசெப்' நிறுவன உதவி கிடைக்கப் பெறுகிறது. இத் திட்டத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான செலவு முழுவதையும் 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. தவிர, ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மகளிர் மன்றங்களையும் 5 இளைஞர் மன்றங்களையும் உருவாக்க ரொக்க உதவியாக ரூ. 9,500-ம் கொடுக்கப்படுகிறது. திட்டம் செயல்பட்டு வரும் வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஆண்டொன்றுக்கு ரூ. 34,000மும் முன்னால் திட்டத்தைச் செயல்படுத்திய வட்டாரங்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 20,000-மும் மத்திய அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. 1978–79-ஆம் ஆண்டு முதல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மைய அரசு ரூ. 30,000 உதவித் தொகை அளித்து வருகிறது. இதுவரையில் 'யூனிசெப்' அளித்து வந்த உதவித் தொகை நிறுத்தி விட்டபடியால் அதற்கு சிறப்பு ஈட்டுத் தொகையாக இவ்வுதவித் தொகையை அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு உற்பத்தி வகைப் பணிகளுக்காக ரூ. 51,000 வீதமும் ஊட்டச் சத்து கல்விப் பணிகளுக்காக ரூ. 50,000 வீதமும் ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வழங்குகிறது.

சத்துணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் சிற்றூர்களிலும், கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. மீன் வளம்.

2. தோட்டக்கலை—

(அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்,

(ஆ) சமுதாயத் தோட்டம்.

3. கால் நடை வளர்ப்பு—

(அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்.

(ஆ) கோழி முட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்.

(இ) புழக்கடை பிரிவுகள்.

(ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்.

4. வீட்டுத் தோட்டங்கள்.

5. பள்ளித் தோட்டங்கள்.

6. சத்துணவுக் கல்வி—

(அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி.

(ஆ) உணவளிப்பது குறித்துச் செயல்முறை விளக்கத் திட்டம்.

(இ) பால்வாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

7. பொதுச் சுகாதாரப் பணிகள்—

(அ) ஆய்வு.

(ஆ) மருத்துவப் பரிசோதனை.

(இ) தடுப்பு ஊசி போடுதல்.

செயல் முறைசத்துணவுத் திட்டத்திற்கு 1979—80-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 45 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

(ஆ) 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர் ஆதலால் இன்றியமையாத வளர்ச்சிக் கால கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளா

கும். ஆண்டில் 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், பயன் பெறுகிற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயாபீன்ஸ், மக்காச்சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் ' சால்டு ' எண்ணெய்யும் அல்லது ' பீநட் ' எண்ணெயும் ' கேர் ' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன்பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும்; அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 112 வட்டாரங்களில் அமைந்து கிடக்கின்ற 1,116 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் 1,30,000 குழந்தைகளும் தாய்மார்களும் பயன் பெறுகின்றனர்.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 19.00 இலட்சமாகும். இத்தொகையில் ' கேர் ' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு வழங்குவதற்கு ஆகும் செலவுகள், பால சேவிகைகள், ஆயாக்கள் ஆகியோருக்கு ஊதியம், பாத்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு, மற்றும் நிர்வாகச் செலவு ஆகியன அடங்கும்.

(இ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் இம் மாநிலத்தில் 1—4—1978 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகளின் நிலையை உயர்த்துவதும் அவர்களிடையே வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் 161 வட்டாரங்களில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. வறட்சிப் பகுதித் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் ஆகியன செயல் படும் வட்டாரங்களிலிருந்து 130 வட்டாரங்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இந்திய அரசு மானியமாக ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிப் பகுதி திட்டம் போன்ற தனி திட்டங்கள் செயல்படாத 31 வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசு மானியமாக ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

2. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் குடும்பங்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு வட்டார அலுவலர்களைச் சார்ந்ததாகும். வர்த்தக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் நிதியை மத்திய அரசின் நிதியுடன் இணைத்து கோழி வளர்ப்பு, கால்நடை

வளர்ப்பு, குடிசைத்தொழில் இன்னும் இதர பணித்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பும் அவர்களையே சார்ந்ததாகும். இது ஒரு தொடர்ந்து செயலாற்றப்படும் திட்டமாகும். 1979—80 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கென ரூ. 1,000 இலட்சம் இந்திய அரசு மானியமாக அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) கிராம மேம்பாட்டுத் திட்டம்

கிராமத்திலுள்ள ஏழை மக்களின் துயர் துடைக்கும் பொருட்டு 1978—79-ல் கிராம மேம்பாட்டுத் திட்டம் என்னும் புதியதொரு திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. கிராமங்களைத் தன்னிறைவு அடையச் செய்து, அவற்றை சிறிய நகரங்கள் போன்ற, வளர்ச்சி மையங்களாக ஆக்குவதும் இதன் நோக்கமாகும். இராமநாதபுரம், புதுக்கோட்டை, கோயமுத்தூர், வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, கன்னியாகுமரி, மதுரை ஆகிய மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள 8 ஒன்றியங்களிலுள்ள 80 கிராமங் களில் இத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங் களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராம மக்களை சிறு விவசாயி, குறு விவசாயி, நிலமற்ற ஏழைகள் என மூவகையாகப் பிரித்து அவர்கள் கோழிப்பண்ணை வைத்தல், பால்பண்ணை வைத்தல், பன்றி, ஆடு மாடு முதலிய கால் நடைகளை வளர்த்தல் போன்ற தொழில்களை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இதற்கு ஆகும் செலவின் பெரும் பகுதியை வங்கிகளின் மூலம் ஏற்றுக் கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் படிப்படியாக மேலும் பல கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.

(உ) கிராம முழு வளர்ச்சித் திட்டம்

வேளாண்மைத் தொழிலையே பெரிதும் சார்ந்திருக்கும் கிராமப் புற மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்கோடு வேளாண்மைத் தொழிலை நவீனப்படுத்தி முன்னேற்றம் காண்பதற்கான பரிந் துரைகளை வழங்கும் பொருட்டு தேசிய வேளாண்மைக் குழு ஒன்றை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது, அக் குழு கிராமதான ஊர்களையும், சர்வசேவைப் பண்ணைகளையும் மேம்படுத்த, திட்டக் குழுவோடு கலந்தாலோசனை நடத்தியது. குறிப்பாக கிராமதானப் பகுதிகளில் இதற்கான அணுகுமுறை முன்னோடித் திட்ட அடிப்படையில் அமைய வேண்டுமென்றும் அவ்வாறு அமைந்தால் கிராமதானப் பகுதிகளில் பலர் இதனை விரும்பி ஏற்பர். அதனால் அருகாமையிலுள்ள பல கிராமங்களும் இத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமென்றும் அக் குழு உணர்ந்தது.

கிராம சமுதாயம் முழுவதிலும் வளர்ச்சியை உண்டு பண்ணு வதையும், கிராமப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் கிராம முழு வளர்ச்சித் திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. கிராமம் மற்றும் கிராமச் சமுதாயத்தின் வளர்ச்சியே இத் திட்டத்தின்

குறிக்கோளாகும். இத்திட்டத்தைப் பல சூழ்நிலைகளில் செயலாக்குவதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய போதுமான அனுபவத்தைக் கொண்டு சில மாதிரிகளை உருவாக்கி இதை நாடு முழுவதும் செயலாக்குவதே இத் திட்டத்தின் மற்றும் ஒரு குறிக்கோளாகும். முதல் படியாக வேளாண்மையிலும் இரண்டாவது படியாக வேளாண்மை அல்லாத இதர துறைகளின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்படுவதால் கிராமப் புறத்திலுள்ள அனைத்து மக்களும் பயன் பெறுவர்.

இத் திட்டத்தைச் செயல்முறைப் படுத்த தமிழ்நாட்டிலுள்ள நெல்லை மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள (1) சின்னக்கோயிலான்குளம், (2) நடுவக்குறிச்சி (பெரிய), (3) நடுவக் குறிச்சி (சிறிய), (4) பட்டாடைகட்டி ஆகிய கிராமங்களை தேசிய வேளாண்மைக்குழு தேர்ந்தெடுத்தது. மூன்று கடைசிக் கிராமங்கள் ''கிராமதானக் கிராமங்களாகும்''. சின்னக் கோயிலான்குளம் கிராமதானக் கிராமமாக அறிவிக்கப்பட உள்ளது.

ஒன்றியப் பணியாளர்களோடு இணைந்து தமிழ்நாடு பூமிதான வாரியம் இத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. கிராம நிலையில் நான்கு கிராமங்களுக்கு ஒன்று வீதம் திட்ட செயலாக்கக் குழு உள்ளது. திட்டத்தின் முன்னேற்றப் பணிகளை மேற்பார்வையிட திட்டச் செயலாக்க ஒன்றியம் ஒன்றும் உள்ளது. ஒருவருக்கொருவர் உதவிடும் வண்ணம் பொருட்களை வாங்கி வழங்கும் பணியையும் இவ்வொன்றியம் கவனிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலலவர் இந்தத் திட்டச் செயலாக்க ஒன்றியத்தின் தலைவராகவும் திட்ட இயக்குநர் ஒன்றியத்தின் செயலாளராகவும் உள்ளனர்.

மாநில அரசு மூலமாக இத்திட்டம் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு நூறு சதவீத மானியத்தை இந்திய அரசு அளிக்கிறது. இத்திட்டத்தில் பயனடைவோர் வட்டியில்லாமல் சுலபத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் குழு மூலமாக மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த உதவித் தொகை தனிப்பட்டவருக்கு அளிக்கப்படுவதில்லை. திட்டத்தைச் செயல் படுத்தும் குழுவிடம் அளிக்கப்படும். அதை ஈடு கட்ட பயனடைவோர் தாம் பெற்ற கடனை அய்ந்து அல்லது பத்து ஆண்டுகளில் வட்டியில்லாமல் செலுத்திவிடலாம். திருப்பிச் செலுத்தப்பட்ட பணத்தைத் திட்டத்தைச் செயல் படுத்தும்குழுவே அதன் நிதியுடன் சேர்த்து மீண்டும் பயனடைவோருக்கு அளிக்க வாய்ப்புள்ளது.

இதுகாறும் இத்திட்டச் செயலாக்கத்திற்கு ரூ 14.35 இலட்சம் மைய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அதில். 12. 30 இலட்சம் இது வரை செலவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 47. 65 இலட்சம் மதிப்பு கொண்ட 1978-79ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று மைய அரசின் ஒப்பளிப்பிற்காக முனுப்பப்பட்டுள்ளது.

1979 மார்ச் 23]

இத்திட்டத்தால் பலதிறப்பட்டவருமானங்களை உடைய 1,102 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. இதனால் 4 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 8 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

(ஊ) சாண எரிவாயு—தயாரிக்கும் திட்டம்

எரிவாயு தட்டுப்பாட்டைப் போக்கும் பொருட்டும் இரசாயன உரக் குறைபாட்டைத் தீர்க்கும் பொருட்டும் மத்திய அரசு 1974-75 ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதும் சாண எரிவாயுக் கூடங்களை நிறுவும் விரைவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்கூடம் சாணத்திலிருந்து சமையல் செய்வதற்கான எரி வாயுவைப் பிரித்தனுப்புகிறது. அத்தோடு நைட்ரஜன் நிறைந்த பயிர்களுக்கான உரத்தையும் பிரித்தெடுக்கிறது.

ஒரு சாண எரி வாயுக் கூடத்தை நிர்மாணிக்க சுமார் 4,000 ரூபாய் ஆகிறது. இந்திய அரசு 20 சதவீத உதவித் தொகையை ஒவ்வொரு கூடம் அமைப்பதற்கு அளிக்கிறது. 75 சதவீத உதவித் தொகை அரிசனங்களுக்கும், மலைச் சாதியினருக்கும் அளிக்கப்படுகிறது. எரிவாயுக்கூடங்களை நிறுவுவதில் அரசு வங்கிகளும் கூட்டுறவுத் துறை வங்கிகளும் கடன் வழங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலமாகக் கிராமப்புறங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு ஊரக வளர்ச்சி இயக்குநரைச் சாரும். 1977—78 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 2,100—க்கு 1,554 எரிவாயுக் கூடங்கள் அமைக்கப்பட்டன. 1978—79 ஆம் ஆண்டுக்கான இலக்கு 3,000 ஆகும். மாவட்ட ஆட்சியாளர்கள் இலக்கை அடையத் தீவிர முயற்சிகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். சாண எரி வாயு சக்தியைக் கொண்டு விசை ஏற்றங்களைச் செயல்படச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நம் மாநிலத்தில் தற்போது 3 விசை ஏற்றங்கள் சாண எரி வாயுச் சக்தியால் இயங்கி வருகின்றன. கிராமப் புறங்களில் பயன்படுத்த எரிவாயு சக்தியிலிருந்து மின் சக்தியைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ) வருமான வரிச்சட்டம் பிரிவு 35 (சிசி)-யின் கீழ் அளிக்கப்படும் சலுகை.

வரி விதிக்கத்தக்க ஆதாயத்தைக் கணக்கிட்டு கிராம வளர்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு அதன் மூலம் ஏற்படும் செலவை அந்த ஆதாயத்திலிருந்து கழித்துக் கொள்ள வகை செய்து 1—9—1977 ஆம் ஆண்டிலிருந்து 35 (சிசி) என்ற புதிய பிரிவு ஒன்று வருமான வரிச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. நாட்டின் வளமான வருங்காலத்தை உருவாக்கும் இப் பணியில் தொழில்/ வர்த்தக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்கலாம்.

ஊர்ப்பகுதிகளிலுள்ள உடல் வலுவுள்ள அனைவருக்கும் ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பை அளித்து கிராம மக்களை ஏழ்மை நிலையிலிருந்து மீட்பதே இந்த வளர்ச்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இச்சலுகையைப் பயன்படுத்தி இத் திட்டத்தில் பங்கு கொள்வதற்கு முன்பு மத்திய அரசின் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதலைப் பெற்றிருக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் இப்பிரிவின் கீழ் செயல்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் வரவேற்கப்படுகின்றன :—

(1) பள்ளிக் கட்டிடங்கள், மருந்தகங்கள், குடிநீர் வழங்கும் பொருட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

(2) சாலைகள் அமைத்தல், சாலைகளுக்குச் சரளைக் கற்கள் பரவுதல், தார் போடுதல் மூலம் சாலைகளைச் சீரமைத்தல்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களைத் தெரிந்தெடுத்து, அவை அமைக்கப்பட்டுள்ள இடம அவற்றைச் செயலாற்றுவதற்கு ஆகும் செலவு முதலிய விவரங்களுடன் அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்புள்ள நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கலாம். ஊரக வளர்ச்சி இயக்குநர் மாநில அளவில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சில தொழில் வர்த்தக நிறுவனங்கள் எடுத்துள்ள மூன்று மனுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சலுகையைப் பயன்படுத்தி தொழில்/வர்த்தக நிறுவனங்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்ள பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இதன் விளைவாக நான்கு மனுக்கள் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த தொழில்/வர்த்தக நிறுவனங்கள் குடிநீர் வசதி, ஏரிக்கரைகளை அமைத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம், தடுப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் சுகாதாரப் பணிகள், தையல் யந்திரம் வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபட உள்ளன.

(ஏ) பாடி (PADI) நிறுவனம்.

ஊராட்சியின் வளர்ச்சியில் ஈடுபடும் பங்கு கொள்ளும் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் உதவி.

பாடி (PADI) நிறுவனம் இந்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு பதிவு பெற்ற நிறுவனமாகும். பதிவு பெற்ற தொண்டு நிறுவனங்கள் ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபட அவைகளுக்கு இந் நிறுவனம் உதவி அளிக்கிறது.

1979 மார்ச் 23]

(அ) பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய பகுதிகளை முதலில் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அங்குதான் பொருளாதாரத்தில் பின் தங்கிய சமூகத்தினர் இவ்வுதவியைப் பெற்று அதன்பலனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

(ஆ) ஆக்கபூர்வமான அடிப்படையில், அதாவது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், காடு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இத்திட்டம் அமைய வேண்டும்; அல்லது வேலை வாய்ப்பை நல்கக் கூடிய வகையில், உதாரணமாக வேளாண்மையை வேளாண்மைத் தொடர்புடைய தொழிலகங்களாக மாற்றியமைக்கும் நோக்கங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். சமுதாயக் கிணறுகள் அமைத்தல், பட்டுப் பூச்சி வளர்ப்பு, மரம் நடுதல், மீன் வளர்ப்பு, கதர் மற்றும் கிராமத் தொழில், சத்துணவு உற்பத்தி ஆகிய திட்டங்களை அமுல் படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநர் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார், பாதி நிறுவனத்தில் உதவி பெற்று ஒன்பது தொண்டு நிறுவனங்கள்: பண்ணை முன்னேற்றம், வேளாண்மைச் செறிவுப் பயிற்சி, கட்டு மரம் கட்டுதல், மீன் பிடிக்கும் நவீன யந்திரங்கள் செய்தல் போன்ற ஊர் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இன்னும் பல தொண்டு நிறுவனங்கள் இப் பணியில் ஈடுபட முன் வரக்கூடும்.

(ஐ) வேலைக்காக உணவுத் திட்டம்.

மத்திய அரசால் தொடங்கப் பெற்ற வேலைக்காக உணவுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யவிருக்கிறது.

நீர்ப்பாசனம், வெள்ளம், மண் பாதுகாப்பு, சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் இன்னும் இது போன்ற இதர பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் ஒரு பகுதி தானியமாக அளிக்கப்படும். இது மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படும். இதுவே இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

சுமார் 26,000 டன் அரிசி இந்த ஆண்டிற்குள் இம்மாநிலத்திற்கு இத்திட்டத்தை நிறைவேற்ற அளிக்குமாறு கேட்கப்பட்டு உள்ளது. இன்னும் அதிக அளவு அரிசி அடுத்த ஆண்டு கேட்கப்படும்.

(ஒ) வானொலியும் தொலைக் காட்சியும்.

ஊராட்சிகளில் வானொலிகள் நிறுவும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவுக்குள் 46, 517 வானொலிப் பெட்டிகள் வாங்கப்பட்டு மாநிலத்தின் பல்வேறு கிராமங்களில் நிறுவப்பட்டு விட்டன.

வேளாண்மை, குடும்பநலம், பொதுச் சுகாதாரம் மற்றும் பல துறைகளின் நுட்பத்தை ஊர்ப்புற மக்களுக்குப் போதிப்பதற்காக மாநில அரசு 194 தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்கி நிறுவச் செய்துள்ளது. அவைகளில் 123 பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. இதற்கு மேலும் இந்திய அரசு பரிசாக 124 தொலைக் காட்சிப் பெட்டிகளை அளித்துள்ளது. அவைகள் செங்கற்பட்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. அனைத்துப் பெட்டிகளையும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தொலைக் காட்சிப்பராமரிப்பு நிலையம், பராமரித்து வருகின்றது. இந்நிலையம் நகராட்சிகளிலும் சென்னை மாநகராட்சியிலும் தொலைக் காட்சிப் பெட்டிகளை நிறுவி பராமரித்து வருகின்றது.

(ஓ) முறைசாராக் கல்வி.

பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பினரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து படிக்க முடியாமல் இடையே பள்ளியை விட்டு வந்த 6 வயது முதல் 14 வயது வரை உள்ள சிறுவர்களுக்கு (ஊராட்சி ஒன்றியத்தின் உபரிநிதியிலிருந்து) தற்போது செயல்பட்டு வரும் திட்டம் இதுவாகும். கல்வித் துறை மூலமாகவும், தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் நிலையங்கள் அமைக்கப்பட்டு இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. உபரிநிதி கொண்ட ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 780 நிலையங்கள் உள்ளன. இதைச் செயல்படுத்தும் ஆசிரியர் ஒருவருக்கு மாதம் ரூ. 50 மதிப்பு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. 780 நிலையங்களைச் செயல்படுத்த ரூ. 4.68 இலட்சம் செலவிடப்படுகிறது. மேலும் 220 கூடுதல் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன. இவைகள் ஏற்கெனவே இந்நிலையங்கள் இல்லாத உபரி நிதி கொண்ட ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்படவிருக்கின்றன.

(ஔ) ஊராட்சி ஒன்றிய உபரி நிதியைப் பயன்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 3 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும் பொது நிதி உபரி நிதியாகக் கருத்திற் கொள்ளப்படும். இவ்வுபரி நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 1 இலட்சம் முதல் 3 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 3 இலட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளுக்கு அரசு ஒப்புதல் பெறவேண்டும். இந்த உபரி நிதி கீழ்க்கண்ட வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

(1) கிணறுகள் இறக்குதல், குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல், தரைமட்ட நீர்த்தேக்கங்கள், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்தல், சமுதாயக் கிணறுகள் அமைத்தல்.

1979 மார்ச் 23]

(2) ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துதல், சரளைக் கற்கள் பரப்புதல், சல்லிக்கல் பரப்புதல்.

(3) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளில் பாலங்கள், சிறு பாலங்கள் தரைப்பாலங்கள் அமைத்தல்.

(4) கட்டிடங்கள் கட்டுதல், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கூடுதலான பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

1978-79 ஆம் ஆண்டு 114 ஊராட்சி ஒன்றியங்கள் உபரி நிதியிலிருந்து ரூ. 159·48 இலட்சம் வரையிலான தொகையைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

இணைப்பு II

[657-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மானியக் கோரிக்கை எண் 34.

நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பு.

நகர்-ஊரமைப்பு

இந்தியாவில் மிக அதிகமான நகர்ப்புற மையங்கள் உள்ள மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். மேலும், இந்தியாவில் நகர மக்கள் தொகையை அதிகமாகக் கொண்டுள்ள இரு மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். எனினும் நகர்ப்புற மையங்கள் ஒரே சீராக அமையவில்லை ; அவற்றின் வளர்ச்சியும் சீராக இல்லை. கிராமப்புறங்களிலிருந்து வந்து நகர்ப்புறங்களில் யாரும் குடியேறாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு மாநில முழுவதும், நகர்ப்புற மையங்கள் சீராக வளர்ச்சியடைந்து சீராக பரவியிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். இந்த நோக்கத்தை எய்த வேண்டி, இந்த அரசு, 'தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்' என்ற புதிய திட்டம் ஒன்றை 1978–79-ல் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ், நகர்ப்புற மையங்கள் ஒரே சீராகப் பரவியிருக்கும் வகையில், நகர்ப்புற நிலைமைகளைப் படிப்படியாக மேம்படுத்துவதற்காகவும் நகர்ப்புற மையங்கள் சிலவற்றின் விரைவான வளர்ச்சியைத் தூண்டுவதற்காகவும் திட்டங்கள் தீட்டப்படும். இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களில், வீட்டு வசதி, தண்ணீர் வழங்குதல், சாக்கடை வசதி, போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து வணிக மையங்கள் ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் 15 நகராட்சிகளும் 40 பேரூராட்சிகளும் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. நகர்ப்புற அமைப்புத் திட்டத்தின் கீழ், நகர்ப்புற பகுதிகளும் ஓரளவு நகர்ப்புறத் தன்மை வாய்ந்த பகுதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்ட இந்த வளர்ச்சியை கிராமப்புறப் பகுதிகளிலும் மேற்கொள்ள வேண்டுமென அரசு தற்போது முடிவு செய்துள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் உள்ள வளர்ச்சி மையங்களில் சாலைவசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, தெரு விளக்குகள், தண்ணீர் வழங்குதல், கல்வி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் அவற்றை மேம்படுத்துவதற்கு ஊரமைப்பு புற ஊர் அமைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப் படும். வருகின்ற ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படும், நாளடைவில், இத்திட்டம் மாநிலம் முழுவதற்கும் நீடிக்கப்படும்.

3. மதுரை, கோயம்புத்தூர், ஆகிய இரண்டாம் நிலை மாநகரங்களுக்காக வகுலிக்கப்பட்ட ''ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்'' ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது; மேற்சொன்ன திட்டத்தின் கீழ் வீட்டு வசதி, தண்ணீர் வழங்குதல். சாக்கடை, போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து, குடிசைப் பகுதி மேம்பாடு ஆகியவை குறித்த திட்டங்கள் பலவற்றை செயல்படுத்த எடுத்துக் கொள்ளப் பட்டு பணி நடந்தேறி வருகின்றது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு, 50 சதவீத கடனுதவி வழங்கி வருகிறது. இத்திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுக்தப்படும். நிதி நிலைமைகளுக்கு ஏற்ப, இது போன்ற திட்டங்களை மேற்கொள்வது பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. நகர்-ஊர் அமைப்பு இயக்குநர் அலுவலகம் மதுரை மத்தியப் பகுதிக்கான மறு சீரமைப்புத் திட்டப் பணியை மேற்கொண்டுள்ளது. மதுரையின் மையப் பகுதியில் மரபு வழக்குக்கும், சமயச் சூழ்நிலைக்கும் ஏற்ப கட்டுமானங்களை உருவாக்கி, வரலாற்றுச் சிறப்பைப் பாதுகாத்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்,

5. நகரத்தின் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் மற்றும் புதிய முறைகளைக் கையாளவும் சென்ற ஆண்டு துவக்கப் பட்ட நகர்-ஊரமைப்பு இயக்கத்தை நவீனப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நிழற் படம்-ஆய்வுப் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டது, இப்பிரிவு. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுவிற்கென சென்னைப் பெருநகர் பகுதியின் நிழற் படங்களை ஆய்வு செய்யும் பணியைத் தொடங்கியுள்ளது. மதுரை, கோயம்புத்தூர், திருச்சி சேலம் ஆகிய நகரங்களின் நிழற்பட ஆய்வுப் பணிக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இச்செயற்

குறிப்பிற்காக, 1979-80 ஆம் ஆண்டில் நிழற்பட ஆய்வுக்கான கூடுதல் சாதனங்கள் வாங்குவது குறித்து ரூ.4.25 இலட்சம் செலவிற்கு அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது. இயக்ககத்தின் வரைபடங்களையும் ஆவணங்களையும் நுண்ணியப் படச் சுருள்களில் பாதுகாக்க, ரூ. 2.09 இலட்சம் செலவில் இயக்குநர் அலுவலகத்தில் படச் சுருள் பதிவுக் கருவி அச்சாகும் பிரிவு ஒன்று (Microfilming and printing Unit) 1979-80-ஆம் ஆண்டில் நிறுவவும் அரசு முடிவு செய்துள்ளது. இதனால் நீண்ட காலத்திற்கு இவை அழியாமல் பாதுகாக்கப்படும், 1979—80-ஆம் ஆண்டில், 39,000 ரூபாய் செலவில் திட்டங்களையும் வரைபடங்களையும் வண்ணத்தில் அச்சிடத் தேவையான சாதனங்களை நகர்-ஊர் அமைப்புத் துறைக்குக் கொடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. உள்ளூர் திட்ட அதிகாரிகள் வட்டார அதிகாரிகள் ஆகியவர்களின் திட்டங்களையும் பணிகளையும் செம்மையாக ஆய்வு செய்வதற்கு 75,000 ரூபாய் செலவில். நகர்-ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் சிறப்பு ஆய்வு—மேற்பார்வை பிரிவு ஒன்றை 1979-80-ஆம் ஆண்டில் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஒன்றாம் நிலை மாநகரங்களுக்கு போக்குவரத்து திட்டங்களை வகுக்கும் நோக்கத்துடன் இந்த மாநகரங்களில், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், மக்கள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து ஆய்வினை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் அதிகரித்து வரும் பணியைச் செய்ய ரூ.2.25 இலட்சம் செலவில் தற்போதுள்ள மக்கள் போக்குவாத்து-சரக்குப் போக்குவரத்து ஆய்வுப் பிரிவில் மேலும் பணியாளர்களை வேலைக்கமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டப்பகுதிகளில் குடிமக்கள் தொகுதிகளை அமைப்பதன் மூலமும், கருத்தரங்குகளை நடத்துவதன் மூலமும், நகர்ப்புற பிரச்சினைகள் பற்றியும், திட்டமிட்ட நகர்ப்புற வளர்ச்சியின் அவசியம் பற்றியும், பொதுமக்களிடையே ஒரு உணர்வை ஏற்படுத்தஅரசு முடிவு செய்துள்ளது. அரசு இதற்கானதிட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இதற்காக ரூ. 1·5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

6. இயக்குநர் அலுவலகம், ஈரோடிற்கான மாவட்டத் தலைமையிட திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது. இது மாவட்டத் தலைமையிடத்திற்குத் தேவைப்படும் வசதிகளுக்கும் கட்டுமான அமைப்பிற்கும் வகை செய்யும். இன்னொரு தலையாய முயற்சி யாதெனில். கோயம்புத்தூர் மாவட்டத்தில் மதுக்கரையில் (புயலாலும் வெள்ளத்தாலும்) பாதிக்கப்பட்ட நிலப் பகுதியை சீரமைப்பதற்காக நிலப் பகுதித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதேயாகும்.

7. இயக்குநர் அலுவலகம், தமிழ்நாட்டிற்கான ''புயல்அழிவைத் தடுக்கும் திட்டம்'' ஒன்றைத் தயாரிக்கும் பணியில் மூனைப்பாக ஈடுபட்டுள்ளது. இயக்குநர் அலுவலகத்தால் வடிவமைக்கப்பட்ட புயல் அழிவைத் தடுக்கும் அமைப்பு அக்கரைப்பட்டு

(நாகப்பட்டினம்), மிமிசால் ஆகிய இடங்களில் அண்மையில் தாக்கிய புயலின் போது பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்கொண்டும் பாதுகாப்பு ஒதுங்குமிடங்கள் ஐந்து கட்டப்பட்டு வருகின்றன. மேற்கொண்டும் இருபத்தாறுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ஐம்பது அமைப்புகள் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து 100 சதவீத மானிய உதவியைப் பெற்று கட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. புயலால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளை பகுப்பாய்வு செய்வதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றிற்கும், வழக்கமாகப் புயலால் பாதிக்கப்படும் பகுதிகளுக்காக பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

8. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் 1977-78ஆம் ஆண்டு முதல் அரசு செயற்படுத்தி வருகிறது. சென்னைப் பெருநகரம் படிப்படியாக செவ்வனே வளர்ச்சிபெறத் திட்டமிடுவதற்கு என சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுமம் மிகப் பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இப்போது மாநகர்ப்புற வெளி நகரங்களையும் புதிய நகரங்களையும் திட்டமிட்டு உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும் சென்னைப் பெருநகரப்பகுதிக்குள் பெருந்திட்டம், பகுதி திட்டங்கள் ஆகிய வற்றையும் வகுத்து வருகிறது. அன்றியும், குடிநீர் வழங்கல், சாலைப்போக்குவரத்து, குடிசைப்பகுதி மாற்றுத் திட்டங்கள் சமூக ஆதரவுத் திட்டங்கள் ஆகிய பல்வேறு துறைத் திட்டங்களையும் உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக வகுத்தும் ஒருங்கிணைத்தும் வருகிறது. இந்தத் திட்டத்திற்கென 1979–80ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 14.05 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. இப்போது நடைபெற்று வருகின்ற பல்வேறு திட்டங்களின் இன்றியமையாக் கூறுகள் பற்றிக் கீழே விளக்கி உரைக்கப்படுகிறது.

பகுதி வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டம், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு உரிய பெருந் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள திட்டச் செயல் முறையின்படி பெருநகர் பகுதிகளை வளர்க்கத் துணை புரிகிறது. தொடக்கத்தில் மணலி புறவெளி நகரையும் மறைமலை நகர் என்னும் புதிய நகரையும் (துணை நகரம்) உருவாக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மணலியில் 198 ஹெக்டேர் பரப்பில் குடியிருப்புத் தொகுதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதுகாறும் 543 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அவை தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் தகுதிவாய்ந்த பிறருக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் 300 வீடுகளைக் கட்டுவதற்கான இரண்டாவது திட்டம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. மறைமலை நகர் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள புதிய நகர் ஆகும். இதன் பரப்பளவு 1,600 ஹெக்டேர்கள். இங்கு ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு உரிய வகையில் புதிய நகரம் உருவாக்கப்பட்டு வருகிறது. குடியிருப்புத் தொகுதி களுக்கான 100 ஹெக்டேர் பரப்பிலும் தொழிற்சாலை பகுதிகளுக்கான் 120 ஹெக்டேர் பரப்பிலும் இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதுகாறும் 305 வீட்டு மனைகளும் 18 தொழிற்சாலை மனைகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு வீட்டு வசதி நகர்ப் பகுதி வளர்ச்சிக் கழகம் நிதி உதவி வழங்குகிறது. அதன் துணை கொண்டு குறைந்த வருமானத் தொகுதியினருக்கு 144 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பெருந்திட்டமும் பகுதி வளர்ச்சித் திட்டமும்.

இந்தத் தலைப்பின் கீழ் வரும் திட்டத்தில். பெருந் திட்டத்தைச் செயல்படுத்துவது சென்னை பெருநகர்ப் பகுதிக்கு குறிப்பாக சென்னை மாநகருக்கு அதன் பல்வேறு பகுதி களுக்குரிய விரிவான வளர்ச்சித் திட்டங்களை வகுப்பது ஆகியன அடங்கும். இத்தகைய விரிவான திட்டமிடுதலின் பொருட்டு சென்னை மாநகரம் 99 திட்டப் பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளது. அவற்றில் இதுகாறும் 38 பகுதிகளுக்குரிய விரிவான வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவை தயாரிப்பின் பல்வேறு நிலைகளில் உள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இத்தகைய வளர்ச்சித் திட்டங்களை தயாரிப் பதறகாக மேலும் 20 பகுதிகளை அறிவிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளன.

சிறப்புத் திட்டங்கள்.

அ. புதிய மொத்த விற்பனை அங்காடி கோயம்பேடு.

மைய வணிக மாவட்டமான சென்னையில் மக்கள் நெருக்கடியையும், போக்குவரத்து நெரிசலையும் போக்குவதற்கு கோயம்பேட்டில் சுமார் 120 ஹெக்டேர் பரப்பளவில் சுமார் 3,000 கடைகளுக்கு இடவசதி அளிக்கக்கூடிய புதிய மொத்த விற்பனை அங்காடி ஒன்றை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளில் முடிக்கப் படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஜார்ஜ்டவுனில் தற்போதுள்ள கொத்தவால் சாவடிக்கும், துணிக்கடைகளுக்கும் இந்த அங்காடியில் இடவசதி அளிக்கப்படும். இத்திட்டத்தைத் திறம்பட நிறைவேற்றுவது குறித்து கண்காணிக்கவும் ஆலோசனை நல்கவும் அலுவலர்களையும் சம்பந்தப்பட்ட வர்த்தக முகவரமைப்புகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. வடிவமைப்புகளின் வரை படங்களைத் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆ. மாநகரப்புற எல்லையில் அமையும், புறநகர் பேருந்து நிலையங்கள்.

பேருந்துப் பணிகளைத் திறம்பட நடத்துவதற்கு வகை செய்யவும், மாநகரின் மத்தியில் உள்ள நெரிசலைத் தவிர்க்கவும் மாநகர்களுக்கு இடையிலான மூன்று போக்குவரத்து வழித் தடயங்களிலும் உள்வட்டச்சாலையை நெருங்கியுள்ள முனைகளில் மூன்று துணைப்பேருந்து நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்காக, நிலத்தைக் கையகப்படுத்துதல் நடை பெற்று வருகிறது.

இ. சென்னை மாநகருக்கு வரும் சரக்கு வண்டிகளின் பயணமுனை நிலையங்கள்.

சென்னை மாநகருக்கு வெளியே செல்லக் கூடியதும் சென்னை மாநகரின் எல்லைப்குதியில் செல்லக் கூடியதுமான ஒவ்வொரு போக்குவரத்துச் சாலையிலும், சென்னை மாநகரில், சரக்கு வண்டிகளின் பயணமுனை நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் தற்போது போடப்பட்டுவரும் உள்வட்ட சாலையோடு இணைக்கப்படும்

1979 மார்ச் 12]

சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்.

10. சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு நன்மை அளிப்பதற்கான இத்திட்டத்திற்கு உலக வங்கி 21.6 கோடி ரூபாய் கடனுதவி மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது. மத்திய அரசு இத்தொகையை மாநில அரசுக்கு வழங்குகிறது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 46.80 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கான மொத்த செலவில் 50 சதவீதத்தை தமிழ்நாடு அரசு தனது நிதியிலிருந்து செலவிடுகிறது. மனைகள் அவை தொடர்பான பணிகள், குடிசைப் பகுதிகள் மேம்பாடு, சமூகப் பணிகள் ம்க்கள் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து ஆகிய இவற்றில் கணிசமான அளவிற்கு முதலீடு செய்ய இத்திட்டம் விழைகிறது. சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் தொடங்குவதின் மூலம் வேலை வாய்ப்பினை உயர்த்தலும் இந்தத் திட்டத்தில் அடங்கி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு தொழில்களினால் 4,000 வேலை வாய்ப்புகள் உண்டாக்கப்படும். குடிசைத் தொழில்களினால் 5,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். மாநில அரசின் பணி நிறைவேற்று முகவரைப்புகள் மூலம் இத்திட்டத்தை செயல்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருவதைக் கண்காணிக்கவும் உரிய பொருப்பைச் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் மாற்று வாரியம், நெடுஞ்சாலை—கிராமப் பணிகள் துறை, சென்னை மாநகராட்சி, சமூக நலத்துறை பல்லவன் போக்குவரத்துக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னைப் பெருநகர் நீர் வழங்கு—வடிகால் வாரியம் ஆகிய இவையே இத்திட்டத்தை நிறைவேற்றும் முகவரமைப்புகள் ஆகும்.

11. விரைவாக வளர்ந்துவரும் சென்னைப் பெருநகர் பகுதியிலுளள மக்களுக்ரு மிகச்சிறந்த வாழ்க்கை வசதிகள், வேலை வாய்ப்பு வசதிகள். போக்குவரத்து வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றுக்கு வகை செய்வதே இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும்,

நகராட்சி நிர்வாகம்.

12. 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 4-வது பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதன் மூலம் எந்த ஒரு பகுதியையும் நகராட்சியாக அரசு அமைக்கலாம் நகராட்சிகளை, சிறப்பு நிலை நகராட்சிகள்' தேர்வு நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகள் இரண்டாவது

நிலை நகராட்சிகள், மூன்றாவது நிலை நகராட்சிகள் என வகைப்படுத்துவதற்காக, அரசு பின்வரும் கோட்பாடுகளை வரையறுத்துள்ளது.

நகராட்சிகளின் தொடர் எண்ணும் நிலைமையும்.		சாதாரணப் பொதுக் கணக்கின் கீழ் கிடைக்கப் பெறும் சாதாரண ஆண்டு வருவாய்.	கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிலும் எல்லாக் கணக்குகளின் கீழும் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய்.
(1)		(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்)	
1.	சிறப்பு நிலை	50-ம் அதற்கு மேலும்	75-ம் அதற்கு மேலும்
2.	தேர்வு நிலை	25 ,,	50 ..
3.	முதல் நிலை	10 ,,	15 ,,
4.	இரண்டாவது நிலை ..	5 ,,	7 .,
5.	மூன்றாவது நிலை ..	2 ,,	3 .,

13. மேற்சொன்ன சட்டத்தின் 4-ஏ பிரிவின்கீழ் அரசு நகராட்சி எதனையும் அல்லது அங்குள்ள குறிப்பிட்ட தகுதி எதனையும், அது தொழிற்சாலை இருப்பிடமாக, தொழிலாளர் வாழுமிடமாக அல்லது கல்வி, கலை, ஆய்வுக்கூடங்கள் நிறைந்த முறைப்படி அமைந்த பகுதியாக அல்லது சுகாதார விழைவிடமாக இருப்பின் அதனை நகரியம் என்று அறிவிக்கலாம்.

14. கீழே குறிப்பிட்டவாறு, தற்போது எட்டு நகரியங்கள் உட்பட 107 நகராட்சிகள் உள்ளன :—

தனி நிலை	4
தேர்வு நிலை..	13
முதல் நிலை	30
இரண்டாவது நிலை.. ..	36
மூன்றாவது நிலை	24
மொத்தம் ..	107

1979 மார்ச் 23]

1978-ல் கீழ்க்காணும் நகராட்சிகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன :—

1.	வேலூர்	தனி நிலை.
2.	மேட்டூர் நகரியம்.. ..	தேர்வு நிலை.
2.	நாகர்கோவில்	தேர்வு நிலை.
4.	மேட்டுப்பாளையம் ..	1-வது நிலை.
5.	திருவாரூர்	1-வது நிலை.
6,	மன்னார்குடி	1-வது நிலை,
7.	சிவகாசி	1-வது நிலை.
8.	பொன்மலை	2-வது நிலை.
9.	ராணிப்பேட்டை.. ..	2-வது நிலை.
10.	தேவக்கோட்டை	2-வது நிலை.
11.	சங்கரன்கோயில்	2-வது நிலை.

15. கீழே குறிப்பிட்டவாறு, கீழ்க்காணும் நகராட்சிகளை நிலை உயர்த்துவது குறித்த செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

1. கரூர் (1-வது நிலையிலிருந்து தேர்வு நிலைக்கு மாற்றப் படுதல்).

2. ஆலந்தூர் (2-வது நிலையிலிருந்கு 1-ம் நிலைக்கு மாற்றப்படுதல்).

3. அருப்புக்கோட்டை (2-வது நிலையிலிருந்து 1-வது நிலைக்கு மாற்றப்படுதல்).

4. திருவள்ளூர் (3-வது நிலையிலிருந்து 2-வது நிலைக்கு மாற்றப்படுதல்).

5. சீர்காழி (3-வது நிலையிலிருந்து 2-வது நிலைக்கு மாற்றப்படுதல்.)

16. மாநில நகராட்சிகளின் ஆய்வாளருக்கு உதவியாக நகராட்சிகளின் இணை ஆய்வாளர், நகராட்சிகளின் வட்டார ஆய்வாளர்கள் ஐந்து பேர் ஆகியோர் உள்ளனர், இவர்கள் நகராட்சிகளின் முறையான நிர்வாகத்திற்குப் பொறுப்புடையவராவர். நகராட்சிகளின் ஆய்வாளர் தனி, தேர்வு நிலை நகராட்சிகளை ஆய்வு செய்கிறார். நகராட்சிகளின் வட்டார ஆய்வாளர் முதல் நிலை, இரண்டாவது நிலை, மூன்றாவது லை நகராட்சிகளை ஆய்வு செய்கின்றனர், நகராட்சிகள்

[1979 மார்ச் 23

ஆய்வாளரின் தலைமையிடம் சென்னையில் உள்ளது. நகராட்சிகளின் வட்டார ஆய்வாளர்களது அதிகார வரம்பும் தலைமை இடங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

வட்டாரம்.	தலைமை யிடங்கள்.	அதிகார வரம்பு.
(1)	(2)	(3)
நகராட்சிகளின் வட்டார ஆய்வாளர்கள் :		
அ. சேலம்	சேலம் ..	சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள்,
ஆ. மதுரை ..	மதுரை ..	மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்கள்.
இ. திருநெல்வேலி ..	திருநெல்வேலி	திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள்.
ஈ. தஞ்சாவூர் ..	தஞ்சாவூர் ..	தஞ்சாவூர், தென்னார்காடு மாவட்டங்கள்.
உ. சென்னை.	வேலூர் ..	செங்கல்பட்டு, வடஆற்காடு தர்மபுரி மாவட்டங்கள்.

17. நகராட்சி நிர்வாகத்தைத் திறமையுடன் நடத்தும் பொருட்டு, நகராட்சி ஆணையாளர்களுக்கும் நகராட்சிப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கென்று பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது இந்த நிறுவனம் அமைப்பதற்கான தொடக்க ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டுத் தனி அதிகாரி ஒருவரை அரசு நியமித்து உள்ளது.

பேரூராட்சிகளை 3-வது நிலை நகராட்சிகளாக மாற்றுதல் :

18. பேரூராட்சியின் ஆண்டு வருமானம், பொது-சாதாரணக் கணக்கு என்பதன் கீழ் ரூ. 2 இலட்சத்துக்கு அதிகமானாலும், சென்ற ஆண்டுகளில் உள்ள எல்லாவகைக் கணக்குகளின் கீழ் ரூ. 3 இலட்சத்திற்கு அதிகமானாலும் அப்பேரூராட்சி 3-வது நிலை நகராட்சியாக, நிலை உயர்த்தப்படலாம் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டில், வடாற்காடு மாவட்டத்தில் திருவத்திபுரம், சேலம் மாவட்டத்தில் குமாரபாளையம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானி, மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் ஆகிய இடங்கள் 3-வது நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

[1979 மார்ச் 23]

19. கீழ்காணும் பேரூராட்சிகளை 3–வது நிலை நகராட்சிகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

1. உசிலம்பட்டி.
2. கீழக்கரை,
3. கள்ளக்குறிச்சி.
4. திருத்துறைப்பூண்டி.
5. கூடலூர்.
6. அரியலூர்.
7. திருக்கோயிலூர்.
8. அம்பாசமுத்திரம்.

நகர் அமைப்புத் திட்டத்திற்கான கடன் வசதிகள்.

20. நகர—ஊரமைப்பு இயக்குநர், ஒவ்வோராண்டும் நகர அமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான கடன் வசதிகளைப் பெறும் பொருட்டு, நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவை அனுப்பும் விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்பி வைக்கிறார். அக்கடன் தொகை 20 ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும். அவ்வாறு கடன் பெற்ற, நாளிலிருந்து ஆறு திங்களுக்குள் அக்கடன் தொகையைப் பயன்படுத்த வேண்டும். மாநில கணக்குத் துறைத் தலைவர் கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படுவதைக் கண்காணித்து வருகிறார். நடப்பு ஆண்டில் நகராட்சிகளுக்கு ரூ. 6 இலட்சம் கடன் வழங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசு பரிசீலனையில் உள்ளன.

நகராட்சித் தேர்தல்கள்.

21. மாநிலத்தில் நகராட்சிகளுக்கான பொதுத் தேர்தல்கள் கடைசியாக 1969 ஏப்ரலில் நடைபெற்றன. நகராட்சி மன்றங்களின் தலைவர்கள், மன்றங்களின் பணிகளை 1976 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் நிறைவேற்றும் பொருட்டு, அந்நகராட்சி மன்றங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போதுள்ள தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் முடிவடையும். நகராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெற உள்ளன. நகராட்சி மன்றத் தலைவர், நகராட்சியிலுள்ள வாக்காளர்கள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்படுவார். சட்டமன்றத்திலும் பொது மக்களிடமிருந்தும் பல வேண்டுகோள்கள் வந்ததன் பேரில் நகராட்சித் தலைவருக்கான தேர்தலில், அரிசனங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பழங்குடியினர், மகளிர் உறுப்பினர்களுக்கு சில இடங்களை ஒதுக்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. இச் செயற்குறிப்புகள் குறித்து முடிவு செய்யவும், அவற்றை நகராட்சி தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் செயலாக்குவதிலும் அரசு ஆர்வமாயுள்ளது. 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் வாக்குரிமை வயதடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதென அந்த நாளை அறிவித்து அதன்படி நகராட்சிகளின் வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு 1978-ல் வெளியிடப்பட்டன. இந்த ஆண்டில் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னதாக, 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்று வாக்குரிமை பெற்ற வயதடைந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. மேற்கூறிய பணிகள் முடிவடைந்தவுடன், நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டில் நடைபெறும்.

நகர நீர் வழங்கும் திட்டங்கள்.

22. 1978-79 ஆம் ஆண்டில், 39 நகராட்சிகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்களைச் செயற்படுத்தின. 1978-79 ஆம் ஆண்டில் 20 நகரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 4 நகராட்சிகளில் புதிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

23. கோயம்புத்தூர் மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறையை நீக்க சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரளா மாநிலத்தில் முத்துக்குளம் என்னும் இடத்தில் அணை கட்டும் பணி முன்னேற்றத்திலுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்குள் கோயம்புத்தூருக்கு குடிதண்ணீர் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 3.46 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. அணை கட்டுமானப்பணிகள் முடிவடைய 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 4·87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் நிதியினைக் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் மற்றும் குறிச்சி குடிநீர் வழங்கும் திட்டங்களும், மதுரை மாநகரத்தின் வட பகுதியில் குடிநீர் வழங்கும் முன்னேற்றத் திட்டமும் செயல்படுத்தப்படுகின்றன.

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

24. சென்னைப் பெருநகர் பகுதியில் குடிநீர் வழங்குதல், மற்றும் கழிவுநீர் அகற்றுதல் பற்றி தனியே ஒரு அமைப்பு தேவை. இவைகளுக்காகும் மூலதனச் செலவுகளையும், நடைமுறைச் செலவுகளையும் கட்டுப்படுத்தவும் ஒரு நிறுவனம் தேவை. வருகின்ற ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் மிகப் பெரிய

1979 மார்ச் 23]

அடிப்படைத் திட்டங்களுக்குத் தேவையான நிதியினையும், மேற்பார்வைத் தன்மையினையும் கருத்தில் கொண்டு, 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசு சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தினை, சட்ட அடிப்படையில் அமைத்தது. தாமிரப்பாக்கம் கிணற்றுப் பகுதியிலிருந்து, வட சென்னைப் பகுதிகளுக்கு அதிக அளவிலான குடிநீரை வழங்குவதெற்கென ஒரு திட்டத்தை ரூபாய் 121.00 இலட்சம் செலவில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1978 ஆம் ஆண்டு ஊரூர் கிணறுகளிலிருந்து தென் சென்னைப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கென் ரூபாய் 1.3 இலட்சம் செலவில் மற்றொரு திட்டத்திற்கும் அரசு ஒப்புதலளித்தது. சென்னை மாநகரிலுள்ள 73 குடிசைப் பகுதிகளில் குடிநீர் வழங்குதலை உயர்த்த ரூபாய் 29.12 இலட்சம் செலவிலான திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வேலைகள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1978–79 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1979–80 ஆம் ஆண்டில் இப்பணிகள் நிறைவேறும். சென்னை மாநகரில் குடிநீர் வழங்குதலையும், கழிவுநீர் அகற்றுதலையும், உயர்த்த நீண்ட காலத் திட்டமாக உலக வங்கியின் உதவியுடன் ரூபாய் 954.00 இலட்சம் செலவில் ஒரு வேலைத் திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மதிப்பீட்டுச் செலவில், அரசு ரூபாய் 364.00 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

25. சென்னை மாநகரில் குடிநீர் வழங்குவதற்காக அண்மையில் அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளினால், நகரம் 19 எம். எல். டி. அளவுள்ள அதிக குடிநீரைப் பெறும். நீண்ட காலத் திட்டமாக கிருஷ்ணா பெண்ணாற்று பகுதிகளிலிருந்து 5 டி.எம்.சி தண்ணீரைக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகளையும் அரசு ஆய்ந்து வருகிறது. தமிழக அரசும் ஆந்திர அரசும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு தேவையான அலுவலர்களை நியமித்துள்ளன.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras 8

20 DEC 1979 TAMIL NADU

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company 20. Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90. Amman Sannathi Madurai-1.

IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications. Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service. Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286. B. B. Ganguli Street, Calcutta-17

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS